



# வறட்சிப் பகுதிகளில் முதல்வர்

தமிழகத்தின் சில மாவட்டங்களில் பருவ மழை பொய்த்ததன் விளைவாக வறட்சிநிலை நிலவி வருவதைக் கண்டறிய மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும் சுற்றுப்பயணம் மேற் கொண்டார்கள்.

வறட்சிப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

தமிழரசு மலர்.11 இதழ்.18 16.3.1981 பங்குனி 3 ரௌத்திரி திருவள்ளுவர் ஆண்டு 2012



பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதோடு வறட்சியைச் சமாளிக்க 'போர்க் கால' வேகத்தில் துரிதப்பணிகள் நடந்திட ஆணைகளையும் பிறப்பித்தார்.

''கடும் வறட்சிக் காரணமாக கிணறுகளிலும் குளங்களிலும் தண்ணீர் இன்றி வற்றிப் போயிருப்பதைப் பார்த்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகவும் வேதனை அடைந்தார். குடிதண்ணீர் கிடைக்காமல் அவதியுறும் மக்களுக்குக் குடிதண்ணீர் கிடைக்க ஆவன செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆணையும் பிறப்பித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 9.3.81, 10.3.81 ஆகிய இரண்டு நாட்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட வடஆர்க்காடு, தர்மபுரி மாவட்டங்களில் பல்வேறு இடங்களுக்குச் சென்று உண்மை நிலையைக் கண்டறிந்தார்.

### முதல்கட்டப்பயணம்

காவேரிப்பாக்கம் ஏரிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்று பார்த்தபோது ஏரி வறண்டு கிடந்தது. பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கும் ஏரியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏரிக்கரையில் நடந்தவாறே பார்வையிட்டார்.

நிலத்தடித் தண்ணீர் நிலவரம் இப்பகுதியில் எவ்வாறு உள்ளது எனக் கேட்டறிந்தார். பெருமளவில் திரண்டிருந்த மக்களிடம் கருத்துக்களையும் குறைகளையும் கேட்டறிந்தார். பிறகு கீழ்வீராணம் கிராமம் சென்றார். அங்கு வேலைக்கு உணவுத்திட்டப் பணிகளைப் பார்வையிட்டார். ஆழ்கிணறு தோண்டப்படும் வேலையைப் பார்வையிட்டார்.

### குறைகளைக் களைவோம்

''உங்கள் குறைகளைப் போக்கிஅனைத்து ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்யத் தவறாது'' என்று மக்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதி கூறினார்கள்.



## திருச்செங்கோடு வட்டாரத்தில் தீவிரவளர்ச்சிப் பணிகள்

சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டாரத்திற்குச் சிறுசேமிப்பு வசூலில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.6 இலட்சம். இதுவரை சுமார் ரூ. 6½ இலட்சம், வசூல் செய்து, இலக்கினை மிஞ்சியுள்ளனர்.

குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 340. இதுவரை 104 பேர்கள் (தாய்மார்கள்) குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர்.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் திருச்செங்கோடு வட்டாரத்தில் வளர்ச்சிப் பணிகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. 1979-'80 ஆம் ஆண்டில் ஐந்து வகையான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இணைப்புச் சாலைகள் இத்திட்டத்தின் கீழ் 16 பணிகள் ரூ. 2,20,000/- நிதி ஒதுக்கீட்டில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் ரூ. 1,68,398/- செலவில் 12 பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

பள்ளிக் கட்டடங்கள் ஒரு இலட்ச ரூபாய் ஒதுக்கீட்டில் 6 பள்ளிக் கட்டடப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் ரூ. 90,378/- செலவில் 3 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

சிறுபாசனப் பணி ரூ. 5 ஆயிரம் ஒதுக்கீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டது.

ஆயிரம் ரூபாய் ஒதுக்கீட்டில் ஒரு பொதுக் கழிப்பிடம் கட்டப்பட்டது.

ரூ. 20-ஆயிரம் செலவில் தாய் சேய் நலவிடுதி ஒன்று கட்டும் பணியினை 1980-81ஆம் ஆண்டுப் பணியில் சேர்க்கப்பட்டது.

1980-81ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிகள் செய்திடும் வகையில் ரூ. 19,54,410/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 86 பணிகள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் இதுவரை 6 பணிகள் செய்து முடிக்கப்பட்டு, மீதியுள்ள பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. அனைத்தும் 31.3.81க்குள் முடிவு பெறும்.



வாணாபுரம், சோளிங்கர், வள்ளிமலை, திருவலம் ஆகிய ஊர்களைச் சுற்றியுள்ள குக் கிராமங்களுக்குக் கடுமையான வெயிலைக்கூட பொருட்படுத்தாமல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்று வறட்சி நிலைமைகளைக் கண்டறிந்தார்.

பிறகு திமிரி, புதுப்பேட்டை, ஆரணி, ராணிப்பேட்டை, சேத்துப்பட்டு ஆகிய இடங்களுக்குச் சென்றார். தருமபுரி மாவட்டத்தில் புலியனூர், சிங்காரப்பேட்டை, ஊத்தங்கரை, மத்தூர், போச்சம்பள்ளி, கிருஷ்ணாபுரம், ருமத்தூர், தருமபுரி, தொப்பூர் அதியமான் கோட்டை, நல்லம்பள்ளி, மிட்டப்பள்ளி, சாமல்பட்டி ஆகிய இடங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்றார்.

நிவாரணப் பணிகள் நிறைவேறிட அதிகாரிகள் மாத்திரம் அல்லாமல் பொதுமக்களும் ஒத்துழைப்புத்தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு பேட்டியில் கூறியதாவது:—

வறட்சி நிவாரணப்பணிகளுக்குத் தேவையான அரிசி, நிதியுதவி ஆகியவை பற்றிய நமது கோரிக்கையை மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு அனுப்பியிருக்கிறது. உரிய உதவிகளை மத்திய அரசு செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

வறட்சி நிவாரணப் பகுதிகளுக்காக முன்பு ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்போது மேலும் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் போர்க்கால அடிப்படையில் நிவாரண வேலைகள் நடைபெறுகின்றன.

தேவைப்பட்ட இடங்களில் எல்லாம் குழாய்க் கிணறுகளுக்கும், கைப் பம்புகளுக்கும் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். கிராமப் பகுதிகளில் வேலைக்கு உணவுத்திட்டத்தையும் தன்னிறைவுத் திட்டத்தையும் விரைவாகச் செயல்படுத்துமாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள வறட்சி நிலைமையைக் குறித்து விரிவான அறிக்கை ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

வறட்சி நிலையைச் சமாளிக்கவும், வறட்சிப்பகுதி மக்களுக்கு வேறு வழிகளில் அடிப்படை வசதிகள் கிடைக்கவும் ஆன வறட்சி நிவாரணப் பணிகளில் தமிழக அரசு அதிக முனைப்புக் காட்டி போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகின்றது.

—தொகுப்பு ஜெ. ஆனந்தன்

## கல்வி, மக்கள் நல்வாழ்வு குடும்ப நலம் குறித்த மாதிரி ஆய்வு

தமிழ்நாடு அரசின் புள்ளியியல் துறை, மத்திய அரசின் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்துடன் பங்கேற்று அரசாங்கம் மிக அதிக அளவில் செலவிடுகின்ற கல்வி, சுகாதாரம், குடும்பநலம் போன்றவைகளால் மக்கள் பயனடையும் தன்மை, அளவு ஆகிய விவரங்கள் சேகரிக்கும் ஆய்வைத் துவக்கியுள்ளது. இவற்றுடன் அரசு மற்றும் கூட்டுறவு சார்பற்ற கட்டடங்கள், சாலை, பாலம் போன்ற கட்டுமான விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

புள்ளியியல் துறையின் சிறப்புப் பயிற்சி பெற்ற பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்ட சில கிராம, நகர்ப்புறங்களில் ஆய்வு செய்ய மிக விரைவில் வருவார்கள். சேகரிக்கப்படும் விவரங்கள் சமுதாயம் முழுமைக்கும் பயன்தரும் திட்டங்கள் தீட்டுவதற்காக அரசுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும். விவரங்கள் கொடுக்கும் தனிநபர் அடையாளம், எந்தச் சூழ்நிலையிலும் வெளியிடப்படமாட்டாது.

புள்ளியியல் துறைப் பணியாளர்கள் விவரங்களைச் சேகரிக்க வரும் போது நம்பகமான விவரங்களைக் குறித்த காலத்தில் கொடுக்குமாறு புள்ளியியல் ஆணையர் பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறார்.

இந்த ஆய்வின் வெற்றிக்கு அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டப்படுகிறது.




மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
**எஸ். டி. சோமசுந்தரம்**

**1980-81** ஆம் ஆண்டில் தென்மேற்கு, வடகிழக்குப் பருவமழை பல இடங்களில் குறைவாகவே பெய்துள்ளது. வடஆர்க்காடு, புதுக்கோட்டை, தருமபுரி, தென்ஆர்க்காடு, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், மதுரை, செங்கல்பட்டு, பெரியார் மாவட்டங்கள் முழுமையாகவோ அல்லது பகுதிகளிலோ மழைக் குறைவினால் பாதிக்கப் பட்டுள்ளன. கிராமங்களில் குடிநீர்த் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது. வேலை வாய்ப்புகள் குறைந்துள்ளன.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்கு நிலைமையை விளக்கித் தங்கள் அறிக்கை களை அனுப்பி, தேவையான நிவாரணப் பணி களுக்கு நிதி அனுமதியைக் கோரியிருந்தார் கள். அரசும் அவற்றை உடனடியாகப் பரி சீலித்து, ஆணைகளை அவ்வப்பொழுது வெளி யிட்டுள்ளது. முக்கியமாக குடிநீர்த் தட்டுப் பாட்டைத் தீர்க்கும் பணி, தலையாயப் பணி யாகக் கருதப்பட்டது. புதிய ஆழ் கிணறுகள் தோண்டவும், ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும் நகராட்சி மன்றப் பகுதி களில் தாற்காலிகத் திட்டங்களைப் போட்டு குடிநீர் வசதியைக் கூடுதலாக்கவும், முதற்கட் டமாகப் பல்வேறு மாவட்டங்களுக்கு ரூபாய் 439.77 இலட்சத்திற்கு அரசு பின்வருமாறு நிதி வழங்கியுள்ளது:—

| | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. வடஆர்க்காடு | ... | 115.00 |
| 2. இராமநாதபுரம் | ... | 50.00 |
| 3. தருமபுரி | ... | 30.00 |
| 4. திருச்சிராப்பள்ளி | ... | 50.00 |
| 5. தென்ஆர்க்காடு | ... | 30.00 |
| 6. தஞ்சாவூர் | ... | 16.23 |
| 7. புதுக்கோட்டை | ... | 63.54 |
| 8. சேலம் | ... | 50.00 |
| 9. மதுரை | ... | 35.00 |
| மொத்தம் | ... | 439.77 |

குடிநீர்ப் பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் துறை, பொதுப்பணித் துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. மற்றும் ஏற்கெனவே நிலத்தடி நீர்ப்பிரிவு அமைத்துள்ள ஆய்வு ஆழ்துளைக் கிணறுகளையும் குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படும் வகையில் குடி நீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைப்பதற் கும், அவற்றில் கைப்பம்புகள் அல்லது தகுதி யான இடங்களில் மோட்டார் பம்புகள் அமைப்பதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புத் திட்டங்கள்.—வறட் சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப் புத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே எடுக்கப்பட் டுள்ள வேலைகளை விரைவுபடுத்தவும், புதிய பணிகளை மேற்கொள்ளவும் ஆணைகள் பிறப் பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் அதி



மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் அலுவலர்களுடன் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், வறட்சி நிவாரணப் பணிகள் பற்றி மதுரையில் விவாதித்தார்.

கப்படியாக தேவையான அரிசியை அவ்வப்போது ஒதுக்குவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

மாவட்டங்கள் பற்றிய விவரமான தகவல்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன:—

(அ) வடஆர்க்காடு மாவட்டம்:—வடஆர்க்காடு மாவட்டத்தில் 1980-ஆம் ஆண்டு பெய்த மழையளவு சராசரி மழையளவைவிட பாதிக்கும் குறைவாக இருந்தது. காவிரிப்பாக்கம் ஏரி உட்பட 2,970 நீர்ப்பாசன நிலைகளும் வறண்டுவிட்டன. எல்லா வட்டங்களிலும், நிலக்கடலை, சோளப் பயிர்கள் காய்ந்துவிட்டன. அரக்கோணம், வந்தவாசி, செய்யார், திருவண்ணாமலை வட்டங்களில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விவசாய வேலைகள் பாதிக்கப்பட்டன. இம்மாவட்டத்தில் வறட்சி நிலை பற்றி மாவட்ட ஆட்சியாளர், குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் ஆகியோருடன் வருவாய் நிர்வாக ஆணையர் கலந்து ஆலோசித்து அரசுக்கு அனுப்பிய பரிந்துரைகளை அரசு ஆய்வு செய்து, குடிநீர் வசதிக்காக 5.1.81 அன்று கீழ்க்கண்ட பணிகளை நிறைவேற்ற ஆணையிட்டுள்ளது:

(அ) நகர மற்றும் ஊர்ப்புறங்களில் 700 குழாய்க் கிணறுகளை ரூ. 105 இலட்சம் செலவில் அமைக்க—

(ஆ) பாலாறு தண்ணீர் விநியோகத் திட்ட மேம்பாட்டு வேலைக்காக ரூ. 10 இலட்சம் செலவிட; இத்துடன்—

(இ) தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பளிக்கக்கூடியவகையில் ஏற்கெனவே நடைபெற்று வரும் வேலைகளை முடிக்கவும், புதிய வேலைகளை மேற்கொள்ளவும் 7,000 டன் அரிசியை ஒதுக்கியும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர்களின் விளைச்சல் 37 காசுக்கும் குறைவாக (50 சதவீதம்) விளைந்த நிலங்களுக்கு நிலவரி, உள்ளூர் வரி, தண்ணீர்த் தீர்வை, தனித் தண்ணீர்த் தீர்வை, பணப் பயிர் தீர்வை தள்ளுபடி செய்தும், ஒருவருக்குச் சொந்தமான நிலங்களில் பாதிக்குமேல் (50 சதவீதம்) நிலவரித் தள்ளுபடி செய்யத் தகுதி உள்ளதாக இருந்தால் அவர்களுக்கு அரசுக் கடன், நிலவரி, உள்ளூர் வரி, நிலுவைகள் வசூலை அடுத்த ஆண்டிற்கு ஒத்திவைத்தும் 26.12.1980 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தென்னார்க்காடு மாவட்டம்:—இம்மாவட்டத்தில் 1980-ஆம் ஆண்டில் பருவமழை சாதாரணமாக பெய்ய வேண்டிய அளவுக்கு 59 சதவீதமே பெய்துள்ளது. காவிரி மேட்டூர் நீர்ப்பாசனப் பகுதிகளில் நிலவரம் திருப்திகரமாக உள்ளது. விருத்தாச்சலம் அணைக்கட்டு, மேமாத்தூர் அணைக்கட்டு, எல்லிஸ் அணைக்கட்டு, பேலான்துறை அணைக்கட்டு, திருக்கோயிலூர் அணைக்கட்டு, சேர்னாலூர் அணைக்கட்டு, மணிமுத்தாறு நதி, கோமுகி நதி, வீடூர் திட்டங்களிலும் போதுமான அளவு தண்ணீர் வரத்து இல்லாததால் விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர், உளுந்தூர்ப்பேட்டை, விழுப்புரம் வட்டங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 2,093 மானாவாரி குளங்களும் தண்ணீர் இல்லாமல் வறண்டு விட்டன. ஆயினும் இம்

மாவட்டத்தில் சுமார் 91,704 பாசனக் கிணறுகள் உள்ளதால் அவற்றைப் பயன்படுத்தி ஓரளவுக்குப் பாசன ஆயக்கட்டுகளிலும், புன்செய் நிலங்களிலும் விவசாயம் செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மொத்தம் உள்ள 2,285 கிராமங்களில் 744 கிராமங்கள் பருவ மழை தவறியதால் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட 744 கிராமங்களிலும், விவசாயத்துக்குத் தகுதியுள்ள 1,29,745 ஏக்கரில் 66,430 ஏக்கர் தரிசாக விடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது.

நிவாரணப்பணிகள் :

பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர் வசதி செய்வதற்காக தற்போது ரூ. 30 இலட்சம் செலவில் புதிய குழாய்க் கிணறுகளை அமைக்க ஆணை 3.2.81 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி தள்ளுபடி செய்வதற்கும், அரசுக்குச் சேரவேண்டிய பாக்கி வசூலை ஒத்திப்போடவும், வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஆணையிட்டதைப் போலவே இம்மாவட்டத்திற்கும் ஆணை, 3.2.81இல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புத் திட்டங்கள்

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழும், ஏற்கெனவே எடுக்கப்பட்ட வேலைகளைத் துரிதப்படுத்துவதோடு பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்குத் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 500 டன் அரிசி கூடுதலாக விடுவிக்கப்பட்டுள்ளது.

(இ) இராமநாதபுரம் மாவட்டம்:—இராமநாதபுரம் மாவட்டத்தில் பருவ மழை சென்ற ஆண்டை விட 30 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளது. இராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டங்களில் சில ஏரி, குளங்கள் தவிர மற்றப் பகுதிகளில் பெரும்பாலும் குளங்களுக்குத் தண்ணீர் வரவில்லை. மொத்தம் 7,332 குளங்களில் 3,603 குளங்களில் தண்ணீரே வரவில்லை. மீதமுள்ள குளங்களிலும் 216 குளங்கள் தவிர மற்ற குளங்களில் விவசாயத்துக்குப் போதுமான தண்ணீர் வரவில்லை. இதனால் விவசாய வேலைகள் மிகவும் பாதிக்கப்பட்டு பயிர்கள் காய்ந்துவிட்டன.

குடிதண்ணீர்

கிராமங்களில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. புதிய ஆழ்கிணறுகள் தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்தவும் அரசு இம்மாவட்டத்திற்கு ரூ. 50 இலட்சத்துக்கு 27.1.81 அன்று வெளியிட்ட ஆணையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரித் தள்ளுபடி செய்வதற்கும், அரசுக்குச் சேர வேண்டிய பாக்கி வசூலை ஒத்திப் போடவும், வடஆர்க்காடு மாவட்டத்திற்கு ஆணையிட்டதைப் போலவே இம்மாவட்டத்திற்கும் ஆணை 27.1.81 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடக்கும் பணிகளைத் துரிதப்படுத்தவும், பருவ மழை தவறியதால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிய பணிகளை ஆரம்பித்தும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிப்பதற்கும் 2,000 டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) திருச்சிராப்பள்ளி மாவட்டம்:—சென்ற ஆண்டை விட மழை 30 சதவீதம் குறைவு. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரி நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் பயிர்களின் நிலைமை நன்றாக உள்ளது. மானாவாரி குளங்களில் பெரும்பாலும் தண்ணீர் இல்லை. ஆகவே, மானாவாரி குளங்களில் ஆயக்கட்டுகளில் 95 சதவீதம் நிலங்கள் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளன. கிணற்றுப்பாசன நிலங்களில் ஆங்காங்கே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் :

குடிதண்ணீர் பொறுத்தவரையில் தற்போது இது ஒரு பெரும் பிரச்சினையாக இல்லை என்றாலும், கிணறுகளில் நீர்மட்டத்தில் நிலை குறைந்து கொண்டே போவதால் இம்மாதக் கடைசிக்குப் பின் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது.

நிவாரணங்கள் :

500 இடங்களில் ஆழ்கிணறுகள் தோண்டவும், 500 இடங்களில் கிணறுகளை ஆழப்படுத்தவும், ரூபாய் 50 இலட்சம் வழங்க 24.1.81 அன்று அரசு ஆணையிட்டுள்ளது.

நிலவரித் தள்ளுபடி சம்பந்தமாக பொதுவான ஆணை பிறப்பிக்கப்படாவிட்டாலும், மானாவாரி குளங்களின் ஆயக்கட்டுகள் சம்பந்தப்பட்ட வரை ஆங்காங்கே பயிர்களின் விளைச்சலைப் பார்வையிட்டு தகுதி வாய்ந்த நிலங்களுக்கு மட்டும் நிலவரித் தள்ளுபடி அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வறட்சிப் பகுதிகளில் வரி தள்ளுபடி

தமிழ்நாட்டில் மொத்தம் பதினோரு மாவட்டங்களில் வறட்சி நிலவுகிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட வடஆர்க்காடு, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தென்ஆர்க்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மொத்த விளைச்சல் 50 சதவிகிதத்திற்கு குறைந்து போன இடங்களில் அதைப் பொறுத்த வரையில் 'வரி' அறவே தள்ளுபடி செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இது தவிர, விவசாயக் கடன் வசூல், கூட்டுறவுக் கடன் வசூல் அல்லது தவணைக் கடன்களை வசூலிப்பது ஆகியவற்றையும் நிறுத்தி வைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(உ) தருமபுரி மாவட்டம்:—தருமபுரி மாவட்டத்தில் பருவமழை வழக்கமாகப் பெய்வதைவிட பாதியளவுக்கும் குறைவாகப் பெய்துள்ளது. இதனால் இம்மாவட்டத்தில் மானாவாரி குளங்களில் தண்ணீர் போதுமான அளவு வரவில்லை. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விட முடியாததால் மேற்படி நீர்த்தேக்க ஆயக்கட்டுப் பகுதிகளில் முதல் போகம் சுமார் 9,000 ஏக்கர்களில் விளையவில்லை. அதேபோல் சுமார் 4,000 ஏக்கர் ஆயக்கட்டைக் கொண்ட பாரூர் ஏரியில் தண்ணீர் வராததால் அதில் இரண்டாம் போகம் விளையவில்லை. இந்நிலையில் பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

குடி தண்ணீர் பொறுத்தவரையில் குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ. 15 இலட்சமும், கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 15 இலட்சமும் செலவிட 24.1.81 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்ப்பிரிவு அமைத்துள்ள 100 குழாய்களுக்கும் கைப்பம்புகள் பொருத்தி, உடனடியாகக் குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புப் பணிகள்—கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேலைகளைத் துரிதப்படுத்தவும், புதிய பணிகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு 1950 டன் அரிசி அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஊ) புதுக்கோட்டை மாவட்டம்:—புதுக்கோட்டை மாவட்டத்தில் பருவமழை வெகுக் குறைவாகவே பெய்துள்ளது. இதனால் மேட்டூர் நீர்ப்பாசனப் பகுதி நீங்கலாக மற்ற இடங்களில் பயிர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.




குடிதண்ணீர்ப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக 64 புதிய குழாய்க் கிணறுகளைத் தோண்டவும், 201 கிணறுகளில் ஆழ் குழாய்களை அமைக்கவும், 267 கிணறுகளை ஆழப்படுத்தவும் ரூ. 17.54 இலட்சம் செலவினத்துக்கு அரசு 25.11.80இல் அனுமதி அளித்துள்ளது. மேலும் 70 குடிநீர்த் திட்டத்திற்காகவும், 32 குழாய்க் கிணறுகள் அமைக்கவும் ரூ. 38 இலட்சமும், புதுக்கோட்டை நகராட்சிக்குக் குடிதண்ணீர் விநியோகம் வசதி செய்வதற்காக ரூ.8 இலட்சமும் செலவிட 17.2.81இல் உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரித் தள்ளுபடி செய்வதற்கும், அரசுக்குச் சேர வேண்டிய பாக்கி வசூலை ஒத்திப்போடவும் வடஆர்க்காடு மாவட்டத்திற்கு ஆணையிட்டது போலவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(எ) தஞ்சாவூர் மாவட்டம்:—இவ்வாண்டில் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் போதுமான அளவு தண்ணீர் இருந்ததால், இம்மாவட்டத்தில் எல்லாப் பகுதிகளிலும் நல்ல மகசூலுடன் சுமார் 4.11 இலட்சம் ஏக்கராவில் குறுவை நெல் அறுவடை செய்யப்பட்டது. 1980 செப்டம்பர் முதல் வாரத்திலிருந்து சம்பா நடவு ஆரம்பமாயிற்று, மேட்டூர் தேக்கத்தில் தண்ணீர் போதுமான அளவில் இருந்ததால், விவசாயிகள் சாகுபடியை முழுவேகத்தில் செய்வதற்கு உதவியது. விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும் வடகிழக்குப் பருவமழை தேவையான அளவு பொழியாததாலும், கடந்த ஆண்டைவிட பருவமழை மிகக் குறைந்த அளவு இருந்ததாலும், குறிப்பாக பட்டுக்கோட்டை, பேராவூரணி, ஒரத்தநாடு மற்றும் தஞ்சாவூர் வட்டங்களில் காவிரி-மேட்டூர் பாசனப் பகுதி நீங்கலான, பிற நீர்ப்பாசனமில்லாத புன்செய் நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மற்றும் ஒரத்தநாடு வட்டங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கும் ரூ. 16.23 இலட்சம் செலவினத்துக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஏ) செங்கல்பட்டு மாவட்டம்:—செங்கல்பட்டு மாவட்டத்தில் 1980-ஆம் ஆண்டு பருவமழை குறைவாகவே பெய்தது. கடலோரப் பகுதியான, செங்கல்பட்டு, மதுராந்தகம், பொன்னேரி வட்டங்களிலும், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் ஒரு பகுதியிலும் பருவமழை காலத்தாமதமாக நவம்பரில்தான் பெய்துள்ளது. இம்மாவட்டத்தின் மேற்குப் பகுதியான காஞ்சிபுரம், திருவள்ளூர் கோட்டங்களில் பெய்த மழையளவு மிகவும் குறைவு. ஆகவே விளைச்சல் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளது.

**குடிதண்ணீர்**

திருத்தணி, பள்ளிப்பட்டு, ஸ்ரீபெரும்புதூர் வட்டங்களைப் பொறுத்தவரை குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் விரிவான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் நிதி அனுமதி

கோரியுள்ளார். இதுபற்றி விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும். குடிநீர்த் தட்டுப்பாடின்றி கிராமங்களில் கிடைக்க வழிவகைகள் செய்யப்படும்.

(ஐ) மதுரை மாவட்டம்:—மதுரை மாவட்டத்தில் சென்ற ஆண்டை விட மழையளவு 35 சதவீதம் குறைவாகவே பெய்துள்ளது. அதனால் பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. பாதகமான பருவ நிலையினால் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய நிலை உள்ளது. எனவே, வரும் மாதங்களில் ஏற்படக்கூடிய குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்குப் புதிய குழாய்க்கிணறுகளை அமைப்பதற்கு ரூ. 20 இலட்சமும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு ரூ. 15 இலட்சமும் அரசு அனுமதித்துள்ளது.

(ஒ) சேலம் மாவட்டம்:—மழைக்குறைவினால் இம்மாவட்டத்திலும், பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. குடிதண்ணீர் கிணறுகளில் தண்ணீர் மட்டம் இறங்கி வருவதால் வரும் மாதங்களில் ஏற்படக்கூடிய தண்ணீர்த் தட்டுப்பாட்டை சமாளிப்பதற்கும் புதிய ஆழ்கிணறுகளை அமைக்க ரூ. 40 இலட்சமும்,ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப் படுத்த ரூபாய் 10 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 50 இலட்சம் அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்புத் தரக்கூடியப் பணிகளை தேசியக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தீவிரப் படுத்துவதற்கு 3,000 டன் அரிசியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஓ) பெரியார் மாவட்டம்:—இம்மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை 1980-ஆம் ஆண்டில் 34 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளது. மழை குறைவின் காரணமாக, மானாவாரி பயிர்களின் விளைச்சல் சென்ற ஆண்டை விட 40 முதல் 50 சதவீதம் குறைவாகவே எதிர்பார்க்கப்படுகிறது. மார்ச் கடைசி வரை மழை இல்லை என்றால் தாளவாடி, நம்பியூர், பெருந்துறை, ஊத்துக்குளி, அம்மாப் பேட்டை, அந்தியூர், மொடக்குறிச்சி,கொடுமுடி, சென்னிமலை, காங்கேயம், வெள்ளக் கோவில் மற்றும் தாராபுரம் ஒன்றியங்கள் மேலும் பாதிக்கப்படும். தண்ணீர்த் தட்டுப் பாட்டினைத் தவிர்க்க புதிய குழாய்க் கிணறுகள் அமைக்கவும், கிணறுகளை ஆழப்படுத்தவும் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஔ) திருநெல்வேலி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள்:—இம்மாவட்டங்களில் பாதகமான நிலை நிலவுவதாக அறிக்கைகள் வரவில்லை.

(அஅ) கன்னியாகுமரி மாவட்டம்:—இம் மாவட்டத்தில், மழையளவு சராசரி மழை அளவைவிட 20 சதவீதம் குறைவாக உள்ளது. குடிநீர்த் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக இல்லை. 18 இடங்களில் கிணறுகளை ஆழப் படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஆகவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத் தீர்க்கும் வகையில் அரசு எல்லாவிதப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. மேலும், பணிகளை விரைவுபடுத்தவும், நிர்வாக ரீதியில் தேவையான ஆணைகளை அவ்வப்பொழுது பிறப்பிப்பதற்கும், தலைமைச் செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் 2.2.1981 அன்று ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அதையொட்டி அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. வறட்சி நிவாரணப் பணிகளின் முன்னேற்றத்தை 23.2.81-ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் கலந்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், துறைகளுக்கும் அறிவுரைகள் வழங்கப்படும்.

மாவட்டங்களின் வறட்சி நிலைமையை அரசு கூர்மையாகக் கவனித்து வருகிறது. ஆட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு தேவையான நிதிக்கும், வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான அரிசிக்கும் அனுமதி வழங்கி வருகிறது. மேலும் தேவைப்படும் அளவிற்கு இப்பணிகளை விரிவாக்க அரசு என்றும் தயங்காது.

(3-3-81 அன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்ட அறிக்கை)

சட்டமன்றப் பேரவையில் 3.3.81, 4.3.81 ஆகிய இரண்டு நாட்களும் தமிழ்நாட்டில் பருவ மழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சிநிலை மீதான விவாதத்திற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 4.3.1981 அன்று அளித்த பதிலுரை :

**1980-81**ம் ஆண்டில் தென்மேற்கு, வடகிழக்குப் பருவமழை தவறியதன் காரணமாக தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வட ஆர்க்காடு, புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், மதுரை போன்ற மாவட்டங்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மழை குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் வறட்சி நிலைமை-நிவாரணப்பணிகள் பற்றி 3.3.81 அன்று சட்டப் பேரவையில் 75 உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள்.

பெரும்பாலான உறுப்பினர்கள், ஒரே மாதிரியான கருத்துக்களையே தெரிவித்துள்ளார்கள். ஆகையால் 75 உறுப்பினர்களுடைய பேச்சுக்கும் தனித்தனியாகப் பதில் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். பொதுவாக உறுப்பினர்கள் அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ளார்கள்.

நான் இந்தப் பேரவையில் தெரிவித்துக் கொள்வேன். உரிய காலத்தில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தர விட்டுள்ளார்கள். அதன் காரணமாகத்தான், எல்லா மாவட்டங்களிலும், குடிநீர்ப் பற்றாக் குறையை நீக்குகிற வேலைகள் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன.

(தொடர்ச்சி 41 ஆம் பக்கம்)

# படமும் செய்தியும்



சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற அனைத்திந்திய முப்பதாவது காவல் துறையினர் விளையாட்டு விழா நிறைவு நாளன்று பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசுகள் வழங்கினார் (28-2-81).




இந்திய செஞ்சிலுவைச் சங்கம் தமிழ்நாடு பிரிவின் வைரவிழா, கிண்டியிலுள்ள கவர்னர் மாளிகையில் சிறப்புற நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநரின் துணைவியார் திருமதி சாந்திசாதிக் அலி அவர்கள் தலைமையேற்று உரை நிகழ்த்தினார் (2-3-81).

கோட்டயம் சென்றிருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, அங்குள்ள தமிழ் மன்றத்தின் சார்பில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது (21-1-81).



சென்னை வந்த நெதர்லாந்து இளவரசர், மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார் (2-3-81).





வாணியம்பாடி அருகே நடைபெற்ற ரயில் விபத்தில் படுகாயங்களோடு உயிர்பிழைத்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோரைச் சந்தித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆறுதல் கூறினார் (11-2-81).

சென்னைக்கு வருகை தந்த நெதர்லாந்து இளவரசரை மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் விமான நிலையத்தில் வரவேற்றார் (1-3-81).





சென்னையில் நடந்த காசநோய்த் தடுப்பு வார விழாவில் – கல்லூரி, மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்க்கு நடத்தப் பெற்ற கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் திரு. எச். வி. ஹண்டே அவர்கள்பரிசுகள் வழங்கினார் (26-2-81).

# நூற்றாண்டு காணும் சென்னைத் துறைமுகம்

கடைசி அட்டை சொல்லும் கட்டுரை

மாஅழலன்

**திரை கடலோடித் திரவியம் தேடியவர்கள் நமது முன்னோர்கள். கடல் கடந்த நாடுகளை தமிழ் மன்னர்கள் வென்ற வரலாற்றைக் கல்வெட்டுகளாலும் இலக்கியங்களாலும் அறிகின்றோம். நம் நாட்டு நறுமணப் பொருள்களும் முத்தும் பவழமும் யானைத் தந்தமும் நாவாயில் ஏற்றப்பட்டு உலக வணிகச் சந்தைகளில் விற்பனையாகியதை வரலாற்றில் படிக்கின்றோம்.**

**பண்டைய காலந்தொட்டு கடல் வாணிபம் நமக்குப் பழக்கப்பட்டது என்றாலும் ஆங்கிலேயர்கள் கிழக்கிந்தியக் கம்பெனிகள் மூலம் வாணிபத்தைத் தொடங்கியபொழுது, பத்தொன்பதாம் நூற்றாண்டில் கடல் வாணிபம், பெருமளவில் வளர்ந்தது. கால வளர்ச்சிக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட கப்பல்கள் துறைமுகங்களில் தங்க வசதிகள் உருவாக்கப்பட்டன.**

**நம்நாட்டில் கல்கத்தா பம்பாய் துறைமுகங்கள் நூற்றாண்டு விழா கண்டவை ஆகும். இவ்வாண்டு சென்னைத் துறைமுகம் நூற்றாண்டு விழா காணுகிறது.**

ஆண்டுதோறும் ஏறத்தாழ ஆயிரம் கப்பல்கள் வந்துபோகும் சென்னைத் துறைமுகம், நம்நாட்டிலேயே ஆழமான துறைமுகம் ஆகும்.

நாட்டின் பெரியதொரு செயற்கைத் துறைமுகமாக விளங்கும் சென்னைத் துறைமுகம், இந்த ஆண்டு நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிறது.

கிழக்கு இந்தியக் கம்பெனி மூலம் வாணிபம் செய்ய சென்னைக்கு வந்த ஆங்கிலேயர்கள் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டி வாணிபத்தில் ஈடுபட்ட பிறகு கடல் வாணிபம் வளர்ந்தது.

கடல் வாணிபம் வளர வளர சென்னையில் துறைமுகம் உருவாகும் நிலையும் வளரத்தொடங்கியது.

அக்காலத்தில் தற்போதைய சுங்க அலுவலகத்தின் எதிரில் சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவில் 6 மீட்டர் ஆழமான பகுதியில் கப்பல்களை நிறுத்தி அங்கிருந்து கரைக்கும், கரையிலிருந்து கப்பலுக்கும் ''மசுலா பகடு'' எனப்படும் கலங்களால் சரக்குகளை அனுப்பினார்கள்.

*1796-ஆம் ஆண்டில் 100அடி உயரமுள்ள இரும்பினாலான கலங்கரை விளக்கம் ஒன்றை கோட்டையில் அமைத்தார்கள். அது தேங்காய் எண்ணெய்யினால் எரிக்கப்பட்ட 12 விளக்குகளைக் கொண்டது.*

ஆண்டுகள் செல்லச் செல்ல சென்னைக்கு வரக்கூடிய கப்பல்களின் எண்ணிக்கையும், எடுத்தாளப்பெற்ற சரக்குகளின் அளவும் பெருகின. நாட்டுப் படகுகளினால் திறந்த கரையில் சரக்குகளை இறக்குவது இடர்ப்பாடாகவும், இழப்பளிப்பதாகவும் இருந்தது.

*1861ல் கரையிலிருந்து 1100 அடி தொலைவில் கிழக்காக, அலைகள் பகுதிக்கு அப்பால் வரையில் ஒரு பாலம் அமைத்து அதன் முனையில் கப்பலை நிறுத்தி கப்பலிலிருந்து கரைக்கு சரக்குகளைக் கொண்டுவரத் தொடங்கினார்கள். முனையில் 30 அடி ஆழம் கொண்ட இந்த மேடையினால் சுமார் 3,04,000 டன் எடையுள்ளனவும், 1868-ஆம் ஆண்டின் மதிப்பில் சுமார் 3 கோடி ரூபாய் பெறுமானமுள்ளதுமான சரக்குகள் எடுத்தாளப்பெற்றன. அப்பொழுது இப்பகுதியின் கடல் வாணிபத்தில் முக்கியமான பகுதியாக சென்னை அமைந்துவிட்டது. சென்னை வணிகக் கழகம் தனது*





1868ஆம் ஆண்டில், வளர்ந்து வரும் வாணிபத் தேவைக்கேற்ப சென்னையில் ஒரு துறைமுகத்தைக் கட்டுவதற்குத் தக்கமுயற்சி எடுக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டது.

பல ஆய்வுகளுக்குப் பிறகு, மேல் கிழக்காக சுமார் 3,000 அடி இடைவெளியில் இரண்டு தடுப்புச் சுவர்கள், நீண்ட சதுரமான இடைவெளியையும், கிழக்கில் சுமார் 550 அடி நுழைவாயிலில் உள்ளதுமான ஒரு துறைமுகத்தைக் கட்டுவதற்குத் திட்டம் தீட்டப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி 1875ஆம்ஆண்டு டிசம்பர் 15ஆம் நாள், துறைமுகத் தொடக்க வேலையை முன்னிட்டு கடற்கரைச்சாலையின் கிழ்ப்புறத்தில், இப்பொழுது சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் முன்னால் மேன்மை தங்கிய வேல்ஸ் இளவரசர் (பின்னர் ஏழாம் எட்வர்ட் அரசர்) அவர்களால் ஒரு நினைவுக் கல் நாட்டப்பட்டது. 1861ஆம் ஆண்டில் வேலை சற்றேறக்குறைய முடிவடைந்துவிட்டது. இந்த ஆண்டில் தான் துறைமுகம் உருப்பெற்றது. 1.1.1881 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட ஒரு பெரும் புயலினால் தடுப்புச் சுவர்கள் மிகவும் சேதமடைந்தன. பழுது பார்க்கும் பணியில் ஏற்பட்ட பலவிதமான கருத்து வேறுபாடுகள் காரணமாக தாமதம் ஏற்பட்டு பிறகு வேலை தொடங்கி 1896ல் தான் பழுது பார்க்கும் வேலை முடிக்கப்பட்டது. 1886ல் சென்னை துறைமுகச் சட்டத்தின் மூலம் சென்னைத் துறைமுகத்தின் சொத்துக்களும், நிருவாகமும் துறைமுகப் பொறுப்புக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

துறைமுகத்தின் கிழக்கு நுழைவாயில் அலைகளைத் தடுத்து நிறுத்தாததாலும், அதிக அளவில் மணல் உள்ளே வருவதாலும் நுழைவாயில் தூர்க்கப்பட்டு கப்பல் நுழைவதற்குத் தகுதியற்றதாய் ஆகிக் கொண்டு இருந்தது.

ஆகவே, கிழக்கு நுழைவாயிலை மூடிவிடவும், கிழக்குத் தடுப்புச் சுவரை வடக்கே நீட்டி துறைமுகத்தின் வடகிழக்கு மூலையில் ஒரு நுழைவாயில் ஏற்படுத்தவும் திட்டம் வகுக்கப்பட்டது. இந்த வேலைகள் 1905ஆம் ஆண்டிற்கும் 1910ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் முடிக்கப்பட்டன. அதே சமயம் மேற்கே கப்பல்களை நிறுத்துவதற்கான கப்பல் துறைகளும் அமைக்கப்பட்டன.

''மதராஸ்'' என்ற பெயருள்ள தூர்வாரிக் கப்பல் 1904 ஆம் ஆண்டில் மணல் தூர் வாருவதற்காக வாங்கப்பட்டது. முதல் உலகப் போருக்கு முன்பாகவே சென்னைத் துறைமுகம் வளர்ச்சியடைந்து உலகத் துறைமுகங்களில் ஒன்றாக எண்ணப்படும் மதிப்பைப் பெற்றுவிட்டது. அப்பொழுது ஆண்டுதோறும் ஏறத்தாழ 10 இலட்சம் டன்கள் எடுத்தாளப்பெற்றன. இச்சாதனைக்குக் காரணமாய் இருந்தவர் சர் பிரான்சிஸ் ஸ்பிரிங்க் என்னும் பொறியாளராவார். 1904-ஆம் ஆண்டிலிருந்து 1919ஆம் ஆண்டுவரை இந்தத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவராகவும், தலைமைப் பொறியாளராகவும் இருந்தவர் இவர். இவர் காலத்தில் துறைமுகம்







பெரும் வளர்ச்சி அடைந்தது. 1930க்கும் 1935க்கும் இடைப்பட்ட காலத்தில் தெற்குப் பகுதியில் இரண்டும் வடக்கே ஒன்றுமாக மூன்று கப்பல் துறைகள் கட்டப்பட்டன.

தின் முக்கியத்துவத்தை உணர்ந்த குழு, தெற்குப்பகுதியின் தேவைக்காக இத்துறைமுகத்தில் பெரிய அளவில் விரிவுபடுத்துவதற்கான திட்டத்தைப் பரிந்துரைத்தது. இதனால் தெற்குப் புறத்தில் கப்

நிறுத்தும் துறைகளின் எண்ணிக்கையிலும், துறைமுகத்தில் சரக்கையெடுத்தாளும் இயந்திரங்களை நவீனமாக்குவதிலும் மிகவும் அதிகமான வளர்ச்சியை அடைந்தது.



இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பிறகு, சென்னைத் துறைமுகம் ஒன்பது கப்பல்களை நிறுத்துவதற்கேற்ற துறைகளுடன் நாட்டின் கிழக்குக் கரையில் ஒரு முக்கிய துறைமுகமாகத் திகழ்ந்தது. 1951-52ஆம் ஆண்டில் ஏறத்தாழ இருபத்திரண்டு இலட்சம் டன் சரக்குகள் எடுத்தாளப் பெற்றன. போருக்குப் பிறகு ஏற்பட்ட வளர்ச்சித் திட்டங்களாலும் ஐந்தாண்டுத் திட்டங்களாலும், சென்னைத்துறைமுகத்தின் வழியே எடுத்தாளப் பெற்ற சரக்குகளின் அளவு அதிகரித்ததால் சென்னைத் துறை

பல் நிறுத்தும் புதியதொரு துறையைக் கட்டுவதற்கும், கூவம் நதி வரையிலான துறைமுகத்தின் தெற்குப் பகுதியைக் கையகப் படுத்தவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

''ஜவகர் டாக்கில்'' உள்ள ஆறு துறைகளுடனும், தெற்குப் பகுதியில் சீரமைக்கப்பட்ட இரண்டு துறைகளுடனும் மூன்று புதிய தளங்கள் அமைக்கப்பட்டதனால் மொத்தத் துறைகளின் எண்ணிக்கையானது 18 ஆக உயர்ந்தது. வாணிபத்தின் தேவைக்கேற்ப புதிய மின்சார பளுதூக்கிகளும், 120 டன் எடை தூக்கும் மிதக்கும் பளுதூக்கிகளும் வாங்கப்பட்டன. இரும்புத் தாதுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்குப் பகுதி இயந்



துறைமுகப் பொறுப்புக் கழகம் — அன்று

முகம் பெரும் நெருக்கடிக்கு ஆளாகியது.

இட நெருக்கடியினால் கப்பல்கள் ஆழ்கடலிலேயே தங்க நேரிட்டது. துறைமுகத்திலுள்ள கட்டடங்கள் சரக்குகளினால் நிறைந்து வழிந்தன. அதனால் துறைமுகத்தை விரிவாக்க வேண்டிய தேவை உணரப்பட்டது.

மத்திய அரசு 1945ஆம் ஆண்டில் நாட்டில் உள்ள துறைமுகங்களின் தகுதியையும், அவற்றை விரிவுபடுத்த தேவையான வழிமுறைகளையும் கண்டறிய குழு ஒன்றை அமைத்தது. நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள சென்னைத் துறைமுகத்

பின்னர் ''ஜவகர் டாக்'' என்றழைக்கப்பட்ட கப்பல் நிறுத்தும் துறையின் கட்டுமானப்பணி தெற்குப் பகுதியில் 1958ல் துவக்கப்பட்டு 1964ல் முடிக்கப்பட்டது. 1955க்கும் 1965க்கும் இடைப்பட்ட காலம் கப்பல்

திரமயமான முறையும் ஏற்படுத்தப்பட்டது. வடக்குப் பக்கத்தில் பயணிகளுக்கான வசதியும் ஏற்படுத்தப்பட்டது. இதன் பயனாக 1965ல் துறைமுகத்தின் வழியே

இன்று





எடுத்துச் செல்லப்பட்ட சரக்குகளின் எடை, 1955-ஆம் ஆண்டைப்போல இரண்டு மடங்காக உயர்ந்தது. (44 இலட்சம் டன்கள்). அதன் வருவாயும்1955ஆம் ஆண்டின் வருவாயான ரூ. 132 லட்சத்திலிருந்து மூன்று மடங்கு உயர்ந்து ரூ. 462 இலட்சத்தை எட்டியது. ''காவிரி'' என்ற புதிய தூர்வாரிக் கப்பல் வாங்கப்பட்டு துறைமுகத்தில் மணல் பரவுவதானது மேலும் கட்டுப்படுத்தப்பட்டது. நம்நாட்டின் கிழக்குக் கரையில் ஒரு பருவக் காலத்தில் மணல் தெற்கிலிருந்து வடக்காகவும், மற்றொரு பருவக் காலத்தில் வடக்கிலிருந்து தெற்காகவும் ஊர்ந்து செல்லும் போக்கினால் சென்னைத் துறைமுகத்தைத் திறமையாகக் கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது. இல்லாவிடில் துறைமுகத்தின் பயன்பாடு தடைக்கு உள்ளாகும். துறைமுகத்தின் தூர்வாரிக் கப்பல்கள் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் முப்பது இலட்சம் டன்கள் மணலை வாரி எடுத்து துறைமுகத்திற்கு அப்பால் ஆழ்கடலில் கொட்டிவிடுகின்றன.

திட்டமிட்டு அமைக்கப்பட்ட தண்டையார்ப்பேட்டை குடியிருப்புத் தொழிலாளர் நலன்களைக் கவனிக்க நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவ நிலையம் போன்ற பலதிறப்பட்ட சமூகநலத் திட்டங்களையும் துறைமுகப் பொறுப்புக் கழகம் நிறைவேற்றியது.

மத்திய அரசு சென்னைக்கு அருகில் உள்ள மணலியில் 25 இலட்சம் டன் கச்சா எண்ணெய்யைச் சுத்திகரிக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்ததனால் சென்னைத் துறைமுகம் 14 மீட்டர் (46அடி) ஆழமுள்ள எண்ணெய்க் கப்பல்களை நிறுத்தும் துறையையும், துறைமுகத்திலிருந்து எண்ணெய்யை மணலி சுத்திகரிக்கும் சாலைக்கு குழாய் மூலமாக அனுப்பத் தேவையான நவீன வசதிகளையும் உருவாக்கியது. புதிதாகக் கட்டப்படும் துறைமுகத்திலே எண்ணெய் வாணிகத்திற்குக் கப்பல் நிறுத்தம் துறை அமைக்கத் திட்டமிட்டபோதே, இரும்புத் தாதுக்கள் ஏற்றுமதி செய்யவும் முழு இயந்திரமயமான துறைமுகம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதுவரையில் ஜவகர் டாக்கில் இரும்புத் தாதுக்களைக் கைகளால் இயந்திர உதவியின்றி எடுத்தாண்டு வந்ததால் கப்பல்கள் துறையில் தங்கும் கால அளவும் அதிகமாயிற்று.

இப்பொழுது ''பாரதி டாக்'' எனப்படும் வெளிப்புறத் துறைமுகத்தின் வேலை 1967ல் ஆரம்பிக்கப்பட்டு எண்ணெய்க் கப்பல் நிறுத்தும் துறை 1972ல் உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இங்குதான் சென்னைத் துறைமுகத்திற்குப் பெருமளவு வருவாயைக் கொடுக்கக்கூடிய எண்ணெய்யும், இரும்புத் தாதுப் பொருள்களும் எடுத்தாளப் பெறுகின்றன. இங்கே 88,000 டன் கொள்ளளவு உள்ள எண்ணெய்யை கப்பல்களை நிறுத்தி மணிக்கு 3,000 டன் வீதம் குழாய் மூலம் மணலி சுத்திகரிக்கும் பகுதிக்கு நேரடியாக அனுப்ப முடியும். இந்த பாரதி டாக்கின் மேல்பகுதியில் ஏறத்தாழ 100 ஏக்கர் பரப்பளவுள்ள கடல் பகுதி தூர்ந்து நிலமாக்கப்பட்டது இதில் இரும்புத் தாதுப் பொருட்களை எடுத்தாளக் கூடிய இயந்திரங்கள் நிறுவப்பட்டன. இரும்புத் தாதுக்களை எடுத்தாளும் துறையில் 88,000 டன் கொள்ளளவு உள்ள கப்பல்களை எடுத்தாளவும் மணிக்கு 8,000 டன்வீதம் கப்பலில் ஏற்றவும் முடியும். இங்கே வருங்காலத்தில் 1,50,000 டன் கொள்ளளவு உள்ள கப்பல்களை நிறுத்தவும் ஏற்ற வசதிகளைச் செய்யமுடியும்.

வாகன்களிலிருந்து தாதுப்,





பொருள்களை இறக்குவது, தாதுப் பொருள்களைச் சேர்த்து வைப்பது, இங்கிருந்து நேராகவோ அல்லது வாகன்களிலிருந்தோ, கப்பல்களில் ஏற்றுவது வரையில் உள்ள எல்லாச் செயல்களும் இயந்திரமயமாக்கப்பட்டன. இது 1977ல் செயல்படத் தொடங்கியது. இந்தத் திட்டங்களுக்கான செலவு ரூபாய் 60 கோடியாகும். இந்த பாரதி டாக்கில் மேலும் மூன்று கப்பல் நிறுத்தும் துறைகளை அமைக்கத் தேவையான வாய்ப்பு உள்ளது.

**மீன்பிடித் தொழிலுக்கு**

மீன்பிடி தொழிலின் வளர்ச்சிக்கு மீன் பிடிக்கும் இயந்திரப் படகுகளை எடுத்தாளக்கூடிய நவீன துறைமுகம் இன்றியமையாதது. ஒவ்வொரு பெரிய துறைமுகமும் அதன் பகுதியாக ஒரு மீன்பிடித் துறைமுகத்தை உருவாக்க வேண்டும் என்ற மத்திய அரசின் ஆணையின்படி, சென்னைத் துறைமுகம் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கு துறைமுகத்திற்கு வடக்கே உள்ள பகுதியை எடுத்துக்கொண்டது. 50 சிறிய கப்பல்களையும், 500 இயந்திரப் படகுகளையும் ஒரு ஆண்டில் அவை கொண்டுவரும் 40,000 டன் மீன்களையும் இந்த புதிய துறைமுகம் எடுத்தாளக் கூடியது. இந்தத் துறைமுகம் விரைவில் செயல்படத் தொடங்கும். இதன் கட்டுமானச்செலவு ரூபாய் 11 கோடியாகும்.

முன்பு திறந்த பகுதியாக இருந்த இச்சென்னை துறைமுகம் இன்று மிகப் பெரிய அளவில் விரிவடைந்துள்ளது. துறைமுகத்தை மேலும் மேலும் வளர்க்கும் பணி தொடர்கிறது. பாரதி டாக்கில் ஆண்டு முழுமைக்கும் பாதுகாப்பு அளிக்கவல்ல கருங்கற்களால் ஆகிய ஒரு பாதுகாப்புத் தடுப்புச் சுவர் 7.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுப்பட்டு வருகிறது. வடகிழக்குப் பருவகாலத்தில் உருவாகும் பேரலைகள் துறைமுகத்தின் உள்ளே ஊடுருவி கொந்தளிப்பை உண்டாக்கா வண்ணம் இந்தத் தடுப்புச்சுவர் ஆண்டு முழுமைக்கும் பாரதி டக்கில் உள்ளே அலையற்ற அமைதியை உண்டாக்கும்.



தற்போதுள்ள 1,700 அடி நீளமுள்ள ஜவகர் துறையில் பக்கத்திற்கு மூன்று என்ற முறையில் 500 அடி நீளமுள்ள ஆறு கப்பல்களை நிறுத்த இயலும். ஆனால், 1964ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய் நெருக்கடிக்குப் பிறகு கப்பல்களின் நீளமும், அகலமும் அதிகரித்ததனால் இப்பொழுது ஜவகர் துறையில் பக்கத்திற்கு இரண்டே நீளக் கப்பல்களைத்தான் நிறுத்த முடிகிறது. அதனால் சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஜவகர் டாக்கினை 140 மீட்டர் அளவுக்கு நீட்டிக்க திட்டமிடப்பட்டுள்ளது. திட்டம் அமலாகியபின் இந்தத் துறையை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.

இன்று உலகத் துறைமுகங்களில் சரக்குகளை எடுத்தாளும் முறையில் ஒரு "புரட்சி" நடந்து கொண்டு இருக்கிறது. முன்னால் பல தரப்பட்ட சரக்குகள் தனித்தனியாகவோ அல்லது தனித்தனிப் பெட்டிகளிலோ அனுப்பப்பட்டு வந்தன. அவை இன்று முத்திரையிடப்பட்ட "கன்டெய்னர்" எனப்படும் இரும்புப் பெட்டகங்களில் அடுக்கப்பட்டு அவை ஒரு துறைமுகத்திலிருந்து மற்றொரு துறைமுகத்திற்கு அல்லது அனுப்பவேண்டிய முகவரிக்கு நேரடியாக அனுப்பப்பட்டு, பிறகுவேறு சரக்குகளால் நிரப்பப்பட்டு திரும்பவும் ஆரம்பித்த இடத்திற்கே வருகின்றன. சரக்குகளை எடுத்தாளும் இந்த முறை பல நன்மைகளைப் புரிந்துள்ளது. முத்திரையிடப்பட்ட பெட்டகம் சரக்குகளைத் தட்பவெப்ப மாற்றங்களினால் உண்டாகும் சேதங்களிலிருந்தும், களவு போவதிலிருந்தும் காக்கின்றது. இதனால் கப்பல் நிறுத்தும் துறை 5 அல்லது 6 மடங்கு சரக்குகளை எடுத்தாள முடிகிறது. இவற்றோடு துறையில் கப்பல் தங்கும் கால அளவும் குறைகிறது. சென்னைத் துறைமுகம் விரைவிலேயே இம்முறையை மேற்கொள்ளும்.

ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளின் பொருளாதார சமூகக் குழுவின் நிபுணர், சென்னைத் துறைமுகத்தை இந்த நாட்டில் பெட்டகப் போக்குவரத்துக்கான சிறந்த இடமாக அறிவித்துள்ளார். சுமார் 27 கோடி ரூபாய்





மதிப்பீட்டில் இதற்கான துறை பாரதி டாக் என்னும் பகுதியில் கட்டப்படவிருக்கிறது. இதில் சுமார் 6 இலட்சம் டன் சரக்குகளை 75,000 பெட்டகங்கள் மூலம் எடுத்தாளுவதற்கு ஏற்ற நவீன இயந்திர வசதிகள் சிறப்பான முறையில் அமைக்கப்படும்.



நம் நாட்டின் சென்னைத் துறைமுகத்தில் போதிய அளவு கப்பல்களைப் பழுது பார்க்க ஏற்ற வசதிகள் இல்லை. சென்னைத் துறைமுகத்தில் சிறிய கப்பல்களைப் பழுது பார்க்க 'Slipway' என்று சொல்லப்படும் பழுது பார்க்கும் தளம் சிறு அளவில் உள்ளது. அதனால் துறைமுகத்தின் சொந்த தூர்வாரிக் கப்பல்கள் அவ்வப்போது பழுது பார்க்கப்பட கல்கத்தா " Dry Dock " செல்லவேண்டியுள்ளது. அதனால் காலமும், அவற்றின் பயன்பாடும் வீணாகின்றன. சென்னைத் துறைமுகம் " Boat Basin " என்னும் பகுதியினைச் சீரமைக்கும் பணியினை எடுத்துக் கொண்டுள்ளது. இங்கே சிறிது காலத்தில் நவீனமான " Dry Dock " என்னும் பழுது பார்க்கும் தளம் நமது கப்பல்களையும் வணிகக் கப்பல்களையும் பழுது பார்க்க ஏற்ற நவீன வசதிகளுடன் அமையும்.

சென்னைத் துறைமுகம் தோன்றி இவ்வாண்டுடன் 100 ஆண்டுகள் நிறைவு பெற்று நூற்றாண்டு விழாக் கொண்டாட இருக்கும் இத்தருணத்தில் அது எடுத்தாளும் சரக்குகளின் எடையளவு ஒரு கோடி டன்களுக்கும் அதிகமாகும். இது இந்நாட்டின் வெளிநாட்டு வாணிபத்தில் ஏழில் ஒரு பங்கு என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் பத்து ஆண்டுகளில் இது இரு மடங்காகும் என்று நம்பப்படுகிறது.

நம் நாட்டின் இறக்குமதியாகும் எண்ணெய்யில் பதினைந்து சதவீதத்திற்கு மேல் சென்னை துறைமுகத்தின் வழியே செல்கின்றது. அந்நியச் செலாவணி ஈட்டுபவற்றில் ஒன்றான இரும்புத் தாதுப் பொருட்கள் 11 சதவீதத்திற்குமேல் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. சுமார் ஓர் இலட்சம் டன் எடையுள்ள கருங்கற்கள் 12,000 டன் எடையுள்ள தால், 1 இலட்சம் டன் எடையுள்ள சர்க்கரை 25,000 டன் எடையுள்ள புகையிலை போன்ற அன்னியச் செலாவணி ஈட்டும் சரக்குகள் இங்கே ஆண்டுதோறும் எடுத்தாளப்படுகின்றன. சுமார் 7,00,000 டன் இரசாயன உரம் இங்கு இறக்குமதியாகின்றது. இவை தவிர, இங்கு வேறு பலவிதமான சரக்குகளும் எடுத்தாளப்படுகின்றன.

இப்பொழுது சென்னைத் துறைமுகத்தில் ஏறத்தாழ 13,000 பேர் பணிபுரிகிறார்கள்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏறத்தாழ ரூபாய் 100 கோடி செலவில் இங்குபல திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

நம் நாட்டின்வாணிபத்திற்கும் வளத்திற்கும் வழிவகுக்கபெரும் பொறுப்புடன் பணியாற்றும் துறைமுகங்களில் ஒன்றாகத் திகழ்கிறது சென்னைத் துறைமுகம்.

நாளுக்கு நாள் வளர்ந்து நாட்டின் நல்வாழ்வுக்குத் துணைபுரியும் சென்னைத் துறைமுகம், நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த ஆண்டில் நாமும் நல்வாழ்த்துக்களைக் குவிப்போம்.

"கிராமங்களுக்குச் செல்லுங்கள், கிராம மக்களின் நன்மைக்காக, அவர்களின் வாழ்க்கை நிலை உயர்வதற்காக செயலாற்றுங்கள். அப்போதுதான் நம் தாயகம் சிறந்து விளங்கும்'' என்றார் அண்ணல் காந்தியடிகள்.

கிராமச் சமுதாயம் புதுப் பொலிவுடன் விளங்கவேண்டுமாயின், வாழ்க்கையின் அடிப்படை வசதிகள், சுற்றுப்புற சூழ்ச் நிலை, நல்வாழ்வுப் பணிகள் போன்றவை ஊர்ப்புறங்களில் பன்மடங்கு பெருக வேண்டும்.

தற்போது நகரங்களிலுள்ள வசதிகளை கிராமங்களுக்கும் விரிவாக்கி, இவற்றிற்கிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகள் நீங்கி, சமமான வாய்ப்புகள் மலரும்போதுதான் தமிழ்நாடு புதுமையுடன் விளங்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

# இனி ஒரு விதி செய்வோம்

எச். பி. என்.ஷெட்டி,ஐ.ஏ.எஸ்.,
ஆணையாளர் மற்றும் அரசு செயலர்
ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித்துறை.

முதற்கட்டமாக நிறைவேற்றப்படும் 69 ஒன்றியங்களிலும் நிலையான குடிநீர் வசதி செய்து தருவதை, தமிழ்நாடு அரசு ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு, போர்முனை வேகத்தில் நிறைவேற்றுகிறது.

சேலம் மாவட்டத்திலுள்ள தலைவாசல், கடையாம்பட்டி, கொளத்தூர், திருச்செங்கோடு, நாமகிரிப்பேட்டை ஆகிய 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூ. 209.10 இலட்சம் செலவில் 383 வாழ்விடங்களுக்கு குடிநீர்வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயலாற்றுகிறது.

மேகத்திட்டுகளாகச் சிதறிக் கிடக்கும் பல கிராமங்களை முக்கிய சாலைகளோடு இணைக்க, இணைப்புச் சாலை வேலைகள் 209 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. இவற்றின் காரணமாக 5 ஒன்றிய வாழ் மக்களுக்குநல்ல சாலை வசதிகள் ஏற்பட வழி செய்யப்பட்டுள்ளது.



## சேலம் மாவட்டம்

இவற்றிற்கெல்லாம் வழிகாட்டுவதுதான் ''தன்னிறைவுத் திட்டம்'' என்பதாகும். தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டுவரும் இத்திட்டம் வளர்ச்சித்துறை, பணியாளர்களால் மிக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, முதல் கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 69 ஊராட்சி ஒன்றியங்களில் பற்பல வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

தன்னிறைவுத் திட்டத்தில் 9 சீரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு. ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக, முனைப்புடன் செயலாற்றப்படுகின்றன. குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள், சிறுபாலங்கள், அரிசனக் குடியிருப்புக்களுக்கு மயான சாலை வசதி, பாசன சிறு திட்டங்கள் மேம்பாடு, ஊர்ப்புற மருந்தகங்கள், தாய்-சேய் நல நிலையங்கள், பள்ளிக்கட்டடங்கள், அரிசனக்குடியிருப்புகள் கட்டுதல் ஆகியவை தன்னிறைவுத் திட்டத்தின் சிறப்புக் கூறுகளாகும்.

தவிர, பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தலும், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டுதலும் இத்திட்டத்தோடு இணைந்து நிறைவேற்றப்படுகின்றன.

திட்டத்தில் முதலிடம் வகிப்பது குடிநீர் பற்றியதாகும்.

மழை நாட்களில் சில கிராமங்கள் தனித் தீவுகளாக மாறி விடுவதோடு, மழையால் உருவாகும் நீரோடைகள் சிலவேளைகளில் கிராமங்களை வெளி உலகுடன் தொடர்பு கொள்ள முடியாமல் துண்டித்து விடுகின்றன. எனவே, சிறுபாலங்கள் அமைப்பது அவசியமான, அவசரமான செயல்களில் ஒன்றாகி விடுகிறது. அதற்கிணங்க, 98 சிறுபாலங்கள் தேவையான இடங்களிலெல்லாம் கட்டப்படுகின்றன.

இடுகாட்டிற்கோ, சுடுகாட்டிற்கோ இறந்தவர் உடலை அரி

சன மக்கள் எடுத்துச் செல்லும் வழி, பல ஊர்களில் குறுகலாக— ஒற்றையடிப் பாதையாக அமைந்துள்ளதை நாம் அறிவோம். இம் மக்களின் இன்னலைக் களைவதற்கென, இந்த 5 ஒன்றியங்களில் 41 பாதைகள் இடப்படுகின்றன.

பள்ளிகளுக்காக 46 புதிய கட்டடங்களும், தற்போதுள்ள பள்ளிகளுக்குக் கூடுதலாக 57 கட்டடங்களும் முடிவுறும்போது நம்முடைய மாணவ மணிகள் சிறந்த வசதியான முறையில் கல்வியறிவைப் பெற வகையேற்படுமென்பது உறுதி.

''நோயற்ற வாழ்வே, குறைசெல்வம்''. எனவே, மருந்தகங்கள், தாய்-சேய் நல நிலையங்கள் இத்திட்டத்தில் இன்றியமையா இடம் வகிக்கின்றன. 20 தாய்-சேய் நிலையங்களும், 8 மருந்தகங்களும், கட்டப்பட்டு நல்வாழ்வுப் பணிகள் மேம்படுத்தப்படுகின்றன.

நன்முறையில் பராமரிக்கப்படாததால், பல பாசனக் குளங்கள் பயனற்று விடுகின்றன. ஆகவே, சிறுபாசன மேம்பாட்டிற்கும் தன்னிறைவுத் திட்டம் வகை செய்யத் தவறவில்லை. இதற்கென, 25 இடங்கள் சிறு பாசன வசதிகள் சீரடையும்.

12 இடங்களில் கழிவறைகள் அமைப்பது மட்டுமின்றி 3 ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் வகை செய்யப்படுகின்றன.

இவ்வனைத்துத் திட்டங்களுக்கும், சேலம் மாவட்டத்திலுள்ள 5 ஒன்றியங்களுக்கென்று ரூ. 139.75 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அனேகமாக எல்லா வேலைகளும் முடிவடையும் நிலையில் உள்ளன.

இப்பணிகள் இத்துடன் முடிவதில்லை. சேலம் மாவட்டத்திலுள்ள எஞ்சிய பிற ஒன்றியங்களும் தன்னிறைவுத் திட்டத்தில் பயன்பெற தொடங்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

# பார்த்தோம் படித்தோம்

## திங்கள் இருமுறை தேயாத மதியாகத் தமிழரசு திகழ்கிறது...

'தமிழரசு' அரிய செய்திகளைத் தாங்கி வெளிவருகின்றது. அது அற்புதமான பல விவரங்களைக் கொண்டு திகழ்கின்றது.

—ரெ. சண்முகம் பிள்ளை,
(ஓய்வு பெற்ற மாவட்டப் பதிவாளர்)
தஞ்சாவூர்.

உலகத் தமிழ் மாநாட்டின் பாட்டரங்கக் கவிதைகள் தமிழரசில் இடம் பெறவேண்டும்.

—த.மு.சா. காசாமுகைதீன்,
மேலப்பாளையம்.

என் போன்ற வெளிமாநிலத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு உலகத் தமிழ்மாநாட்டுச் செய்திகளை நேரில் கண்டது போன்று படம்பிடித்துக் காட்டியது தமிழரசு.

—எஸ். செல்லப்பா,
சந்தூர், ஆந்திரா.

மாணவர்களுக்குப் பயன்படும் வகையில், கல்வி சம்பந்தமான கேள்வி-பதில் பகுதி ஒன்றைத் துவக்கலாம்.

—பாபுகுமார்,
சென்னாரெட்டியூர்.

அரசின் பணிகளை அறிந்து கொள்ளும் வகையில் தமிழரசு ஒரு 'ஏடாக' விளங்கி வருகிறது.

—எஸ்.எஸ். மணி,
திருவனந்தபுரம்.

பி.வி. கிரியின் 'உள்ளத்தில் இல்லை ஊனம்' சிறுகதை என் உள்ளத்தைத் தொட்டது.

—ஏ. கே. நாசர்,
லெட்சுமாங்குடி, தஞ்சை.

திங்கள் இருமுறை தேயாத மதியாகத் தமிழரசு திகழ்கிறது. இத்தமிழ் நிலவின் எழுத்தொளியில் அரசுப்பணிகள் ஒளிர்கின்றன; அறிவுப் பரல்கள் மிளிர்கின்றன.

—புலவர் கோமகன்,
வளப்பங்குடி.

டாக்டர் எஸ்.காமேஸ்வரன் எழுதிய 'பேசும்பிள்ளை பேசும்' கட்டுரை மிகவும் அருமை.

—செ. மாசிலாமணி,
திருமழிசை.

—பெ. சு. தியாகராசன்,
அருப்புக்கோட்டை.

குடும்ப நலச் செய்திகள், தகவல்கள் இடம் பெறச்செய்தால் எல்லாருக்கும் நன்மையாக இருக்கும்.

—ஆர். கண்ணன்,
கீழ்க்கண்டனி,
சிவகங்கை.

முதல்வர் அவர்களின் வண்ணப் படத்துடன் வெளிவந்த 1981ஆம் ஆண்டு 'தமிழரசு' காலண்டர் மிக அருமை.

—எம். ஏ. அமீது ராவுத்தர்,
நீலகிரி.

'மாணவர்பக்கம்' தொடர்ந்து வெளிவர வேண்டும்.

—எஸ். புகழேந்தி,
திருவையாறு.

'தோலில் அச்சிடும் புதிய முறை' கட்டுரை அருமையாகவும், புதுமையாகவும் இருந்தது.

—ஐயாறு பு. இளங்கோ,
திருவையாறு.

# தன்னிறைவுப் பாதையில் தமிழகக் கிராமம்



ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் கிராமங்களின் வளமையிலும் நகரங்களின் முன்னேற்றத்திலும் அடங்கி இருக்கிறது. ஆனால் தன் வளமையை, செழிப்பை நகரங்களுடன் பங்கிட்டு வந்த கிராமம் நாளடைவில் தன் வளத்தின் பெரும் பாகத்தை நகரங்களுக்குக் காணிக்கையாக்கி விடவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானதால், கிராமங்களுக்கும் நகரங்களுக்குமிடையே இடைவெளி அதிகரித்து வந்தது. கிராமங்கள் வளர அனைத்துத் துறைகளிலும் அவை தன்னிறைவு பெற வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும் என தமிழக அரசு எண்ணியதன் விளைவே ''தன்னிறைவுத் திட்டம்''

ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு வரும் பல திட்டங்களுடன் ஒப்பிடும்போது இத்திட்டம் தனித்தன்மை வாய்ந்தது என்பது தெளிவாகும். தனிமனிதனின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு அவனை உயர்த்துவதன் மூலம் அத்தனி மனிதர்கள் சார்ந்துள்ள சமுதாயத்தை உயர்த்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட ஒருங்கிய இத்திட்டம் எனலாம். கிராம மக்களின் எல்லாப் பிரிவினருக்கும் நல்வாழ்வு ஏற்படுத்தி அவர்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்ப்பதன் மூலம் சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்யலாம் என்பதே இத்திட்டத்தின் அடிப்படைக் கொள்கை. இதுபோன்ற ஒரு மாபெரும் திட்டம் தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இதற்குமுன் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டுக் கூறியாக வேண்டும்.

தமிழ்நாட்டில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இத்திட்டத்தின் மாபெரும் நோக்கங்களை மொத்தமாக ஒரே வேளையில் நிறைவேற்றி முடிக்க காலம், பணம், பொருள் ஆகியவை மிக அதிகமாகத் தேவை என்பதால் படிப்படியாக இத்திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க இத்திட்டத்தின் முதற்கட்டமாக 69 ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்வொன்றியங்களில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் இவ்வாண்டில் (1980—81) நிறைவேற்

யங்களில் 1981—82 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப் படும். முதற்கட்டமான 69 ஒன்றியங்களில் - இத்திட்டம் 1981 மார்ச் திங்களுக்குள் நிறைவேற்றி முடிக்கப் படும். இது உறுதி.

இத்திட்டத்தின் சிறப்புக் கூறுகள் எவை என்று நோக்குவது அவசியம்.

"நான் செல்லுகின்ற இடமெல்லாம் மக்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை. குடிக்கத் தண்ணீர் - நல்ல தண்ணீர்தான் கேட்கிறார்கள். நாடு விடுதலை பெற்று இத்தனை ஆண்டுகள் முடிவு பெற்றும் இன்னும் நம்மால் நம் மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கூடக் கொடுக்க முடிவதில்லை....முடியவில்லை... தண்ணீருக்காகக் கண்ணீர் வடிக்கும் இந்நிலையைக் களைவதே இவ்வரசின் முதல் பணி" என தான் பதவியேற்ற அன்றே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கிணங்க, இத்திட்டத்தில் குடிநீர் வழங்குத் திட்டம் தலையாய இடம் வகிக்கிறது.

## நவரத்தினம்

இவை மட்டுமின்றி இணைப்புச் சாலைகள், அரிசனக் குடியிருப்புகளுக்கு மயானப் பாதை வசதி, பள்ளிக் கட்டிடம், தாய் சேய் நல விடுதிகள், ஊரக மருந்தகங்கள், சிறு பாலங்கள் ஆகியவை கட்டுதல் மற்றும் அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல், சிறுபாசனத் திட்டங்களை மேம்படுத்துதல் ஆகிய ஒன்பது கூறுகளைக் கொண்டது இத்திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், முதற்கட்டப் பணிகள் நடைபெற்றுவரும் 69 ஒன்றியங்களைச் சார்ந்த 3131 குடியிருப்புகளுக்கு ரூ.2100 இலட்சம் மதிப்பீட்டிலான 'குடிநீர் வழங்கு திட்டங்கள்' நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதில் பல குடியிருப்புகளுக்கு நீர் வழங்கும் பணி முற்றுப் பெற்றுவிட்டது என்னும் செய்தி நமக்கு உவகையைத் தருகிறது.

கிராமங்களின் மிகப் பெரிய இடர்ப்பாடு - அவை, காற்றில் கலைந்த மேகத் திட்டுகளாக-ஒன்றுக்கொன்று எவ்விதத் தொடர்புமின்றிச் சிதறிக் கிடப்பதாம். நகரங்களையும் கிராமங்களையும் இணைக்க உரிய சாலைகள் இல்லாத காரணத்தாலும் கிராமங்கள் தனித்து விடப்பட்டு விடுகின்றன. இதனால் கிராமங்கள் தமக்குரிய வளர்ச்சியை-உரிமையைப் பெற இயலாமல் போய் விடுகின்றது. மழைக் காலங்களில் பல கிராமங்கள் தனித் தனித் தீவுகளாக மாறி விடுகின்றன. இந்த நிலையை அகற்றுவதற்காக இணைப்புச் சாலைகள் திட்டத்துக்கு இங்கே சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 69 ஒன்றியங்களில் மட்டும் ரூபாய் 1221 இலட்ச மதிப்பீட்டில், ஏறத்தாழ 4220 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகள் போடப்பட்டுவருகின்றன. இச்சாலைப் பணி முடிவுறும்போது, விளைபொருட்களை விற்கவோ அல்லது வாங்கவோ - பிற ஊர்களுடன் தொடர்பு கொள்ளவோ கிராம வாசிகளுக்கு எவ்வித இடையூறும் இராது என்பது உறுதி.

அரிசன மக்களுக்குள்ள பல்வேறு பிரச்சினைகளுள் ஒன்று மயானப் பாதை இல்லாமை எனலாம். இடுகாட்டுக்கோ அல்லது சுடுகாட்டுக்கோ இறந்தவர் உடலை அரிசன மக்கள் எடுத்துச் செல்லும் வழிகள் பெரும்பான்மையான இடங்களில் மிகக் குறுகியே கிடக்கின்றன. சில ஊர்களில் இப்பாதை வயல் நடுவே செல்லும் ஒற்றையடி வரப்பாக உள்ளது. அதன் விளைவாக அரிசன மக்கள்





மிகவும் சிரமப்படுகின்றனர். இத்தகைய நிலையை அகற்றுவதற்காக அரிசன மக்களுக்கான மயானப் பாதைகள் சீர்படுத்தப்பட வேண்டும் என்பது இத்திட்டத்தின் இன்றியமையாக் குறிக்கோள். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 69 ஒன்றியங்களில் மட்டும் மொத்தம் 950 கி.மீ. நீளமுள்ள மயானச் சாலைகள் சீர்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கென அரசு ரூ.143 இலட்சம் ஒதுக்கியுள்ளது. தவிர, அரிசனங்களுக்கென்றே 6948 வீடுகள் கட்டித்தரவும் இத்திட்டம் பெருமளவில் வகை செய்கிறது.

'கற்றோரே கண் உடையோர்' என்பது காலத்தின் தீர்ப்பு. கல்விக் கண் திறக்கும் பணியில் தன் பங்கை ஆற்றத் தன்னிறைவுத் திட்டம் மறக்கவில்லை. தற்போதுள்ள பள்ளிக் கட்டிடங்களைத் தவிர, மேலும் 682 புதிய மற்றும் கூடுதல் பள்ளிக் கூடங்கள் ரூ. 290 இலட்ச மதிப்பில் இந்த 69 ஒன்றியங்களில் கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன.

## தாயும் சேயும் நலம்

தாய்மையே பெண்மையின் உயர்நிலை என்றாலும் சொல்ல இயலா அல்லலை அளிப்பதும் அந்நிலைதான். எனவே, தாய் சேய் நல விடுதிகள் கட்டுதலும், ஊரக மருந்தகங்களை ஏற்படுத்துதலும் இத்திட்டத்தின் பிற குறிக்கோள்கள். 69 ஒன்றியங்களில் மொத்தம் 228 தாய்சேய் நல விடுதிகளும், 71 மருந்தகங்களும் கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன. மேலும் மருத்துவ வசதிகளையும் ஊட்டச் சத்துணவுத் திட்டங்களையும் பிற துறைகள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றி வருகின்றன.

'நீரின்றி அமையாது உலகு'. எனவே நீர்நிலைகளைக் காக்கவேண்டியது அரசின் கடமை. நீரை உரிய வழியில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக 2150 சிற்றோடை பாலங்களைக் கட்டும் பணிகளும், 683 சிறு பாசனத் திட்டங்களை மேம்படுத்தும் பணிகளும் 31.3.81க்குள் முடிவு பெற்றுவிடும். வேளாண்மை செழித்தோங்க இவை மேலும் உதவும் என்பது உறுதி.

ஓர் ஊரின் வளர்ச்சிக்கு ஒற்றுமை அவசியம். ஊரில் எதுநடந்தால் நமக்கென்ன என்ற எண்ணம் மக்களிடையே அறவே தோன்றாமல் இருக்கும் நிலையை ஏற்படுத்துவதற்காக, இத்திட்டத்தில் அடங்காமல்-தனியாக





''ஊராட்சி-சமுதாய நிலையங்கள்'' கட்டுவதற்காக ரூ 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் முதற்கட்ட 69 ஒன்றியங்களுக்கும் மொத்த மதிப்பீடு 57.13 கோடி. எஞ்சிய ஒன்றியங்களுக்கான மூன்றாண்டுக் கால அளவிலான மதிப்பீடு ரூ. 270. கோடி. இத்தகைய நிதி ஒதுக்கீட்டிலிருந்து தன்னிறைவுத் திட்டம்'' எவ்வளவு பெரிய, மகத்தான திட்டமென்பதையும், அவற்றால் பெறக்கூடிய எண்ணற்ற நன்மைகளையும் நம்மால் ஊகிக்க முடியுமன்றோ!

இத்திட்டம் குறித்த காலத்தில் குறித்தபடி நிறைவேற்றப்பட்டு முடிக்கப்படவேண்டும் என்பதில் அக்கறை கொண்ட இவ்வரசு இத்திட்ட நிறைவேற்றத்திற்கென 64 கோட்ட உதவிப் பொறியாளர்களை நியமித்துள்ளது. இப்பொறியாளர்கள் முதற்கட்டத் தன்னுறைவுத் திட்ட ஒன்றியங்களில் இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் நிறைவேற்றும் திட்டங்களை இத்திட்டம் நிறைவேற்றம் பற்றிக் களப்பணியாளர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் ஐயப்பாடுகளை உடனடியாக அகற்றவும் அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## ஒளி விளக்கு

முதலில் கூறிய ஒன்பது பணிகளை மட்டுமே உள்ளடக்கியது தன்னிறைவுத் திட்டமென அரசு முதலில் அறிவித்திருந்த போதிலும் இத்திட்டத்திற்குப் பொது மக்களிடமிருந்து கிடைத்துள்ள வரவேற்பைக் கருத்தில் கொண்டு மேலும் சில திட்டங்களை அரசு தற்போது தன்னிறைவுத் திட்டத்தில் இணைத்துச் செயல்படுத்தி வருகின்றது. அத்திட்டங்களுள் ஒன்றுதான் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள 69 ஒன்றியங்களைச் சார்ந்த ஊர்களில், 1980 நவம்பர் முடிய தாழ்த்தப்பட்டோர் வீடுகளுக்கு 15,062 மின் இணைப்புகளும் ஏனையோர் வீடுகளுக்கு 27,227 மின் இணைப்புகளுமாக, மொத்தம் 42,289 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

சுத்தம் சுகம் தரும். சுத்தம் சுற்றுப்புறத் தூய்மையால் அமையும். சமுதாய வாழ்க்கை முறைகள் விரைந்து மாற்றம் பெற்றுவரும் இக்காலக் கட்டத்தில் சுற்றுப்புறத் தூய்மையைக் காப்பதே தொற்றுநோய்களைத் துரத்தி அடிக்கும் வழியாகும். எனவே 69 தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களிலும் ஒன்றியத்திற்கு இரண்டு ஊராட்சிகள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மொத்தம் 138 ஊராட்சிகளில் பெண்களுக்கான கழிப்பிடங்கள், கட்டுவதற்கென ரூ. 8.74 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதுபோன்ற வசதிகள் அனைத்து ஒன்றியங்களிலும் இனிவரும் ஆண்டுகளில் ஏற்படுத்தப்படும். மேலும் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வதால் கிடைக்கும் நன்மைகளைப் பற்றிக் கிராம மக்கள் நன்கு அறிந்து கொள்வதற்கும் நல்வாழ்வுத் துறைப் பணியாளர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் தன்னிறைவுப் பாதையில் இப்போது விரைந்து சென்று கொண்டிருக்கிறது. இத்திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டவுடன் 'தன்னிகரற்ற தமிழகம்' என்ற சிறப்பைத் தமிழ்நாடு பெறும் என்பதில் ஐயமில்லை.

# நூல் நயம்

## மங்கையின் டைரி

(ஆசிரியர் : எஸ். லட்சுமி சுப்பிரமணியம். வெளியீடு : கலைஞன் பதிப்பகம், 54, பாண்டி பஜார், சென்னை-17. விலை : ரூ. 6.)

உடல் நலமில்லையென்றால், மருத்துவரிடம் செல்கிறோம். உடல் நிலை பற்றிச் சொல்கிறோம். சிலர் அந்தரங்கமான விஷயங்களைச் சொல்லத் தயங்குவார்கள்; வெட்கப்படுவார்கள். உடல் நிலை சரிப்பட வேண்டுமானால் எல்லாவற்றையும் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லித்தான் ஆக வேண்டும்.

அந்தரங்கமான விஷயங்கள்—சிக்கல்கள் என்னென்ன என்பதைப் பற்றியெல்லாம் விளக்கி, குறிப்பாகப் பெண்கள் இந்த விஷயத்தில் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதனை மிக அழகாக, விளக்கமாகக் கூறுகிறது இந்நூல்.

பொதுவாக, ஒவ்வொரு குடும்பத்துக்கும் - குறிப்பாகப் பெண்மணிகளுக்குத் துணை புரிகின்ற வகையிலே பல்வேறு மருத்துவக் குறிப்புகளைத் தெளிவுபடக் கூறுகிறார் இந்நூலாசிரியர்.

## அறிவியல் விவரங்களும் கணிதவியல் அட்டவணைகளும்

(தொகுத்தவர் : டாக்டர் ஆ. ரா. காசிலிங்கம். வெளியீடு : உமா பதிப்பகம், 4-ஏ, தென்னோலைக்கார தெரு, தெற்கு மாசி வீதி, மதுரை-625 001. விலை ரூ. 4.)

தமிழில் அறிவியல் நூல்கள் வெளிவருவது குறைவு என்றாலும், அம்மாதிரியான நூல்கள் நிறைய வெளி வருவதற்குத் தூண்டுகோலாக இந்நூல் அமைந்துள்ளது.

சர்வதேச அலகுமுறை, அலகுகளில் அறிவியல், வேதியல் விவரங்கள், கணிதவியல் குறிகள், குறியீடுகள், சூத்திரங்கள், கணிதவியல் அட்டவணைகள் என்று பகுத்துத் தொகுத்துத் தந்துள்ளார் தொகுப்பாளர்.



இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள் இப்பகுதியில் மதிப்புரை செய்யப்பட மாட்டா. —ஆசிரியர்.

## நற்காட்சியின் மாட்சி

(ஆசிரியர்: ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால். வெளியீடு: வேலூர் ஜைன சங்கம், வேலூர்-632 006. விலை ரூ. 2.)

'நற்காட்சி' என்றால் என்ன ?

''நற்காட்சியெனில் 'பகுத்தறிவு' எனப் பொருள்படும். கண்கள் எவ்வாறு புறப்பொருள்களைக் கண்டு இன்னின்னப் பொருட்கள் எனத் தெளிவு பெற அறிவிக்கின்றனவோ, அவ்வாறே பல்வேறு கொள்கைகளைக் கொண்ட நம் அறிவால் ஆய்ந்தறிந்து, நம் அறிவிற்கும் மக்கள் வாழ்க்கைப் பண்பிற்கும் பொருந்தும் மெய்ந் நூல்களைத் தேர்ந்து தெளிவதே நற்காட்சியாகும்'' என்று நூலாசிரியரே இதற்கு விளக்கம் தருகிறார்.

தமிழறிஞரான திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள், இந்நூலில், நற்காட்சியின் இயல்பு, தோற்றக் காலம், தோற்றுவித்தவரின் வரலாறு முதலான விவரங்களைத் தெளிவுபடக் கூறுகின்றார்.

## இரும்பும் உருக்காலைகளும்

ஆசிரியர் :
எஸ். எஸ். இராமசாமி,

வெளியீடு :
ஸ்டார் பிரசுரம்,
72, பெரியதெரு, சென்னை-5

விலை: ரூ. 3-50

'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே, யந்திரங்கள் வகுத்திடுவீரே!' என்று பாடினார் பாரதியார். அதனை மெய்ப்பிக்கின்ற வகையிலே இந்நூல் அமைந்து, அறிவியலின் அற்புதங்களை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

பண்டைக் காலத்தில் இரும்பை உருக்கிய முறை, உருக்கின் உதயம், இந்திய உருக்காலைகள் இப்படிப் பத்து அத்தியாயங்களில் உருக்கின் வரலாற்றை உருவகப்படுத்தி உள்ளத்தில் பதிய வைக்கிறார் ஆசிரியர்.

இரும்பைப் பற்றியதுதான் இந்நூல் என்றாலும், கரும்பாய் இனிக்கின்றதே!

## வரும், அதற்காகவே காத்திருக்கிறோம் !

ஆசிரியர் : ஏவியன்,

வெளியீடு:
சங்கரன் பதிப்பகம்,
22, பெருமாள் கோயில்
மேற்கு மாடவீதி,
சென்னை-600 015

விலை: ரூ. 10—00

தலைப்பே புதுமையாக இருக்கிறதல்லவா? உள்ளேயும் புத்தம் புதிய கவிதைப் பூக்களைப் பார்க்கிறோம், மணம் நுகர்கிறோம். கவிஞரின் புதுப்பார்வையை ரசிக்கிறோம்.

'கற்பனையின் கிடங்குகள் அல்ல கவிதைகள்—அவை நிஜங்களின் நடமாட்டங்கள்' என்று கோடிட்டுக் காட்டி, கவிதைத் தேர் புறப்படுகிறது!

இருண்ட பூமி, என்நாடு என் மக்கள், காதல், விடிவேயில்லாத வானம், பெண்ணுரிமை, நிற்க நிழலில்லை, ஏழைக்குழந்தைகள் முதலான கவிதைகள் நெஞ்சைத் தொடுகின்றன.

'கிரிஜா'



# புதிய இயந்திரத்தின் புதுமைச் சாதனை!

மு. முத்துக்காளத்தி,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம்.

தர்மபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை பாலக்கோட்டில் அமைந்துள்ளது. அங்கிருந்து ஒரு கடிதம், சேலம் செய்தி - மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு வந்தது. ''கரும்பைச் சீவும் 'Cane Fabrizor' என்றதொரு புதுரக இயந்திரத்தை ரூ. 8.31 இலட்சம் செலவில் நாங்கள் அண்மையில் நிறுவியுள்ளோம். அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் இயந்திர வகைகளைப் போன்றது, இது. செய்தியாளர்களை உடன் அழைத்து வருக'' என்று, பாலக்கோடு சர்க்கரை ஆலையின் தனி அலுவலர் திரு. ஏ. வேலுமணி அன்பழைப்பு விடுத்திருந்தார். அனைத்துப் பத்திரிகையாளர்களும் சேலத்திலிருந்து ஆர்வத்துடன் சென்றோம். தர்மபுரி மாவட்டச் சகோதரர்களும் எங்களுடன் சேர்ந்து கொண்டு இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாக்கினர்.

''இந்த இயந்திரம் தென் இந்தியாவில் இதுவே முதலாவது. இந்தியா முழுவதும் எடுத்துக்கொண்டால் ஏற்கெனவே இரண்டு இருக்கின்றன. இது மூன்றாவது. பழைய இயந்திரத்திற்கும் புதிய இயந்திரத்திற்கும் வேறுபாடு என்னவென்றால், கரும்பைச் சீவுவதில் இது மிகத் திறமை வாய்ந்தது. கணுக்களில் தான் ரசம் மிகுதி. பழைய இயந்திரத்தில் அது வெட்டுக்குத் தப்பி விடுவது உண்டு. இந்த இயந்திரம் அப்படி விடுவது இல்லை. மேலும் சீவும் பொழுது அதிக நீளமான சிறு சிறு துணுக்குகளாக்குகிறது. சேதாரம் குறைவு. அதனால் ஆதாயம் மிகுதி. நொடியில் எப்படிப் பொடியாக்குகிறது பாருங்கள்!'' என்று பெருமையுடன் சுட்டிக் காட்டினார் தனி அலுவலர் திரு. ஏ. வேலுமணி.

''சோன்பப்டி' போல, கண்ணிமைக்கும் நேரத்தில் கரும்பைத் தூள் செய்யும் அந்த வித்தை இயந்திரத்தைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தபடி, ''இது வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ததா, தம்நாட்டில் தயாரித்ததா?'' என்று கேட்டேன்.

''நம் நாட்டில் உருவாக்கியது. ஆனால் பல பாகங்கள் வெளிநாட்டிலிருந்து வாங்கியவை. 50 சதவிகிதம் உள்நாட்டுப் பாகங்கள், 50 சதவிகிதம் வெளிநாட்டுப் பாகங்கள் என்று சொல்லலாம். லக்னோவில் உருவாக்கப்பட்டது''.

கரும்பு முற்றம் (cane yard) என்று சொல்லப்படும் ஆலைப் பகுதியில் இருந்து அனைத்து வேலைகளையும் நேரில் பார்ப்பது பரவசமூட்டும் ஒரு வசீகர அனுபவமாகும். சாரை சாரையாகக் கரும்பு ஏற்றிய லாரிகளும் இரட்டை மாட்டு வண்டிகளும் வருகின்றன. லாரிகள் ஒரு புறமும், வண்டிகள் இன்னொரு புறமும் எடை போடப்படுகின்றன. கிரேன் அனாயாசமாக அரை டன் முக்கால் டன் கரும்பை அள்ளியெடுத்து, கன்வேயர் பெல்ட்டில் கொட்டுகிறது. கேன் பைப்ரைசர் நுண்ணிய துகள்களாக, நார் நாராக வெட்டுகிறது. பிறகு அரைவை இயந்திரம் இறுக்கிப் பிழிகிறது. இன்னும் சாறு இருக்குமோ என்று தண்ணீரில் நனையச் செய்து மேலும் பிழிகிறது மற்றொரு இயந்திரம். பிறகு கொதிக்க வைத்து, பாகு செய்து, கழிவுகள் நீக்கி, சர்க்கரையாக மாற்றி எடைபோட்டு நூறு கிலோ மூட்டைகளாகக் கட்டுகிறார்கள். ஒவ்வொரு கட்டத்தையும் அருகில் இருந்து பார்க்கும் பொழுது படிப்பினையும், அந்தப் பணியில் உள்ள நுட்பமும், இயந்திரமும் தொழிலாளர்களும் இணைந்து பணியாற்றும் லாகவமும், இறுதியில் மனித யத்தனம் முற்றுப் பெறும் முத்தாய்ப்புப் பயனும் மனநிறைவு அளிக்கின்றன. யாரும் ஒரு வினாடி ஓயக்காணோம். விழிப்புடன் விறுவிறுப்புடன் பணியாற்றுகின்றனர்.

''கரும்பு வந்தால் 24-36 மணி நேரத்திற்குள் பிழியப்பட்டாக வேண்டும். தாமதம் கூடாது. ஆறப்போட்டால் உலர்ந்து விடும். அரைவைக்கு கரும்பு இல்லாமல் இயந்திரத்தையும் இயக்காமல் இருக்கச் செய்ய முடியாது. ஒரு நாளைக்கு 13,000, 14,000

டன் கரும்பு வருகிறது. அவ்வளவும் அரைத்தாக வேண்டும். அதற்கேற்றவாறு, கரும்பு பயிரிடும் நாளிலிருந்தே, யார் நிலத்திலிருந்து இங்கே எந்தத் தேதிக்குக் கரும்பு வரும் என்று தீர்மானித்து, அதற்கேற்ற வகையில் வேலைத் திட்டம் தயாரித்துக் கொள்கிறோம். அதனால் இங்கே ஆலையில் வேலைச் சுணக்கம் என்பது இல்லை'' என்கிறார் திரு ஏ. வேலுமணி. அறுநூறு, எழுநூறு தொழிலாளர்கள் பணியாற்றும் ஆலையில் அனைவருக்கும் ஒருமித்த இலட்சியப் பிடிப்பு இருப்பதனால் தான் காரியங்கள் தங்கு தடையின்றி நடைபெறுகின்றன.

இங்கே எந்தப் பொருளும் வீணாவது இல்லை. கரும்புச் சக்கையை எரித்து நீராவி தயாரிக்கிறார்கள். அதைக் கொண்டே இயந்திரங்களை இயக்கி 1500 கிலோ வாட் மின் உற்பத்தியும் செய்து கொள்கிறார்கள். கொதி நீர் பயன்பட்டு வெளியே வந்ததும் மீண்டும் அதைக் குளிர வைத்துப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இங்குள்ள மின் உற்பத்தி நிலையத்தையும் பல்வேறு இயந்திரத் தொகுதிகள் இயங்கும் விதத்தையும் நிருபர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார் தலைமைப் பொறியாளர் திரு. எஸ் எல். குமார்.

''இதோ பாருங்கள் இதன் பெயர் கோன் பிளேட். இந்த மாதிரித் தகடுகள் ஒரு அரைவைப் பருவத்தில் இயந்திரங்களுக்கு நூறு தேவைப்படும். சாதாரணமாக வெளியிலிருந்து நாங்கள் வாங்குவதற்கு ஒரு தகட்டுக்கு ரூ. 2,500 அளவிற்கு ஆகும். எங்களுக்கு வேண்டிய அளவில் எங்களுடைய பிட்டர்கள் இப்பொழுது வடிவமைத்துத் தயாரிக்கிறார்கள். இதனால் ஒரு தகட்டுக்குச் செலவுத் தொகை ரூ. 500 தான் ஆகிறது. ஒரு நாளில் 10 தகடுகள் வரை செய்யமுடிகிறது'' என்று திரு. எஸ்.எல். குமார் பெருமையுடன் கூறும் பொழுது நம்மால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

இயந்திரங்கள் ஓயாமல் இயங்கிக் கொண்டிருப்பதால் இரைச்சல் மிகுந்துள்ளது. பேசுவது சுலபத்தில் காதில் விழாது. அதனால் ஒருவரைக் கூப்பிடவேண்டுமானால், அதற்காக 'விசில்' அடித்துக் கூப்பிடுகிறார்கள். புதிதாக வருகிறவர்களுக்கு அது சுவாரஸ்யமாக இருக்கிறது. சுற்றுப் புறங்கள் தூய்மையாக அழுக்கு, குப்பை, கூளம் எதுவும் இன்றி யிருப்பது நெஞ்சைக் கொள்ளை கொள்கிறது.

ஆலையில் வேலை செய்கிறவர்களுக்கு ஆகட்டும், கரும்பு எடுத்து வரும் விவசாயிகளுக்கு ஆகட்டும் வசதிகள் செய்து தருவதில் நிர்வாகத்தினர் சிறந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளனர். இங்கு வேலை செய்யும நண்பர்கள் விளையாட்டுகளில் பெருக்கம் காட்டிப் பெற்று வந்துள்ள கோப்பைகள் நூற்றுக்கணக்கில் உள்ளன. தொழிலாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் 207 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தொழிலாளர்களுக்கும் சரி, அவர்களுடைய குடும்பத்தாருக்கும் சரி மருத்துவச் சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. அரும்புகளுக்கு ஆரம்பக் கல்வி தருகிறார்கள்; வயது வந்தோர் 300 பேர் தங்களுக்குரிய கல்வி பயில்கிறார்கள். வேலை நிறுத்தத்தில் அக்கறை காட்டாமல், வேலை தொடர்ந்து நடைபெறுவதில் தான் இங்குள்ள தொழிலாளர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். என்ற செய்தி சர்க்கரையைவிட இனிப்பது அல்லவா?

விபத்துத் தவிர்க்கும் நடவடிக்கைகளுக்காக இந்த ஆலை 1977, '78, '79 ஆகிய மூன்றாண்டுகள் தொடர்ந்து தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்று வந்துள்ளது.

இந்த ஆலையின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 1.50 இலட்சமாகும். அங்கத்தினர் எண்ணிக்கை 18,349. தற்போதுள்ள- செலுத்தப்பட்டுள்ள மூலதனம் ரூ. 150.27 லட்சம். இதில் தமிழக அரசு செலுத்தியுள்ள பங்கு மூலதனம் ரூ. 45 இலட்சம். 1972 பிப்ரவரியில் அரைவை ஆரம்பமாகியது. அப்பொழுது மாதிரிக்கு 22 ஆயிரம் டன் கரும்பே பிழியப் பட்டது. இந்த அளவு ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே வந்து, சென்ற ஆண்டில் மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள இரண்டு இலட்சம் டன் கரும்பு பிழியப்பட்டது, இந்த ஆண்டில் இது மேலும் அதிகமாகும் என எதிர்பார்க்கலாம்.

மனநிறைவோடு பத்திரிகையாளர் பயணம் முற்றுப்புள்ளிக்கு வந்த பொழுது, ''மீண்டும் நீங்கள் எல்லாம் வரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார் ஆலையின் மக்கள் தொடர்பு அலுவலர் திரு .ஜார்ஜ் ஜேக்கப். ''கட்டாயம் வருவோம்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்ட பொழுது, என் நெஞ்சில், 'தமிழ் நாட்டில் திறமைக்குக் குறைவில்லை; பெருமைக்கு அளவில்லை என்ற தெம்பு தலை தூக்கி நின்றது.



## வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
## உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
## அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
## டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 18 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

**தமிழ் வளர்த்த பெரியார்**

# டாக்டர் மா. இராசமாணிக்கனார்

## சிறுவை நச்சினார்க்கினியன்

"ஆராய்ச்சி இன்றியமையாதது. ஆனால் அது நன்முறையில் நடைபெறல் வேண்டும். ஆராய்ச்சிக்குப் பலதிறக் கண்கள் தேவை. இந்நாளில் வித்துவான் இராசமாணிக்கம் பி.ஓ.எல், ஆராய்ச்சி உலகில் இருள் போக்கி வருவது எனக்கு மகிழ்ச்சியூட்டுகிறது''

எனத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களால் சிறப்பிக்கப் பெற்றவர் ஆராய்ச்சி அறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

இவர் சீர்திருத்தக்காரர். சாதி சமய இன வெறிகளுக்கு மருந்திட்டவர். 1939ஆம் ஆண்டில் ஆசிரியர் மறைமலை அடிகளார் தலைமையில் சென்னையில் தமிழர் நல்வாழ்க்கைக் கழக மாநாட்டில் புரோகிதம் நீங்கிய தூய தமிழ்த் திருமண நூல் ஒன்று அரங்கேற்றம் பெற்றது. சட்ட நூல் அறிஞர்கள் அ.முத்தையா, கா.சு. பிள்ளை, திரு.வி.க. முதலியோர் அந்நூல் அமைப்பினைப் பாராட்டினர். தந்தை பெரியார் அவர்களும் இதனைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். இந்நூலினை ஒட்டி பின்னர் பல தமிழ்த் திருமண நூல்கள் மெல்ல சமயக் கருத்துக்களைப் புகுத்தி வெளியாயின. ஆயினும் தமிழ்த்தென்றல் திரு.வி.க. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் இராசமாணிக்கனார் ஆகியோர் அம்மாநாட்டுத் தீர்மானப்படி பல தமிழ்த் திருமணங்களை நடத்தினர்.

இராசமாணிக்கனார் 1930 ஆம் ஆண்டில் மறைமலையடிகளாரின் தலை மாணாக்கர் மணி திருநாவுக்கரசர் அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்டார்.

இவர், தமது 21-வது வயதிலேயே தமிழ் ஆசிரியர் ஆனார். தமிழ்ப் புலவர் பட்டம் பெறவில்லை அப்பொழுது. பின்னர் இடைவிடாத உழைப்பால்—முயற்சியினால் படிப்படியாகப் பல பட்டங்களைப் பெற்றார். பட்டங்கள் இவர் பெயரோடு இணைந்து பெருமை பெற்றன. ''வித்துவான்: பி.ஓ.எல்., எம்.ஓ.எல்; எல்.டி., பி.எச்டி'' ஆகிய பட்டங்கள் பெற்றார். இவர் உயர் தொடக்கப் பள்ளியில் தமிழ் ஆசிரியராய் அமர்ந்து பின்னர், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் துணைப் பேராசிரியராய் உயர்ந்து சிறப்படைந்தார்.

டாக்டர் இராசமாணிக்கனாரின் பேச்சு வன்மையினையும் ஆராய்ச்சித்திறனையும்பாராட்டி மக்கள் மகிழ்ந்து அளித்த பட்டங்கள், சைவ வரலாற்றுப் பேரறிஞர் (1951), ஆராய்ச்சிக் கலைஞர் (1956), சைவநெறிக் காவலர் (1959), சைவ இலக்கியப்பேரறிஞர் (1963), ஆகிய பட்டங்கள் இவரை வந்தடைந்து இருப்பினும் தமிழர் நெறியாகிய சைவ நெறியில் இடையில்கலந்த ஆசார சங்கற்ப விகற்பங்களைக் களைந்து எரிந்து தூய சீர்திருத்தக் கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டிப் புரட்சி செய்தார். ஆசிரியர் மறைமலையடிகளார் கருத்துக்களும் இவர்களது கருத்துக்களும் பின்னிப் பிணைந்து இருப்பினும் அடிகளார் கருத்துக்களுக்கு மேலும் வலிமையினையும் பொலிவினையும் இவர்களது ஆராய்ச்சியின் வாயிலாக உண்டாக்கினார்எனின் அது மிகையாகாது. இவரைச் சிந்தனைக் கருவூலம் எனலாம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவிகளில் சிறப்புற்று விளங்கிய டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களும் டாக்டர் மு. வரதராசன் அவர்களும் பல சீர்திருத்தக் கருத்துக்களைப் பாடமுறையிலாயினும், பொது முறையிலாயினும் ''இராசமாணிக்கனார் என்ன கருதுகிறார் என்று கேட்டே செய்வோம்'' என்று சொல்லியதை நான் பல முறையில் நேரில் அறிந்தேன். இது, அறிவைப் போற்றிய அறிஞர்களின் பண்புநலனை சார்ந்த செயல் ஆகும்.

திராவிடப் பண்பாட்டு நெறி முறைகளை ஆராய்ந்த தவத்திரு ஈராஸ் பாதிரியாருடன் நட்புக் கொண்டிருந்தார் இவர். ஈராஸ் பாதிரியாரின் கருத்துக்கள் பரவலாகத் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவேண்டும் எனக் கருதி, ''Were the Mohenjo-Darians Aryians or Dravidians?'' என்ற கட்டுரையைச் சென்னை நக்கீரர் கழகம் நடத்திய ''திருவள்ளுவர்'' திங்கள் மலரில் வரிசையாக வெளியிடச் செய்தார்.

இப்பேராசிரியர் ஆராய்ச்சி நூல்கள், பாடநூல்கள், துணைப் பாட நூல்கள் எனச் சுமார் 150க்கும் மேல் வெளியிட்டார். சில நூல்கள் இன்று பார்வைக்குக் கூடக் கிடைத்தில. ''திருவள்ளுவர் காலம் யாது?'' தமிழர் திருமணத்தில் தாலி; தமிழ் மொழி இலக்கிய வரலாறு; தமிழர் நாகரிகமும் பண்பாடும்; கல்வெட்டுக்



தோற்றம்: 12.3.1907
மறைவு: 26.5.1967

களில் அரசியல்-சமயம்-சமுதாயம்; ஆற்றங்கரை நாகரிகம், தமிழ் இலக்கண இலக்கிய கால ஆராய்ச்சி; பத்துப்பாட்டு ஆராய்ச்சி; மொகஞ்சொதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்; பல்லவர் வரலாறு; பெரிய புராண ஆராய்ச்சி முதலியன இவரது ஆராய்ச்சி நூல்கள் ஆகும்.

டாக்டர் அவர்களின் நுண்ணறிவின் திறத்தையும் ஆராய்ச்சி நெறி முறைகளையும் தளராத உழைப்பினையும் கண்ட சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகியவை தமது பாடநூல் குழுவின் உறுப்பினராய்ச் சேர்த்துக் கொண்டன. மேலும் அவர் சென்னை, அண்ணாமலை, திரு

விதாங்கூர் ஆகிய பல்கலைக் கழகங்களின் தேர்வாளராகவும் சில போது தலைமைத் தேர்வாளராகவும் விளங்கினார். மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் திராவிட மொழிப் பிரிவின் கருத்துரையாளராகவும் இருந்து சிறந்தார். பல்கலைக் கழக மானியக் குழுவின் (இணைப்பு) உறுப்பினராகவும் விளங்கினார்.

சென்னை நக்கீரர் கழகத்தின் வாயிலாக புலவர் சுற்றுலாவில் கலந்து கொண்டு திருப்பாலைவனம், திருப்பாச்சூர், திருவாலங்காடு ஆகிய கோயில்களின் கல்வெட்டுச் சிறப்புக்களைப் பற்றி ஆய்வுரை நிகழ்த்தினார். இவர்கள் எடுத்துக்காட்டிய சிறப்புக்களைக் கண்ட அரசு அறநிலையத்துறையினர் திருப்பாலைவனம் கோயிலுக்கு ரூ. 10,000 வழங்கி அக்கோயில்களைப் புதுப்பித்தனர்.

பேராசிரியர் அவர்களிடம் எம்.லிட், பி.எச்டி. ஆகிய பட்ட ஆய்வுகளுக்குப் பதிவு செய்து கொண்டு ஆய்வு செய்து தேர்ந்த அறிஞர்கள் பலர், உயர் பதவிகளில் விளங்கிப் பெருமை சேர்க்கிறார்கள்.

டாக்டர் அவர்களின்ஆராய்ச்சி நூல்கள் இன்றும் பட்டப் படிப்பிற்கும் பட்ட மேற்படிப்பிற்கும் பாட நூற்களாகத் திகழ்கின்றன, மேலும் அவை ஆராய்ச்சி மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டிகளாகவும் பயன்படுகின்றன. இத்தகு சிறப்புகளுக்கெல்லாம் மூல காரணம் இவர் தஞ்சையில் படித்தபோது கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் (பிள்ளை), நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி (நாட்டார்) ஆகியோர் ஆசிரியர்களாக அமைந்திருந்தமைதான் எனப் பேராசிரியர் அவர்களே மகிழ்ந்து கூறுவார்.

இத்தகு சிறப்பு மிக்கார், கர்நூலில் தாசில்தாராக விளங்கிய திரு மாணிக்கம்(பிள்ளை) அவர்களுக்கும் தாயாரம்மாள் அவர்களுக்கும் 12,3.1907ல் மகனாகப் பிறந்து சிறந்தார். 1916ஆம் ஆண்டு வரை கர்நூல், சித்தூர் ஆகிய ஊர்களில் தெலுங்கு மொழியைப் படித்தார். பின்னர் 1917ல் தந்தையார் மறைந்ததும் தம் தமையனார் இராமகிருஷ்ணர் அவர்களின் அரவணைப்பில் திண்டுக்கல், தஞ்சை முதலிய இடங்களில் தமிழில் கல்வி பயின்றார். தஞ்சையில் பள்ளி இறுதித் தேர்வில் (எஸ். எஸ். எல். சி.) வெற்றி பெற்றார். சில காலம் எழுத்தராகப் பணியாற்றினார்.

பின்னர் 1928ஆம் ஆண்டு சர் தியாகராயர் நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி சென்னை வந்து சேர்ந்தார். அப்பொழுது இவர் புலவர் பட்டம் பெறவில்லை. 1935ல் தான் ''வித்துவான்'' பட்டம் பெற்றார். பின்னர் முத்தியாலுபேட்டை உயர்நிலைப்பள்ளி, விவேகானந்தர் கல்லூரி விரிவுரையாளர், மதுரைத் தியாகராஜர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், கடைசியாகச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைப் பேராசிரியராகத்(ரீடர்) திகழ்ந்து சிறப்பெய்தினார்.

இவர்தம் முயற்சியால் மென்மேலும் இலக்கியச் செல்வத்தைச் சேர்க்கும் பணிக்கு மூலகாரணராய் விளங்கியவர் இவர்தம் துணைவியார் புலவர் கண்ணம்மாள் அவர்கள். கண்ணம்மாள் கணவரின் நன் முயற்சியால் புலவர் பட்டம் பெற்றார். கல்லூரி ஆசிரியராகவும் விளங்கினார். தம் கணவர் பல அரிய ஆய்வு நூல்கள் எழுதுவதற்கும் உயர் பட்டங்கள் பெறுவதற்கும் கணவரின் நிழலாக-பணியாளராக - தாயாக விளங்கியும் வந்தார்.

பேராசிரியர் அவர்கள் தமிழகம் முழுவதும் உள்ள கழகங்கள், மன்றங்கள், கல்லூரிகள் ஆகிய இடங்களுக்கும், சமய மாநாடுகள், சுயமரியாதை மாநாடுகள், தமிழ் மாநாடுகள் ஆகியவற்றிற்கும் சென்று நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். பல நினைவு மலர்களிலும் ஆண்டுவிழா மலர்களிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார். பல்கலைக் கழகக் கருத்தரங்குகளில் அவர் படித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல. இரண்டு நாள் சேர்ந்தாற்போல் விடுமுறை கிடைத்தால் ஏதாவது ஓர் ஊருக்குச் சென்று கல்வெட்டுக்களைப் படிப்பார். ஏதாவது ஆய்வுத் தடயங்களைக் கண்டு வருவார். ஒரு முறை திருக்கழுக்குன்றத்திற்கு 2 கல் தொலைவில், பண்டைக் கால மனிதர்களின் எலும்புகள் கிடைக்கப் பெற்று, அவை 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என அறிந்து, அவற்றுள் ஒன்றைச் சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிக் கூடத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பித்தார்.

மலேசியாவில் நடந்த முதலாம் உலகத் தமிழ் மாநாட்டில் இவர் கலந்து கொண்டார். இத்தனைக்கும் மேலாக தந்தை பெரியார் அவர்களுடன் இணைந்து சாதி ஒழிப்புப் பணிகளில் தொண்டாற்றினார்.

வாழ்நாள் இறுதிவரை தமிழ்ப் பணி செய்தார். படுக்கையில் இருந்தபோதுகூட, அச்சுப் படிகளைத் தாமே திருத்தம் செய்வார். உழைப்பால் உயர்ந்த பேராசிரியர் அவர்கள் 26.5.67ல் இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கி இயற்கை எய்தினார்.




தஞ்சைமாவட்டத்தில்20.2.81 உடன் முடியும் வாரத்திற்குச் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 790 விவசாயிகளுக்குக் கறவை மாடு வாங்க வங்கிகள் மூலம் கடன் ரூ. 15,30,102 வழங்கப்பட்டு அதற்குரிய மானியம் ரூ. 4,62,843 வழங்கப்பட்டுள்ளது.

ஆறு விவசாயிகளுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்கு வங்கி மூலம் கடன் ரூ. 11,800 வழங்கப்பட்டு அதற்குரிய மானியமும் ரூ. 3869.92 வழங்கப்பட்டுள்ளது. 3 விவசாயிகளுக்கு ஆயில் என்ஜின் வாங்குவதற்கு நிலவள வங்கி மூலம் கடன் ரூ. 10,200 வழங்கப்பட்டு அதற்குரிய மானியம் ரூ. 3257 வழங்கப்பட்டுள்ளது. 293 விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகள் வாங்க மானியம் ரூ. 24,852.53 வழங்கப்பட்டுள்ளது. 1,000 விவசாயத் தொழிலாளர்கட்கு மண்வெட்டி, கதிர் அறுக்கும் அரிவாள் வாங்குவதற்கு மானியம் ரூ. 8,000 வழங்கப்பட்டுள்ளது. 20 நிருபண வயல்களுக்கு மானியம் ரூ.34,000வழங்கப்பட்டுள்ளது. 38 சமுதாய நெற்களம்கட்டுவதற்கு மானியம் ரூ. 38,000 வழங்கப்பட்டுள்ளது.

கைவினைஞர்கள் 16 பேர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாவும், 4 பேர்களுக்கு வெட் கிரைண்டரும், வாங்க வங்கி மூலம் கடன் ரூ. 39,500 வழங்கப்பட்டு அதற்குரிய மானியம் ரூ. 12,163 வழங்கப்பட்டுள்ளது.

2 முதல் 4 எக்டேர் நிலமுடைய விவசாயிகளுக்கான சிறுபாசனத் திட்டத்தின் கீழ் ஒரு விவசாயிக்கு கிணறு தோண்ட நிலவள வங்கி மூலம் கடன் ரூ. 7500- வழங்கப்பட்டு அதற்குரிய மானியம் ரூ 1500- வழங்கப்பட்டுள்ளது.

மாணவர் பக்கம்

# கம்மங்கஞ்சி

—இரா. இரகுபதி

தன்னுடைய குடிசைக்கு முன்னால் ஒரு ஜீப் வந்து நின்றவுடன் என்னவோ ஏதோவென்று பதறிப்போனான் பழனி. தான் ஏதோ தவறு செய்து விட்டோமோ என்று கூட ஐயத்தோடும் அதிர்ச்சியோடும் ஜீப்பிலிருந்து இறங்கி வந்தவர்களைப் பார்த்து 'வாங்க அய்யா' என்று வரவேற்றான்.

முன்னே வந்த பணியாளரைப் பார்த்தவுடன் ஏதோ ஒரு பெரிய அதிகாரிதான் இறங்கி வருபவர் என்று உறுதி செய்து கொண்டான். அப்படி வந்து நின்ற அதிகாரியின் முகத்தை எங்கோ பார்த்த மாதிரியும் இருந்தது அவனுக்கு.

''என்ன பழனி..... என்னை ஞாபகமிருக்கா...?''

''இல்லே சார் நீங்க யாருன்னு தெரியல்லே''

''அப்படியா? கம்மங்கஞ்சி .... கம்மங்கஞ்சின்னு பட்டப் பெயர் வைச்சு கூப்பிடுவையே... உன் கூட படிச்ச பையன் ஒருத்தனை! அவனை... ஞாபகமிருக்கா?''

''யாரு கருப்பையாவா... நீங்க

''ஆமாம்.. பழனி.. அந்தக் கம்மங்கஞ்சி கருப்பையா நான் தான்''

''யாரு கருப்பையாவா.. நீங்க' என்று வியப்போடு பார்த்துவிட்டு அடுத்த வினாடி, பழனி தலை குனிந்து கொண்டான்.

அவனது நினைவலைகள்பின்னோக்கி ஓடின.

கருப்பையாவும், பழனியும் ஒரு வகுப்பு மாணவர்கள். அப்பொழுது புதுப்பட்டியில் உயர்நிலைப் பள்ளி இல்லாததால் பக்கத்தில் உள்ள வத்திராயிருப்பில் உள்ள உயர் நிலைப்பள்ளிக்கு நடந்து வந்து படித்தார்கள்.

முற்பகல் பள்ளி விட்டதும் புதுப்பட்டியிலிருந்து வரும் மாணவர்கள் ஊராட்சி அலுவலகம் அமைந்துள்ள காம்பௌண்டில் அவர்கள் கொண்டு வந்த மதிய உணவை உண்பார்கள்.

இதில் எல்லோரும் தேங்காய்' எலுமிச்சைசாதம் தயிர்சாதம், இட்லி, பூரி என்று கொண்டு வந்து உண்பார்கள். கருப்பையா மட்டும் ஏழை மாணவன் என்பதால் கம்புச் சோற்றைக் கொண்டு வந்து, தொட்டுக் கொள்ள காயப்போட்ட வறுத்த மிளகாயை அல்லது பச்சை வெங்காயத்தைக் கொண்டு வந்து சாப்பிடுவான்.

அவன் வெட்கப்பட்டுக் கொண்டு தாமதமாக வந்து தனியாகத்தான் சாப்பிடுவான். ஒரு நாள் பழனி இதைப் பார்த்து விட்டான். பழனி கொஞ்சம் வச' தியான பையன். ஆகவே, தினமும் தேங்காய் சாதம், பூரி, சப்பாத்தி யென்று கொண்டு வந்து பெருமையோடு உண்பான். கையில் எப்போதும் காசிருக்கும். எனவே, கருப்பையா, கம்புச் சோற்றைக் கரைத்துக் குடிப்பதைப் பார்த்தவுடன் 'ஹே கம்மங்கஞ்சி.. கம்மங்கஞ்சி' என்று கேலி செய்ய ஆரம்பித்தான்.

கருப்பையாவிற்கு நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல் இருந்தது. எத்தனை தடவை அம்மாவிடம் சொல்வது ....நெல்லுச் சோத்தை வையம்மா... என்று -

'கருப்பையா இதப்பாரு.. உங்க அப்பா... இருந்தா... உழைச்சிப் போட்டு நெல்லுச் சோறு தின்ன வைச்சிருப்பார். நான் கூலி வேலைக்குப் போய் கொண்டு வர்றதிலே உனக்குக் கம்மங்கஞ்சிதான் ஊத்த முடியும்!' என்று கண்ணில் நீர் ததும்பச் சொன்னவுடன் 'நெல்லுச் சோற்றைக் கேட்பதையே விட்டு விட்டான். 'ஆனால்..... இந்தப் பழனி... ஒவ்வொரு பையன் கிட்டேயும் சொல்லி 'கம்மங்கஞ்சி' என்று கேலி செய்ய வைத்து விட்டான்.

கருப்பையாவிற்கு மானக் கேடாக இருந்தது. வகுப்பு ஆசிரியரிடம் சொல்லிப் பார்த்தான். அவரும் கண்டித்துப் பார்த்தார். அவர் சொல்லும் நேரத்தில் ரெண்டு மூன்று நாட்களுக்கு பழனி பேசாமல் இருப்பான். அதன்பின் ஆரம்பித்து விடுவான் கேலியை.

ஒரு நாளைக்காவது, இந்தப் பழனியிடம் எதிர்த்துக் கேட்க



வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தான். அந்த நினைப்பைச் செயலாக்க தக்க நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

முழு ஆண்டுத் தேர்வு தொடங்கும் சமயம். ஒருநாள் பள்ளி விட்டவுடன் வயல் வரப்புக்களின் வழியாக வேகமாக நடந்து கொண்டிருந்தான். வேகமாகச் சென்றால் அதிகநேரம் படிக்க முடியும் என்ற தீர்மானத்தோடு போய்க் கொண்டிருந்தான்.

அப்போது கும்பலாக நான்கு ஐந்து மாணவர்கள் 'கம்மங் கஞ்சி கருப்பையா... காய்ஞ்ச மிளகாய் கருப்பையா...' என்று நக்கலாக அழைக்கும் சத்தம் கேட்டது.

கருப்பையா சடக்கென்று நின்று விட்டான். பழனியும் அவன் நண்பர்களும் பக்கத்தில் வந்தவுடன் பழனியின் சட்டையைப் பிடித்துக் கொண்டான், கருப்பையா. 'பழனி முதலும் கடைசியும் இதுதான் ... இனிமே நீ இப்படி கேலி பண்ணினா



.. நானு பொல்லாதவனா ஆயிடுவேன்.... இதோபாரு..... நான் நல்லா படிச்சி உன்னைவிட.... உன் குடும்பத்தைவிட முன்னேறலே... னா என் பேரு கருப்பையா இல்லே' என்று சூளுரை செய்தான்.

இந்த நிகழ்ச்சிகள் பழனிக்கு நினைவிற்கு வந்தவுடன் "கருப்பையா உன் ஏழ்மையை அன்றைக்கு கேலி பண்ணினேன்... உன்னை எந்தப் பேரைச் சொல்லி கேலி பண்ணினனோ.. அந்தக்கம்மஞ் சோத்தைத் தான் நான் சாப்பிட்டுக்கிட்டிருக்கேன். நான் பத்தாவதோட படிப்பை நிறுத்திட்டேன்... நீ ... நல்லா படிச்சி... மாநிலத்திலே முதலாவதா வந்தே எப்பவுமே ஏழை மாணவர்களுக்கு உதவி செய்ற ... நம்ம அரசாங்கம் உதவி பண்ணிச்சி .. நீ நல்ல நிலைக்கு வந்திட்டே... எங்கப்பா போன பிறகு, என் சொத்தெல்லாம் நாலாவிதமாப் போயிடுச்சி, என்ன பண்றது? உன்னைக் கேலி செய்ததுக்கு மன்னிச்சிடப்பா'' என்றான் உருக்கத்துடன்.

"பழனி... அப்படியெல்லாம் நீ பேச வேண்டாம்! உனக்கு ஏதாவது உதவி வேணுமுன்னா சொல்லு; நான் செய்றேன். கவலைப்படாதே... சரி.. சரி கம்மங் கஞ்சி சாப்பிட்டு எத்தனையோ நாளாகுது, கொண்டு வா, சாப்பிடலாம்" என்றான்.

தயங்கிய பழனி... கருப்பையாவின் கள்ளமிலா உள்ளத்தைப் புரிந்து கொண்டு கம்மங்கஞ்சியைக் கொண்டு வந்தான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு கம்மங்கஞ்சியை கருப்பையா ஐ.ஏ.எஸ். சுவைத்துக்குடித்தார். அது அவருக்கு அமுதமாகவே இனித்தது.

**வி**ளையும் பயிர் முளையிலே தெரியும் என்பார்கள். ஒரு சிலருக்கு இளமையிலேயே திறமை வெளிப்படுவதைப் பார்க்கிறோம். ஆடல், பாடல், பேச்சு, ஓவியம், விளையாட்டு-இப்படிப் பல துறைகளில் அவர்கள் சிறந்து விளங்குவதைக் கண்கூடாகக் கண்டு வருகிறோம். அந்த வகையில், சிறுமி ஆர். தேவி நடனத்தில் சிறந்து விளங்குகிறார்.

சென்னை பெய்ன் பள்ளியில் ஐந்தாவது வகுப்பில் படிக்கும் தேவிக்கு, வயது பத்து ஆகிறது. பள்ளிக்கூட விழாக்களில் நடனம் ஆடிப் பலரின் பாராட்டுதல்களைப் பெற்ற தேவி, விளையாட்டு, பேச்சு, கட்டுரை இவைகளிலும் பங்கு கொண்டு பரிசு பெற்றுள்ளார். இப்படிப் பரிசுகள் பெற்ற தேவி படிப்பில் எப்படி? படிப்பிலும் சிறந்து விளங்கி, வகுப்புத் தலைவியாகவும் இருந்து வருகிறார்.

தேவியின் முதல் நடன அரங்கேற்றம் 1974ல் நடந்தது. அண்மையில், மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு பொன்னையன் அவர்கள் தலைமையிலும், உள்துறைச் செயலாளர் திரு கே. சொக்கலிங்கம் ஐ.ஏ.எஸ். அவர்கள் முன்னிலையிலும் நடன நிகழ்ச்சி நடந்தது. சிறுமியின் நடனத்தை அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

கடந்த ஆண்டு சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியிலும் நடனமாடிய தேவி, தொலைக் காட்சியிலும் தோன்றியிருக்கிறார்.

சிறுமி தேவி, தமிழக அரசு உள்துறை துணைச் செயலாளர் திரு ஆர். ரங்கநாதன் அவர்களின் மகளாவார். — பி.வி.ஜி.



## நோபல் பரிசு

ஸ்வீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக்ஹோம் நகரில் 1833-ஆம் ஆண்டு தோன்றிய ஆல்ஃப்ரடு பெர்ன்ஹார்டு நோபல் (Alfred Bernhard Nobel) என்பார், தம் வாழ்நாளில் ஈட்டிய பெருந் தொகையான 17,50,000 பவுனை அறக்கொடையாக வைத்து அதன் வழிவரும் வட்டியைக் கொண்டு ஆண்டுதோறும் வேதியியல், பௌதிகவியல், மருத்துவம், உடலியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி ஆகிய துறைகளில் உலகில் தலையாய செயலாற்றிய பெரியவர்களுக்குப் பரிசுகள் நல்க ஏற்பாடு செய்துள்ளார்.

தொடக்கத்தில் ஒரு பரிசின் மதிப்பு 8,000 பவுன்களாக இருந்தது. இப்போது நான்கு மடங்காக உயர்ந்து உள்ளது. இப்பரிசானது மொழி, இனம், பால், நாடு ஆகிய அனைத்தையும் கடந்து அளிக்கப்பட்டு வருகிறது. 1901-ஆம் ஆண்டு முதல் இப்பரிசு அளிக்கப்பெறுகிறது. 10.12.1896 அன்று உலகை விட்டு மறைந்த நோபல், டைனமட்டைக் கண்டுபிடித்தவர்; வாழ்வில் திருமணமே செய்து கொள்ளாதவர் என்பன எண்ணத்தக்கன.

## உலகிலேயே...

உலகிலேயே மிகப் பெரிய கண்டம் ஆசியா.

உலகிலேயே மிக உயரமான இமயமலை இந்தியாவில் உள்ளது.

உலகிலேயே மிக நீளமான ரெயில்பாதை ரஷ்யாவில் உள்ளது.

உலகிலேயே மிக அதிமாக மழை பெய்யும் இடம் செரபுஞ்சி. அது இந்தியாவில் உள்ளது.

உலகிலேயே முதன் முதல் மனித இனம் தோன்றியது ஆசியாவில்தான்.

உலக மக்களில் பாதிப்பேருக்கு மேல் ஆசியாவில்தான் வாழ்கிறார்கள்.

உலகிலேயே இரண்டாவது பெரிய கண்டம் ஆப்பிரிக்கா.

உலகிலேயே மிகப் பெரிய பாலைவனமாகிய சகாரா ஆப்ரிக்காவில் உள்ளது

உலகிலேயே மிக நீளமான நைல் நதி ஆப்பிரிக்காவில் உள்ளது.

ஆப்பிரிக்கப் பிரமிடுகள் உலக அதிசயங்களில் ஒன்றாகும்.

உலகிலேயே மிகச் சிறிய கண்டம் ஆஸ்திரேலியா.

உலகின் மிகப் பெரிய தீவும் ஆஸ்திரேலியாதான்.

உலகிலேயே மிகச் சிறந்த வகை ஆட்டுரோமம் ஆஸ்திரேலியாவில் கிடைக்கிறது.

ஆஸ்திரேலியாவில் சுமார் 13 கோடி ஆடுகள் உள்ளன.

ஆதாரம் : குழந்தைகள் கலைக் களஞ்சியம்.

## அலர்ஜி என்றால் என்ன?

பால், கோதுமை, ரொட்டி, முட்டை இவை நல்ல உணவுப்பொருள்கள். ஆயினும் இந்தப் பொருள்களில் ஒன்றிரண்டு சிலருக்குப் பிடிப்பதில்லை. அதை உண்டவுடனே அவர்களுக்குத் தலைவலி, வயிற்றுவலி, உடம்பு எரிச்சல் போன்ற தொல்லைகள் வரும்.

இன்னும் சிலருக்குப் பூக்களை முகர்ந்தாலே நோய் வரும். மற்றும் சிலருடைய உடம்பில் கம்பளம், முகப்பூச்சுத் தூள், தலையணை, துடைப்பத் தூசு இவை பட்டவுடனே சொறி உண்டாகும்; காய்ச்சலும், ஆஸ்த்துமாவும் தலைவலியும் வந்து விடுவதுண்டு. காரணம், சில பொருள்கள் சிலருக்கு ஒத்துக் கொள்ளுவதில்லை. இதற்குத்தான் 'அலெர்ஜி' என்று பெயர்.

அலெர்ஜியால் வரும் நோய்களுக்கு மருந்தே தேவையில்லை. அலெர்ஜியைக் கொடுக்கும் பொருள் எது என்று முதலில் கண்டுபிடிக்க வேண்டும். பிறகு நோயாளி அதை விலக்கிவிட வேண்டும்.

ஆனால், பால், ரொட்டி போன்ற முக்கியமான உணவுகளை எப்படி விட்டு விடுவது? முடியாதல்லவா? இதற்கு ஒரு வழி உண்டு. இவை எவரெவருக்கு நோய் உண்டாக்குகின்றனவோ அவர்களுக்கு ஐந்தாறு மாதம் இவற்றைக் கொடுக்காமலே இருக்க வேண்டும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துவர வேண்டும். அப்போது அலெர்ஜியைத் தடுக்கும் சக்தி உடம்பில் தானாக உண்டாகிவிடும்.

# டிவி நிகழ்ச்சிகளை ரேடியோவிலும் எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளை டிவியிலும் கேட்டு மகிழ ஒரு அற்புத படைப்பு




# சாலிடெர்

## டிவி/எஃப்எம் ட்யூனர்

சாலிடெர் டிவி/எஃப்எம் ட்யூனரை உங்களது ரேடியோவுடன் இணைத்து, டிவி இல்லாமலேயே டிவி நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழலாம். டிவியில் இடம்பெறும் திரைப்படம், நாடகம், இசை போன்ற பல நிகழ்ச்சிகளைக் கேட்க இது ஒரு அற்புத படைப்பு.

அதேபோல உங்களது ரேடியோவில் எஃப்எம் (FM) பாண்டு இல்லாவிட்டாலும், நீங்கள் எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கலாம். சாலிடெர் டிவி/எஃப்எம் ட்யூனரை உங்களது ரேடியோவுடன் இணைத்த பின்பு டிவி நிகழ்ச்சியையோ அல்லது எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சியையோ தேர்ந்தெடுக்க ஒரு சிறிய பட்டன் அமைக்கப்பட்டுள்ளது.

சாலிடெர் டிவி/எஃப்எம் ட்யூனரை எந்தவொரு ஆம்ப்ளிஃபையருடனும் இணைத்து டிவி நிகழ்ச்சிகளையோ, எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளையோ கேட்டு ரசிக்கலாம்.

இது தவிர உங்களது டிவியில் 'பிக்-அப்' வசதி இருக்குமேயானால் சாலிடெர் டிவி/எஃப்எம் ட்யூனரை இணைத்து எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

எல்லோராலும் மிகவும் விரும்பி வாங்கப்படும், பிரசித்திபெற்ற சாலிடெர் டிவியை தயாரிப்பவர்கள் இப்பொழுது உங்களுக்கு டிவி/எஃப்எம் ட்யூனரை குறைந்த விலையிலேயே வழங்குகின்றனர்.

அருகிலுள்ள சாலிடெர் டிவி டீலரை அணுகுங்கள். உங்களுக்கு அதை இயக்கிக்காட்டுவார்.

விலை ரூ. 325/- மட்டுமே

ASP/HE/240



# உடல் ஊனமுற்றோர் நலன்:

# சிறுமலர் பள்ளியின் சீரிய தொண்டு

பி.எல். ராஜேந்திரன்

'அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராதல் அரிது!
மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது!
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது!
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது!
தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே!'

தனிப்பாடல் திரட்டிலே காணப்படுகின்றது ஔவையாரின் இந்த இனிப்பான பாடல்.

மனிதராகப் பிறப்பது அரிது என்று கூறும் ஔவையார், அப்படிப் பிறப்பதிலும் 'கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது' என்கிறார். இந்தச் சொற்களே மனிதப் பிறப்பில் உடல் ஊனம் என்பது எவ்வளவு உபாதை தரக்கூடியதாக உள்ளது என்பதனை நன்கு விளக்கும்.

உடல் ஊனமுற்றோர் நலன் ஆண்டான இந்த ஆண்டில், அந்த அழகிய பாடல் அடிகளுக்கு மதிப்பளித்து உடல் ஊனமுற்றோரை வைத்துப் பாங்குறப் பராமரிக்கும் சென்னை நகரில் உள்ள பார்வையற்றோர்—செவிக் குறையுடையோர் பள்ளி (School for the Blind and the Deaf) எனப்படும் 'சிறுமலர் பள்ளி' (Little Flower Convent) சிறப்புறப் பணியாற்றி வருவதாகும்.

**பொன்விழா கண்டவை !**

1926ல் கிரீம்ஸ் சாலையில் உள்ள 'என் ஃபீல்டு' கட்டிடத்தில் மிகச் சாதாரண அளவில், செவிகேளாத குழந்தைகள் மூவரோடு துவக்கப்பட்டது இப்பள்ளி. இதனோடு அடையாறிலுள்ள செயின்ட் லூயி பள்ளி, பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோர் பள்ளி ஆகியவைகளும் உட்பட மூன்றும் பொன் விழாவைத் தாண்டிப் பீடுநடை போடுபவைகளாகும்!

பார்வையற்றோருக்காகவும், செவி கேளாதோருக்காகவும் ஆரம்பிக்கப்பட்ட 'சிறு





வகுப்பறையில் பெற்றோருக்கும் அனும

மலர் பள்ளி' (Little Flower Convent) ஆண்களும் பெண்களும் சாதிமதப் பாகுபாடின்றி சேர்ந்து படிக்கிறார்கள் என்றாலும்—ஆறாம் வகுப்புத் தேறியபின், மாணவர்கள் மட்டும் அதற்குமேல் படிக்க செயின்ட் லூயி பள்ளிக்கும், அதற்குமேல் படிக்க பூவிருந்தவல்லி பள்ளிளிக்கும் அனுப்பப்படுகிறார்கள். பெண்களுக்கு மட்டும் +2 வகுப்பு வரை இங்கேயே!

இந்தியாவில், பார்வையற்றோர்களுக்கான பள்ளிகள் 200க்கு மேல் இருக்கின்றன என்றாலும், சென்னையில் மேற்கூறிய மூன்றே முக்கியத்துவம் பெற்றவைகளாக உள்ளன.

இரண்டாவது உலகப்போர் நிகழ்ந்த போது, பல்வேறு நெருக்கடிகள் காரணமாக 1942ல் திருவல்லிப்புத்தூருக்கு மாற்றப்பட்ட இந்த 'சிறுமலர் பள்ளி' 1946ல் மீண்டும் சென்னைக்கே கொண்டு வரப்பட்டு சொந்த இடத்திலேயே நிர்மாணிக்கப்பட்டது. இப்போது இங்கே படிக்கின்ற பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை 450.

## ஆசிரியர் பயிற்சி !

இவர்களுக்கு எழுத்தறிவிக்கும் ஆசான்களாக 52 பேர் அரும்பணியாற்றி வருகின்றனர். 1951 முதல், செவி கேளாதோருக்குக் கற்பிப்பதில் சான்றிதழ் பெறத்தக்க ஆசிரியர் பயிற்சியும் இங்கே அளிக்கப்பட்டு வருகிறது. மேனிலைப்பள்ளி ஆசிரியராகப் (Secondary Grade) பணியாற்றுவதற்கு முறைப்படியான பயிற்சியை முடித்தவர்கள் அதற்குமேல், இங்கே செவிகேளாதோருக்கும், பார்வையற்றோர்க்கும் பயிற்றுவிக்கும் வகையறிய ஓராண்டுக்காலம் பயிற்சி பெறுகிறார்கள்.

கே. முத்துச்குட்டி, டி.அமலோற்பவம், ஏ.டி. கருணாகரன், பமீலா கனகராஜ், எஸ். டி.ரோட்டா அற்புதம், ஹெப்ஸி செல்வராஜ், ஆன் நிர்மலாராஜன், எஸ்.சாம் கிங்ஸ்டன் தாஸ், மேரி ஹப்ஸிபா, டி.ஃபாத்திமா, ஒய். ஜோஸப், வி. தனலட்சுமி, ஆர். ஜோஸபின் ஆகிய பதினான்குபேர் இப்போது ஆசிரியை பயிற்சி முடித்துவிட்டு இங்கே பயிற்சிபெற்று வருகிறார்கள்.

78-79ல் கர்னாடக மாநிலத்தைச் சேர்ந்த செல்வி உஷா திருமதி குஸுமா ஆகியோர் இங்கே பயிற்சி பெற்றார்கள். இப்படி. வெளி மாநிலத்தவர்களாலும் விரும்பி ஏற்கப்பட்டது இங்கத்திய ஆசிரியப் பயிற்சி.

இந்தியாவிலேயே அரிச்சுவடி முதல்(எல். கே.ஜி) + 2வரை வகுப்புகள் உள்ள செவி கேளாதோர் - பார்வைக் குறையுடையோர் பள்ளி இது ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணாசாலையில், ஜெமினிக்கு அருகே அண்ணா மேம்பாலத்தின் நிழலில் உள்ள இந்த சிறுமலர் பள்ளியில்—சென்னையில் உள்ளோரின் குழந்தைகள் மட்டுமல்ல; பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் குழந்தைகள் கொண்டு வந்து சேர்க்கப்படுகிறார்கள். எந்தக் குறையுமில்லாத குழதைகள் படிக்கும் பள்ளிகளுக்குள்ள பாடத்திட்டங்களே இங்கும் பின்பற்றப் படுகின்றன.

தங்கிப்படிக்க விடுதி வசதியும் இப்பாடசாலையில் உண்டு.

## தேர்வில் தெளிவு

இங்கே படிக்கும் மாணவச் செல்வங்கள் எல்லா வகையிலும் அறிவுக் கூர்மை உடையவர்களாகத் திகழ்கிறார்கள். சென்ற ஆண்டில் பத்தாம் வகுப்புத் தேர்வில் 10 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.

பள்ளித் தலைமையாசிரியை சகோதரி ரீத்தா மேரியோடு சிறுமலர் பள்ளி செயல்படும் விதம்பற்றி அறியச் செல்கிறோம் நாம்.

'வராண்டாக்களில் நடந்து பிள்ளைகளின் கவனத்தைச் சிதைக்காதீர்கள்' என்று எழுதப்பட்ட பலகை நம் பார்வையில் படுகிறது. ஊன்றிப் படிக்கும் பிள்ளைகளுக்கு அந்தச் செயல் ஊறு விளைவிக்கும்தான் என்பதை நம்மால் உணரமுடிகிறது.

நாம் தயக்கத்தோடு தலைமை ஆசிரியையைப் பார்க்கிறோம். ''நீங்கள் எப்போதாவது தானே வருகிறீர்கள்? பரவாயில்லை, வாருங்கள்'' என்று இன்முகத்தோடு நம்மை அழைத்துச் செல்கிறார்.

அரிச்சுவடி (எல்.கே.ஜி) வகுப்பு. தமிழிலும் ஆங்கிலத்திலும் பாடங்கள் நடத்தப்படுகின்றன. வகுப்பறைக்குள்ளே முழந்தைகளின் தாய்மார்களும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுபற்றிக் கேட்டபோது சிஸ்டர் ரீத்தா இப்படிப் பதில் சொன்னார். ''என்னதான் நாம் மிகுந்த அக்கறையோடு பாடம் சொல்லித்தந்தாலும், வீட்டில் பெற்றோர்களும் இப்படிப்பட்ட செவிகேளாத குழந்தைகளுக்குத்தக்க பயிற்சியளிக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் படிப்பில் தேர்ச்சி பெறுவார்கள். ஆகையால், இங்கே பாடம் கற்



கண்ணாடி முன்னால் பேசப் பயிற்சி



இசை மூலம் பாடம்



பாத அணிப் பிரிவு



தமிழ் வகுப்பு நடக்கிறது

பிப்பது எப்படி என்பதை அவர்களும் புரிந்து கொள்ளுவதற்காகத்தான் வகுப்பறைக்குள் தாய்மார்களையும் இருக்கச் செய்கிறோம்.

ஒலியுணர்வு கருவி (Hearing aid) ஒவ்வொரு குழந்தையின் இளஞ்செவியிலும் பொருத்தப்பட் டிருக்கிறது. ஆசிரியையும், கழுத்தில் ஒரு மைக்கைத் தொங்கவிட்டுக் கொண்டுதான் பாடம் நடத்துகிறார். இத்தகைய குழந்தைகளுக்குப் பாடம் நடத்துவது மிகவும் சிரமம் என்பதால், வகுப்பொன்றுக்கு ஓர் ஆசிரியைக்குப் பத்துப் பிள்ளைகளுக்குள்ளாகவே வைக்கப்படுகிறார்கள்.

## பாட்டும் பாடமும்

அரிச்சுவடிக்கு அடுத்த கட்ட வகுப்பில் (யு.கே.ஜி) இசை பயிற்றுவிக்கப்படுகிறது. இசைக்கேற்ப அவர்கள் வாயசைக்கவும் பாடவும் மிகவும் கவனத்தோடு, ஒரு பெரிய 'டிரம்மை' ( Drum ) கழுத்தில் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு மகிழ்வோடு சிரமப்படுகிறார் வகுப்பாசிரியை. கேட்கும் சக்தி குறைந்ததால், பேசத் திராணியற்றிருக்கும் அந்த இளந்தளிர்கள் பாடம் படிப்பதும், பாட்டைப் பாடுவதும் நம் நெஞ்சைக் கவர்கிறது.

சகோதரி ரீத்தா மேரி நம்மை +2வகுப்பொன்றுக்கு அழைத்துச் செல்கிறார். அங்கே தமிழ் இலக்கண வகுப்பு நடந்துகொண்டிருக்கிறது. செல்வி அமிர்தவல்லி நடத்தும் இலக்கணத்தை அந்த மாணவிகள் கவனிப்பதையும், அவர் கேட்கும் வினாக்களுக்கு உடனுக்குடன் மாணவிகள் பதிலிறுப்பதையும் நாம் கவனிக்கறோம்:

''பால்+கடல் பாற்கடல் என்கிறோம்; இதில் வருமொழி எது? நிலை மொழி எது?'' —ஆசிரியை கேட்கிறார்.

''பால் என்பது நிலைமொழி. கடல் என்பது வருமொழி''—உடனேயே எழுந்து பதில் சொல்கிறார் ஒரு மாணவி.

இலக்கண வகுப்பு தொடருகிறது.

அடுத்த அறைக்குச் செல்லுகிறோம். +2 வகுப்பு மாணவிகள் 'கார்பன் டை ஆக்ஸைடு தயாரிப்பது எப்படி?' என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆசிரியை, உடனிருந்து வழிகாட்டுகிறார்.

இந்தச் 'சிறுமலர் பள்ளி'யில் படிக்கும் குழந்தைகளுக்கு, பாடசாலைக் கட்டணமாக எதுவுமே வசூலிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒலியுணர் கருவி (Hearing aid) பள்ளியின் செலவிலேயே தயாரித்துத் தரப்படுகிறது. இதற்காகவும் பணம் வசூலிக்கப்படுவதில்லை. வசதியுள்ள குடும்பத்துப் பிள்ளையானால் மட்டுமே அந்தக் கருவிக்கென ஒரு சிறு தொகை வசூலிக்கப்படுகிறது.

ஒலியுணர் கருவியை இந்தப் பள்ளியிலேயே அவரவர்களின் செவிகளுக்கேற்ப தயாரிக்கிறார்கள். இங்கே சுமார் 250 ரூபாய்க்குள் தயாரிக்கப்பட்டுவிடும் அந்தக் கருவி, வெளியே கடைகளில் வாங்குவதானால் ரூ. 500 வரை விலை கூறப்படுகிறது என்கிறார்கள்.

## தமிழக அரசின் உதவிகள்

தமிழக அரசு இத்தகைய உன்னதப்பணிகளுக்காக 'சிறுமலர்ப் பள்ளி'க்குப் பலவகைகளில் மானியம் வழங்கிவருகிறது.

ஆண்டொன்றுக்கு 150 ஒலியுணர் கருவிகள் அரசு மூலம் இவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

இங்கே பணிபுரியும் ஆசிரியப் பெருமக்களுக்கான ஊதியத் தொகை முழுவதும் தமிழக அரசாலேயே வழங்கப்படுகிறது. இந்த வகையில் மட்டும் ஏறத்தாழ 42 ஆயிரம் ரூபாய் ஆகிறது.

செவிகேளாத குழந்தை ஒன்றுக்கான பராமரிப்புச்செலவாக தலைக்குமாதம்முப்பது ரூபாய் வீதம் அரசால் இப்பள்ளிக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் ரூ. 10 ஆயிரத்திற்கு மேல் தரப்படுகிறது.



துணி வெட்டவும் தைக்கவும் பயிற்சி

புதிதாக வரும் குழந்தைகள் எந்த அள விற்குக் கேட்கும் சக்தி உடையவர்களாக இருக்கிறார்கள் என ஆரம்பத்திலேயே பரி சோதித்துக் கொள்கிறார்கள்.

குழந்தைகள் சேர்க்கப்பட்ட பிறகு, அவர்களுடைய திருத்தமான பேச்சை அவர் களே கவனிப்பதற்காக இங்கே ஒருவகைக் கருவியைப் பயன்படுத்துகிறார்கள். பேச்சுத் திறனறிய உதவும் கண்ணாடியும் இத்துடன் பொருத்தப்பட்டுள்ளது.

இதன் முன்னால் ஒலியுணர்வு பாதிக்கப் பட்ட குழந்தையை உட்கார வைத்து ஆசிரியை பேசிக்காட்டுவார். அவரது வாயசைவைக் கண்ணாடியில் பார்க்கிற குழந்தை, தானும் அவ்வாறே உதட்டை அசைத்துப் பேசப்பழகு கிறது.

இந்தக் கருவியோடு உள்ள அழுத்த விளக் கின் (Stress Lamp) மூலம் ,பிள்ளைகள் தங்களது பேச்சிலுள்ள அழுத்த வேறுபாட்டை யுணர முடிகிறது. வல்லின, மெல்லின,

## பார்வையற்றோர் பள்ளி

சிறுமலர் பள்ளியின் மற்றொரு அங்க மாக விளங்குகிறது பார்வையற்றோர் பள்ளி. பத்தாம் வகுப்பு வரை உள்ள இந்தப் பள்ளி யிலும் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே படிக்கிறார்கள்.

சகோதரி லியா அவர்கள் இந்தப் பள்ளி யின் தலைமை ஆசிரியையாக இருந்து வரு கிறார். சரியாக-ஆண் பெண் இருபாலருமாக 158 பேர் படிக்கும் இந்தப் பள்ளியில் உள்ள ஆசிரியைகளின் எண்ணிக்கை 24 ஆகும். இசைப்பயிற்சி அளிக்க ராஜசேகரன் என்கிற தனி ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கி றார்.

பிரய்லி முறைப்படியே பாடங்கள் இங்கே நடத்தப்படுகின்றன.

செவி கேளாதோர்க்குப் போலவே இவர் களுக்கும் விளையாட்டுப் பயிற்சி அளிக்கப் படுவது உண்டு.

நடுத்தர வயதைக் கடந்த பார்வையற் றோருக்கு எனத் தனியே இங்கு ஒரு பணி



ஆசிரியர் பயிற்சி வகுப்பு



விஞ்ஞான வகுப்பு

இடையின உச்சரிப்பைக் கவனப்படுத்திக் கொள்ள இந்தப் பயிற்சி உதவும்.

## இன்னும் பல இங்குண்டு!

மனைஇயல் பிரிவு, சாரண சாரணியர் இயக்கம், தட்டெழுத்துப் பயிற்சி, எம்பிராய் டரி மூலம் கண்ணைப் பறிக்கும் வண்ணப் பூக்களை வகையுறப் பின்னும் பயிற்சி, பாத அணிகளைப் பாங்குறத் தயாரிக்கும் பயிற்சி துணி வெட்டுதல், தைத்தல் ஆகியவற்றில் பயிற்சி எல்லாம் இந்த மேல்நிலைப் பள்ளியில் மேம்பட அளிக்கப்படுகிறது.

வெளியார் பலர் தங்களுடைய துணிகளில் எம்பிராய்டரி பூவேலை செய்வதற்காக இங்கே விலை உயர்ந்த துணிகளைக் கொடுப்பதுண்டு.

வெளியார் நிறுவனங்கள் மூலம் பாத அணி களின் மேல் பகுதிகள் அமைத்துத்தரும்படி தோல் கொண்டு வந்து தருவதுண்டு. இந்தப் பணிகளுக்காகவெல்லாம் வேலைக்குத் தக்க படி இங்கே பணம் வசூலிக்கப்படுகிறது. அந்தப் பணத்தில் அவ்வப்பணிகளில் ஈடு பட்டவர்களுக்குத் தகுந்தபடி கூலியும் தரப் படுகிறது.

மனை-தொழிற்கூடம் வைத்திருக்கிறார்கள். நெசவுத் தொழிலும் கற்பிக்கப்படுகிறது.

இங்கே நெய்யப்படும் போர்வை, வேட்டி, துண்டு போன்றவைகள் தகுந்த விலைக்கு வெளியே விற்கப்படுகின்றன.

இப்படிப் பலவகையிலும் உடல் ஊன முற்றோர்க்கு உதவி வருகிறது 'சிறுமலர்பள்ளி' (Little Flower convent) அதன் இனிய தொண்டு இன்னும் சிறக்கட்டும்!



ஒலியுணர்வின் அளவறிதல்

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

**13—2—81**

சமையல் எண்ணை பற்றாக் குறையைத் தீர்க்கும் வகையில் ரூ. 6 கோடி செலவில் எண்ணெண உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கா.காளிமுத்து அவர்கள் தெரிவித்தார்.

**14—2—81**

1979-'80ல் கடல் அரிப்பைத் தடுக்க ரூ. 2 கோடி செலவு செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளதாக மாண்புமிகு பொதுப்பணி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ்.என். இராசேந்திரன் அவர்கள்சட்ட மேலவையில் கூறினார்.

**15—2—81**

புதுக்கோட்டை, தஞ்சாவூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் பருவநிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தமிழக அரசு ரூ. 1 கோடியே 6 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது என்று மாண்புமிகு வரு வாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.

**16—2—81**

சென்னை நகருக்கு வரும் சுற்றுலாப் பய ணிகளுக்கு ரூ. 1 கோடி செலவில் நவீன ஓட்டல் ஒன்றைக் கட்ட தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது. என்று சுற்றுலா வளர்ச்சி கழகத் தலைவர் திரு துரை. கோவிந்தராசன் அவர்கள் கூறினார்.

**17—2—81**

மதுரை மாவட்டம் தேனி அருகே கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே ரூ. 7 இலட்சம் செலவில் கட்டப்பட்ட பாலத்தை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு கா. இராசா முகம்மது அவர்கள் திறந்து வைத்தார்.

**18—2—81**

தமிழ்நாட்டில் 1980-'81ஆம் ஆண்டில் 120 ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்ற தீர்மானிக்கப்பட் டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள் ளது.

தமிழகத்தில் பல்வேறு நகராட்சிகளில் குடிநீர், சாக்கடைத் திட்டங்களைநிறை வேற்ற ரூ. 83 கோடி கடன் அளிக்க உலகவங்கி சம்மதித்துள்ளது என்று குடி நீர் வடிகால் வாரியத் தலைவர் திரு. ஈ.ஆர். கிருஷ்ணன் அவர்கள் தெரிவித் தார்.



**20—2—81**

தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியங் களில் செயல்படுத்தபபடும் தன்னி றைவுத் திட்டம் நகராட்சிகளுக்கும் விரி வுபடுத்தப்படும் என்று மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்தார்.

**21—2—81**

தொழில் தகராறு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறுவாணி அணை கட்டும் பணிகள் மீண்டும் துவக்கப்பட் டுள்ளன.

**22—2—81**

தமிழக முதல்வர் வேண்டுகோளுக் கிணங்க சேதுசமுத்திரத் திட்டம் பற்றி ஆராய மத்திய அரசு, நிபுணர் குழு ஒன்றை அமைத்துள்ளது.

நிதிநீர் பங்கீடு சம்பந்தமாகத் தமிழக முதல்வரும், கேரள முதல்வரும் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் அரசு அலுவலர்களும் கொச்சியில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

**23—2—81**

கலப்பு மணம் செய்து கொள்வோருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது இதற்குப் பதிலாக தாலிக்குத் தங்கம் வழங்க அரசு பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச் சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர் கள் தெரிவித்தார்.

தொகுப்பு — மருது

## 24—2—81

ரூ. 41 கோடி உலக வங்கி உதவியுடன் பெரியாறு-வைகை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் பணியினை உலக வங்கித் திட்ட இயக்குநர் திரு நல்விச் பார்வையிட்டார்.

## 25—2—81

தமிழ்நாட்டின் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் மைய அரசு ஒரு ஆயிரம் டன் அரிசியும், ரூ. 8 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளது.

முதல்வர் வேண்டுகோளுக்கு இணங்க அண்ணாசாலையில் உள்ள சென்னை மாவட்ட மத்திய நூலகத்திற்கு ''தேவநேயப் பாவாணர் மாவட்ட மத்திய நூலகம்'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் குடிநீர் பஞ்சத்தைப் போக்க ரூ. 50 இலட்சம் செலவிடப்படும் என்று குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு ஈ.ஆர். கிருஷ்ணன் அவர்கள் தெரிவித்தார்.

## 26—2—81

பூர்வீகமாக உள்ள பழங்குடியினருக்கு பட்டா வழங்குவதில் முன்னுரிமை தரப்படும் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் கூறினார்.

கல்லூரிகளில் ராக்கிங் செய்பவர்கள்மீது தீவிர நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம்அவர்கள் கூறினார்.

## 27—2—81

தமிழ்நாடு அரசு நடத்தும் பரிசுச் சீட்டில் 1979—'80 ஆம் ஆண்டில் ரூ. 1,64,34,818 அரசுக்கு வருமானமாகக் கிடைத்துள்ளது என்று மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார். மேலும் மாதம் இருமுறை பரிசுச்சீட்டு குலுக்கல் பற்றி அரசு பரிசீலித்துவருவதாகவும் கூறினார்.

## 28—2—81

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பேத்துவார சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டம் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் கூறினார்.



பீகார் மாநில வருவாய் மற்றும் நிலச்சீர் திருத்த அமைச்சர் திரு லாட்டன் சௌத்ரி அவர்கள், மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்களுடன் 17-2-81 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் நிலச்சீர்திருத்தம் செயற்படுத்துதல், கைப்பற்று நிலங்களை ஒருங்கிணைத்தல், வருவாய் ஆவணங்களைப் பராமரித்தல் போன்ற பொருள்கள்பற்றி அளவளாவினார்.

# மலைவாழ் மக்கள்

## வாழ்வு வளம் பெற....



அ. இராஜமாணிக்கம்,
செய்தி-மக்கள் தொடர்பு
அலுவலர்,
(பெரியார் மாவட்டம்)

பெரியார் மாவட்டத்தில் மொத்த மக்கள் தொகையில் 2,82,254 பேர் தாழ்த்தப்பட்டவர்களும் 9,055 பேர் மலைவாழ் பழங்குடி மக்களும் உள்ளனர்.

இம் மாவட்டத்தில் நான்கு ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் அரசு கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இவைகள் பூலப்பாளையம், சொக்கநாத மழையூர், சி.எஸ். காலனி மற்றும் அந்தியூர் காலனி ஆகிய இடங்களில் உள்ளன. இவற்றில் மொத்தம் 314 மாணவ, மாணவியர் பயிலுகின்றனர். இந்த நான்கு பள்ளிகளிலும் பயிலும் மாணவ மாணவியருக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது.

மலைவாழ் பழங்குடி மக்களுக்காக ஆசனூர், பெஜலட்டி, கெத்தேசால், குதியாலத்தூர், தாளவாடி மற்றும் பர்கூர் ஆகிய 6 இடங்களில் தங்கிப் படிக்கும் பள்ளிகள் உள்ளன. இங்கு பயிலும் மாணவ மாணவியருக்கு இலவசக் கல்வியும், தங்கும் இடங்களும், சாப்பாட்டு வசதியும் செய்து கொடுக்கப்படுகின்றன. இவை அனைத்தும் அரசு கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. இங்கு மொத்தம் 509 மாணவ மாணவியர் பயிலுகின்றனர். 1979-80-ஆம் ஆண்டு இப்பள்ளிகளின் பராமரிப்பிற்காக ரூ. 1.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்காக 1980 டிசம்பர் திங்கள் முடிய ரூ. 1.61 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடி மக்கள் மாணவர்களின் நலனுக்காக ஆதிதிராவிட நலத்துறை, விடுதிகளை நடத்தி வருகிறது. இம் மாவட்டத்தில் மாணவர்களுக்காக 11 விடுதிகளும், மாணவிகளுக்காக 6 விடுதிகளும் நடத்தப்படுகின்றன. இவற்றில் 5 விடுதிகள் அரசு கட்டிடங்களிலும் 12 விடுதிகள் தனியார் கட்டிடங்களிலும் நடத்தப்படுகின்றன. இவை ஈரோடு, பவானி, சத்தியமங்கலம், தாராபுரம், கவுந்தப்பாடி, அந்தியூர், பளியமபட்டி, தாளவாடி, கொடுமுடி, நம்பியூர் ஆகிய இடங்களில் நடத்தப்படுகின்றன. இதில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு சீருடை, பாடப்புத்தகங்கள் மற்றும் உணவு ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்படுகிறது. 1979-80ஆம் ஆண்டில் ரூ. 1.71 இலட்சமும், 1980-81ஆம் ஆண்டில் 1980 டிசம்பர் திங்கள்முடிய ரூ. 2.38 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளன.

இம் மாவட்டத்தில் தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 50 மாணவர்களைக்கொண்ட ஒரு சமுதாயக் கூடம் தளவாய்ப் பட்டணத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக 1980-81 ஆம் ஆண்டில் 0.16 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. கோபியில் அரசு உதவி பெறும் விடுதி ஒன்று உள்ளது. இதில் 107 ஆதிதிராவிட மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 37,450, 1980-81ஆம் ஆண்டில் ரூபாய் 22,740- உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி, தொழில் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடி மக்களின் மாணவ மாணவியர்களுக்கு அரசின் உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் 1979-80ஆம் ஆண்டில் 914 மாணவர்களுக்கு 1.38 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1980-81ஆம் ஆண்டிற்கு முதல் தவணையாக 1209 மாணவர்களுக்கு 4.69 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

1979-80ஆம் ஆண்டில் 813 எழுது பலகைகளும், 3558 நோட்டு புத்தகங்களும் நலப்பள்ளிகளுக்கும் மற்றும் தங்கிப் பயிலும் அரசு பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றிய மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்கள் 13250 பேருக்கு 1.87 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 88,831 பாட புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர அரசால் நடத்தப்படும் நலப்பள்ளிகள் மற்றும் தங்கிப் பயிலும் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள மாணவ மாணவியர்கள் 654 பேருக்கு 5,231 ரூபாய் மதிப்புள்ள 2272 பாடப்புத்தகங்கள் 1980-81ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டுள்ளன.

விடுதியில் தங்கி உள்ளவர்களுக்குஆண்டுக்கு இருமுறை தீபாவளிக்கும், பொங்கலுக்கும் இலவசமாக இத் துறையினரால் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 63,032 ரூபாய் மதிப்பீட்டில் விடுதியில் வசிக்கும் மாணவர்கள் மற்றும் நலப்பள்ளி மாணவர்கள் 1,685 பேருக்கு சீருடைகள் வழங்கப்பட்டன.

பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு விவசாயப் பணியினை மேற்கொள்ளும்பொருட்டு பாசனக் கிணறு தோண்டுவதற்கும் மற்றும் ஒரு ஜோடி மாடு வாங்குவதற்கும் மானியம் வழங்கப்படுகின்றன. 1979-80 ஆம் ஆண்டிற்காக இரண்டு பேருக்கு ரூபாய் 6,337 கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு தன்னுடைய பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதற்காக பெட்டிக்கடை ஆரம்பிப்பதற்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. 1979-80ஆம் ஆண்டில் வட்டியில்லாக் கடனாக ரூபாய் 6,275 வழங்கப்பட்டுள்ளது.

கையகப்படுத்தப்பட்ட பட்டா நிலத்திலிருந்து ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா இலவசமாக வழங்கப்படுகிறது. 1979-80ஆம் ஆண்டில் 1.65 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 398 வீட்டு மனைகள் கையகப்படுத்தப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1980-81ஆம் ஆண்டிற்காக 7.24 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 2,264 வீட்டுமனைகள் கையகப் படுத்தப்படுள்ளன.

1979-80ஆம் ஆண்டில் சினைமேடு, நல்லாம்பட்டி, தளக்கொலும்பு, ராசன்குளம், மோளக் கவுண்டன்வலசு, தித்தம்பாளையம் மற்றும் ஜி.டி.நாயுடு குடியிருப்பு ஆகிய ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலும் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பீட்டில் தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க செலவிடப்பட்டுள்ளது.

அந்தியூர் வட்டாரம் மலைவாழ் பழங்குடி மக்கள் வாழுகின்ற பகுதியாகிய காக்கயனூர் ஆதிதிராவிடக் குடியிருப்புக்கு புதிய குடிதண்ணீர் கிணறுவெட்டுவதற்காக ரூபாய் 10,000- ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆண்டு இந்த குடிதண்ணீர் கிணறுவேலை பூர்த்தி செய்யும் பொருட்டு மேலும் ரூபாய் 5,000 கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1980-81ஆம் ஆண்டில் குடிதண்ணீர் கிணறுகள் தோண்டுவதற்காக ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டது. காத்தாங்கிணர், சண்டிக்காட்டுவலசு, காசிமாநகர், கொல்லவலசு மற்றும் கருமாண்டி செல்லிபாளையம்ஆகிய ஆதிதிராவிட குடியிருப்புகளில் குடிதண்ணீர்க் கிணறு தோண்டுவதற்காக ஏற்கனவே வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் ரூபாய் 85,500- செலவிடப்பட்டுள்ளது.

சின்னக்கவுண்டன்வலசு மீனாட்சிபுரம் ,பாரதிநகர் ஆகிய ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் மேலும் புதிய மூன்று குடிதண்ணீர்க் கிணறுகள் ரூபாய் 21,000- மதிப்பீட்டில் தோண்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் பெஜலட்டி பழங்குடியினர் பகுதியில் ரூபாய் 7,000/- மதிப்பீட்டில் ஒரு புதிய கிணறு தோண்ட அனுமதி வழங்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

ஆதி திராவிடர் குடியிருப்புகளில் இணைப்புச் சாலைகள் போடுதல், கல்வெட்டுகள் கட்டுதல், வடிகால் அமைத்தல், தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற பணிகளுக்காக 1979-80ஆம் ஆண்டில் ரூபாய் 60,000- ஒதுக்கப்பட்டது.

குட்டப்பாளையம், லட்சுமிபுரம், கோட்டைமேடு, காசிமா நகர் ஆகிய இடங்களில் உள்ள இடங்களில் உள்ள ஆதிதிராவிட குடியிருப்புகளில் இணைப்புச் சாலைகள் போடுவதற்காக ரூ. 10,210 செலவிடப்பட்டது.

மீனாட்சிபுரம், திருமுருகன் மலவாதபுரம், காரமடைபுதூர், வெட்டயம்பாளையம், சென்னிவலசு ஆகிய இடங்களில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு தடுப்புச் சுவர் கட்டுவதற்காக ரூபாய் 24,909- செலவிடப்பட்டது. நல்லிகவுண்டன்வலசு ஆதி திராவிடர் குடியிருப்பில் கல்வெர்ட் கட்டுவதற்காக ரூபாய் 5000- செலவிடப்பட்டது.

நல்லியகவுண்டன்வலசு, குள்ளப்பாளையம், காரமடைபுதூர் வெள்ளயம்பாளையம் ஆகியஆதி திராவிடர் குடியிருப்பில் வடிகால் அமைக்க ரூபாய் 19873- செலவிடப்பட்டது.

கோட்டமேடு, அத்திக்காட்டூர் வடக்குத்தெரு, அத்திக்காட்டூர் தெற்குத்தெரு ஆகிய ஆதி திராவிடர் குடியிருப்பில் நடைபாதை அமைக்கவும் கல்வெர்ட் கட்டவும் ரூபாய் 11,300 மதிப்பீட்டில் 1980-81ஆம் ஆண்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இது தவிர பி. மேட்டுப்பாளையம், நல்லாம்பட்டி, பாண்டியம்பாளையம், அத்திக்காட்டூர், கோட்டை மேடு, தொப்பம்பாளையம், மாராயிபாளையம், குமிளாம்பரப்பு, வேட்டுவபாளையம், லட்சுமிபுரம், நத்தக்காடையூர், ரெங்கநாதபுரம், வெட்டையம்பாளையம், காரமடைபுதூர் ஆகிய ஆதிதிராவிடர் குடியிருப்பில் அடிப்படைத் தேவைக்கான நடைபாதை, கல்வெர்ட்டு கட்டுதல், தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற 14 திட்டங்கள் ரூபாய் 1,19,700- மதிப்பீட்டில் இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

சொக்கநாத மழையூர் ஆதி திராவிடர் குடியிருப்பில் உள்ள நலப்பள்ளி வருடாந்திர புதுப்பித்தலுக்காக 1979-80ல் ஒதுக்கப்பட்ட ரூபாய் 5,000-ல் 4,263 செலவு செய்யப்பட்டது.

அநதியூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு மற்றும் கெட்டிசமுத்திரம் ஆதிதிராவிடர் குடியிருப்பு ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகள் 1980-81ஆம் ஆண்டு வருடாந்திர செப்பனிடும் பணி ரூபாய் 7,000 மதிப்பீட்டில் செய்யப்பட்டது. பெஜ்ஜாலபட்டி மற்றும் கெத்தேசால் ஆகிய இடங்களில் உள்ள பழங்குடி மக்கள் தங்கிப் படிக்கும் பள்ளிகளில் வருடாந்திர செப்பனிடும் பணி ரூபாய் 5,400 மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.



இம்மாவட்டத்தில் காங்கயம் மற்றும் சத்தியமங்கலம் வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டத்தை செயல்படுத்த 1980-81 ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஐந்து இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் காங்கயம் வட்டாரத்தில் ஒன்பது கிணறுகளும், சத்தி வட்டாரத்தில் இருபதுகிணறுகளும் வெட்ட ரூபாய் 32,900- மதிப்பிடப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ரூபாய் 66,000 மதிப்பீட்டில் அடிப்படை தேவைகளான நடைபாதைகள், கல்வெர்ட்டுகள் கட்டுதல் போன்ற வேலைகள்நடைபெற்று வருகின்றன. சத்தி வட்டாரத்தில் மயானத்திற்கு நடைபாதை போடுவதற்கு ரூபாய் 5,000 வழங்கப்பட்டுள்ளது. சத்தி வட்டாரம் குத்தியாலத்தூர் பழங்குடியினர் பகுதியில் உள்ள பள்ளியில் கூடுதல் மற்றும் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 100000 வழங்கப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இலவசமாக ஆதிதிராவிட மற்றும் பழங்குடியில் உள்ள தொழில் தகுதி பெற்ற சலவையாளர், தச்சர், தையற்காரர், தோல்தைப்போர், செருப்புத் தைப்போர் மற்றும் நாவிதர் போன்றவர்கள் அவர்களின் தொழிலை மேற்கொள்ளும் பொருட்டு இலவசமாகக் கருவிகள் வழங்கப்பட்டன.

எனவே தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள தீவிர திட்டங்களின் பயனாக 1979-80 மற்றும் 1980-81ஆம் ஆண்டில் 930 ஆதி திராவிட மற்றும் மலைவாழ் பழங்குடி மாணவ மாணவியர் கல்வி கற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் குடிதண்ணீர் வசதிகள் செய்தும், நடைபாதைகள், இணைப்புச் சாலைகள் அமைத்தும், கல்வெர்ட்டுகள் கட்டியும், தடுப்புச் சுவர்கள் மற்றும் வடிகால்கள் அமைத்தும் கொடுக்கப்பட்டதன் பயன்களை இம்மாவட்ட ஆதிதிராவிட மக்கள் நன்கு அனுபவித்து வருகின்றனர்.

(8 - ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அரசு முதல் கட்டமாக வட ஆர்க்காடு, புதுக்கோட்டை, தருமபுரி, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, சேலம், மதுரை ஆகிய 9 மாவட்டங்களுக்கு 4 கோடியே, 30 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய், குடிநீர்ப் பணிகளுக்காகச் செலவு செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

பெரும்பாலான உறுப்பினர்கள், இந்தத் தொகை போதாது என்று தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். தற்சமயம் உள்ள நிலைமைகளுக்கு ஏற்றவாறு, முதல் கட்டமாக, இந்தத் தொகையை, அரசு அனுமதி வழங்கியுள்ளது. வரும் கோடை மாதங்களில், நிலைமைக்கு ஏற்றவாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்புகின்ற அறிக்கைகளைப் பரிசீலனை செய்து, தேவைக்கு ஏற்றவாறு அரசு நிதி அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆழ் கிணறு துளைக் கருவிகள் பற்றாது

பல மாவட்டங்களில், ஆழ் கிணறு தோண்டுவதற்கு வேண்டிய கருவிகள் போதாது என்று, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளார்கள்.

தற்சமயம் குடிநீர் வடிகால் வாரியம், நிலமட்ட நீர்த் துறை, விவசாயப் பொறியியல் துறை இவைகள் மொத்தம் 47 ஆழ் கிணறு, துளைக் கருவிகளைப் பயன்படுத்தி வருகின்றன. இதைத் தவிர விவசாயப் பொறியியல் துறை இவைகளும் இன்று குடிநீர்வசதி ஏற்படுத்த செயல்படுகின்றன.

இதற்கு மேலும், தேவைப்படுகிற ஆழ் கிணறு தோண்டுவதற்குரிய கருவிகளை மற்ற மாவட்டங்களிலிருந்து பெறுவதற்கும், தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுப்பதற்கும், மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

## பராமரிப்பு சரிவர இல்லை

பல இடங்களில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், விசைப்பம்புகள், கைப்பம்புகள், பழுதடைந்துள்ளதாக, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளார்கள். மாவட்டம் தோறும், பழுதடைந்துள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், கைப்பம்புகள், விசைப் பம்புகள் யாவையும், இம்மாதம் (மார்ச்-81) 15-ஆம் தேதிக்குள் சரி செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

## வரி தள்ளுபடி

சில உறுப்பினர்கள், விவசாயிகளுக்கு, வரி தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கடன் ஒத்தி வைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். தற்சமயம் வட ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தென் ஆர்க்காடு ஆகிய மாவட்ட விவசாயிகளுக்கு வரி தள்ளுபடியை அரசு ஏற்கெனவே அறிவித்துவிட்டது.

மற்ற மாவட்டங்களுக்கு வரி தள்ளுபடியும், கடன் ஒத்தி வைப்பும் தேவையா என்பதைப் பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையைப் பரிசீலனை செய்து, அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

## புதுப்பித்தல்

பழைய ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவற்றை ஆழப்படுத்துவதும், தூர் எடுத்தல் போன்ற வேலைகளை வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் விரைவு படுத்தப்படும்.

## வறட்சிப் பகுதிகளாக அறிவித்தல்

மாநிலம் முழுவதையும், வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். வறட்சிப் பிரதேசமாக அறிவித்தால் மட்டும் வறட்சி குறைந்துவிடாது. வறட்சி நிவாரணப் பணிகளைச் சீராகவும், தீவிரமாகவும் செய்வதுதான் முக்கியம். இதை, இந்த அரசு நிச்சயமாக-திறமையாகச் செய்யும்.

வறட்சி நிலைமையைச் சமாளிக்க எந்தெந்த பணிகளை மேற்கொள்ள வேண்டுமோ அவைகள் செய்யப்பட்டு வருகின்றன. தொடர்ந்து செய்யப்படும் வறட்சிப் பகுதி என்று அறிவித்தால் எந்தச் சலுகையோ, அந்தச் சலுகைகளை, அரசு முறையாகச் செய்யும். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பொதுவான கருத்துக்களுக்கு இதுவரையிலும் பதில் அளித்தேன். குறிப்பிட்ட சில உறுப்பினர்களின் பேச்சுக்கும், தனியாகப் பதிலளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு என். பலராமன் (இ.தே.கா.(இ)), திரு என். வரதராசன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), திரு எஸ். சிவசாமி (கம்யூனிஸ்ட்), திரு கே.ஆர்.சின்னராசு (அ.இ.அ.தி.மு.க.)ஆகியோர் மலிவு விலைக்கடைகள் சரியாக இயங்கவில்லை, வேண்டிய உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வேண்டும் என்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வேண்டும் என்பதை மறுக்க முடியாது. நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக உள்ள அமுதம் அங்காடிகளிலும், கூட்டுறவுத் துறை மூலம் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுக் கடைகளிலும், உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களும் தட்டுப்பாடின்றிக் கிடைக்க ஆவன செய்யும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு என். வரதராசன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), திரு கே.ஆர். சின்னராசு (அ.இ.அ.தி.மு.க) வறட்சியின் காரணமாக சில இடங்களில் மாட்டுத் தீவனம் கிடைக்கவில்லை என்ற கேள்விக்கு இதை அரசு பரிவுடன் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## எடுக்கப்பட இருக்கின்ற நடவடிக்கைகள்

(1) குடிநீர்ப் பணிகளைப் பொறுத்தவரை, தேவைப்பட்ட அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, குடிநீர் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் துறை, பொதுப்பணி நிலத்

குடிநீர்ப்பிரிவுத் துறை, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்படும். தேவையான இயந்திரங்கள் வெளிமாநிலங்களிலிருந்தும் வரவழைக்கப்படும். கைப்பம்புகள், மின் பம்புகள் போன்றவை சரிவர இயங்குவதற்குக் குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிப்புப்பணிகள் தீவிரப்படுத்தப்படும்.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

28-2-81 வரை குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள மேல் நிலை நீர்த் தேக்கத்தொட்டிகள் 9,588 பழுதில் உள்ளவை 483ம் இன்னும் மாநிலம் முழுவதும் எடுத்துக் கொள்ளப் படாத 842ம் இம்மாத இறுதிக்குள் (31.3.81 தேதிக்குள்) பழுதில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் அனைத்தும் பயன்படுத்தத் தக்கவைகளாகச் செய்யப்படும்.

குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் 50 அடிக்கு மேல் ஆழமுள்ள கைப் பம்புகள் (28.2.81) வரை எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| பராமரிப்பில் உள்ள கைப் பம்புகள் | ... | 22,056 |
| பழுதில் உள்ள கைப் பம்புகள் | ... | 947 |

இம்மாத இறுதிக்குள் (31.3.1981) பழுதில் உள்ள 50 அடிக்கு மேல் ஆழமுள்ள கைப் பம்புகள் அனைத்தும் பழுதுபார்க்கப்பட்டு, பயன்படுத்தத் தக்கவைகளாகச் செய்யப்படும்.

குடிநீர் வடிகால் வாரியம், தற்பொழுது பராமரிப்பிற்காக, 100 கைப் பம்புகளுக்கு ஒரு பொருத்துநர் (பிட்டர்) வீதம் 234 பொருத்துநர்களை நியமித்துள்ளது.

வறட்சிநிலையை ஒட்டி தீவிரமாகப் பம்புகள் பராமரிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன், கூடுதலாக, ஊராட்சி ஒன்றியங்களில், 132 பொருத்துநர்கள் நியமிக்கப்படுவார்கள்.

1,000 கைப் பம்புகளுக்கு ஒரு நடமாடும் பராமரிப்புக் குழு வீதம், 17 நடமாடும் பராமரிப்புக் குழுக்கள் இயங்கி வருகின்றன.

மேலும், 1,000 கைப்பம்புகளுக்கு ஒரு நடமாடும் பராமரிப்புக் குழு என்பதற்குப் பதிலாக, 500 கைப்பம்புகளுக்கு ஒரு குழு ஏற்படுத்தப்படும்.

அவற்றில் 10 ஊர்திகள், யூனிசெஃப் (ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிறுவனம்) வழங்கப்பட்டு, மாநிலத்திற்கு வந்து சேர்ந்து விட்டன. மீதமுள்ள 12 ஊர்திகள், நம் மாநிலத்திலேயே தயார் செய்யப்படும். மொத்தமாக, 22 கூடுதல் ஊர்திகள் நடமாடும் பராமரிப்புக் குழுக்களாக இயங்கும்.

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளைப் பொறுத்தவரை, பராமரிப்புக்காக, 100 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு ஒரு மின் இணைப்பாளர் என்ற விகிதத்தில், 108 இணைப்பாளர்கள் பணியாற்றுகின்றனர். 1,000 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு ஒன்று வீதம், 15 நடமாடும் பராமரிப்புக் குழுக்கள் உள்ளன. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளின் பராமரிப்பைத் தீவிரப்படுத்த, 4 நடமாடும் பராமரிப்புக் குழுக்கள் கூடுதலாக நியமிக்கப்படும்.

மின் விசைப் பம்புகள் (பவர் பம்ப்ஸ்) பழுதடைந்தால், சீர் செய்வதற்குக் காலதாமதம் ஆகும் என்பதற்காக, பழுதடைந்த மின் விசைப் பம்புகளை எடுத்துவிட்டு உடனடியாக வேறு மின் விசைப் பம்புகள் பொருத்தப்படும், இதற்காக, எல்லாப் பகுதிகளிலும், உபரியாக, 10 சதவிகிதம் மின்விசைப் பம்புகள் உபரியாக வைக்கப்பட்டுள்ளது.

கைப்பம்புகள் பழுதடைந்தால், உடனடியாகச் சீர் செய்வதற்கு வேண்டிய உபரிப்



# வறட்சி நிவாரணப் பணிகளுக்கு தமிழக அரசு வகுத்த செயல் முறைகள்

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகள் துரிதமாக, ஒழுங்காக நடைபெறச் செயல் முறைகளைத் தமிழக அரசு வகுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில், நிவாரணப் பணிகள் செம்மையாகவும், விரைவாகவும் நடைபெறும் பொருட்டு, பொதுமக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்கள் பரிந்துரைகளை வழங்கிட வாய்ப்பு அளிக்கும் வகையில், ஒவ்வொரு பாதிக்கப்பட்ட பகுதியிலும் ஒரு வட்டக் குழுவையும் மாவட்டஅளவில் ஒரு குழுவையும் உடனடியாக அமைப்பதற்குஅரசு உத்தரவிட்டுள்ளது.

வட்டக் குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கிய மக்கள் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

மாவட்டக் குழுவிலும், சட்டமன்றஉறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இக்குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் உடனடியாக அமைக்கப்படும். கோட்டாட்சியர் வட்டக் குழுவின் கூட்டங்களைக் கூட்டவும் நடத்தவும் செய்வார். மாவட்டக் குழுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை வகிப்பார்.

இக் குழுக்களின் உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் குழுக் கூட்டங்களில் தெரிவிப்பதோடு, நிவாரணத்திற்குத் தேவையான, தற்காலிக, மற்றும் நிரந்தரமான நடவடிக்கைகள் பற்றியும், கோட்டாட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

இது தவிர, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்தந்த மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்குத் தேவையான எல்லாப் பணிகளையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து தேவையான நிதிக்கு ஒப்புதல் பெற்றுச் செயல்படுத்த வேண்டும்.

நிவாரணப் பணிகளை உன்னிப்பாகவும், திறமையாகவும் மேற்பார்வையிடும் வகையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் துணை ஆட்சியர் பதவிக்குக் குறைவில்லாத அதிகாரி ஒருவர் பொறுப்பாக நியமிக்கப்படுவார். பணிகளை இவர் மேற்பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களோடு தொடர்பு கொண்டு, பணிகளை மேற்பார்வை செய்து ஒழுங்காகவும் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் முடிப்பதற்கும் பொறுப்பாக இருப்பார். பணிகளின் முன்னேற்றம் பற்றிய விவரங்களைத் தயாரித்து அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்ற உயர் அதிகாரிகளுக்கும் கொடுப்பதற்கு இவர் தயார் நிலையில் இருப்பார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளோடு தொடர்புகொண்டு வேலைகளின் முன்னேற்றத்தை உறுதிசெய்து வருவார்.

பாகங்கள் தேவையான அளவுக்கு வாங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய குடிநீர் வசதி வேலைகளைத் துரிதப்படுத்துவதற்காக, குடிநீர் வடிகால் வாரியத்தில், கூடுதலாகக் கோட்டங்களும், உப கோட்டங்களும் (டிவிஷன் சப்-டிவிஷன்ஸ்) புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

| மாவட்டம் | கோட்டம் | உப கோட்டம் |
|---|---|---|
| வடஆர்க்காடு | 1 | 3 |
| தென் ஆர்க்காடு | — | 2 |
| தர்மபுரி | — | 2 |
| சேலம் | — | 2 |
| தஞ்சாவூர் | — | 1 |
| திருச்சிராப்பள்ளி | — | 3 |
| புதுக்கோட்டை | — | 2 |
| | 1 | 15 |

வறட்சி நிவாரணப் பணிகளின் தேவைக்காக, ஆழ் கிணறு தோண்டுவதற்கு வேண்டிய இயந்திரங்களை வெளி மாநிலங்கள் நமது தேவைக்குத் தருவதற்கு, மத்திய அரசு சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்குப் பரிந்துரை செய்யுமாறு மத்திய அரசை 15 தினங்களுக்கு முன்னர், தமிழக அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

**நிலத்தடி நீர்த்துறை**

| | |
|---|---|
| பயன்படுத்தக்கூடிய குழாய்க் கிணறுகள் விவரங்கள்: குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை ... | 720 |
| பயன்படுத்தக் கொடுத்த குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை ... | 267 |
| பயன்படுத்தக் கொடுக்க வேண்டிய குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை | 453 |



இம்மாத இறுதிக்குள் (31.3.1981), 453 குழாய்க் கிணறுகளும் பயன்படுத்தக் கொடுக்கப்படும்.

**மின்சார வாரியம்**

| | |
|---|---|
| மின் இணைப்புக் கேட்டு, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கும், நிலமட்டநீர்த் தொட்டிகளுக்கும் வந்த மனுக்களின் எண்ணிக்கை ... | 6,829 |
| மின் இணைப்புப் பெற்றவை ... | 5,833 |
| மின் இணைப்புப் பெறவேண்டியவை இம்மாத இறுதிக்குள்(31.3.1981) | 996 |

மீதமுள்ள 996 மனுக்களுக்கும், மின் இணைப்பு கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**மின்வாரியத்தின் பணிகள்**

| | |
|---|---|
| மின் இணைப்புக் கொடுக்கப்பட்டவை | 5,833 |
| 31.3.1981க்குள் இணைப்புப் பெற இருப்பவை ... | 996 |
| 15.4.1981-க்குள் இணைப்புப் பெற இருப்பவை | 1,300 |
| மொத்தம் | 2,296 |

**முன் ஏற்பாடு**

வறட்சிப் பகுதிகளில், மின் இணைப்புக் கொடுப்பதற்கு, மின் வாரியத்தில் உள்ள எல்லாக்களப் பணியாளர்களையும் ஈடுபடுத்துவது (பீஃல்டு ஸ்டாப்)—

இந்தப் பணிக்குத் தேவையான பொருட்களைச் சிறப்பான முறையில், தேவையான அளவுக்கு அளிப்பதில் முன்னுரிமை (பிரையாரிட்டி) அளித்தல்.—

தேவையான பொருட்களை அதிகமாக உள்ள இடத்திலிருந்து வறட்சிப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்தல், இந்தப் பணிகளுக்காக மின் வாரியம் தனது விதிமுறைகளைக் கீழ்க் கண்டவாறு தளர்த்தி உள்ளது!

மின் கம்பித் தொடர்கள் முன்கூட்டியே மனுவைப் பெற்ற உடனே போடுதல், மின் இணைப்புக்குத் தேவையான ஷெட்டுகள் கட்டத் தாமதமானாலும், இணைப்புகள் கொடுக்கப்படும். மின் இணைப்புக்குக் கட்ட வேண்டிய செலவுத் தொகையைக் கட்டத் தாமதமானாலும், முன்வைப்புத் தொகை கட்டத் தாமதமானாலும், ஒப்பந்தம் செய்து கொள்ள காலத் தாமதமானாலும் மின் இணைப்புக் கொடுக்கப்படும்.

**மின்இணைப்பு**

1. மார்ச் மாத முடிவிற்குள், குடிநீர்த்தொட்டிகள் அனைத்துக்கும் மின் வாரியத்தால் மின் இணைப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். 1981-82ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் அமலாக்கப்பட உள்ள வட்டாரங்களில் இந்த ஆண்டே குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. தேவையானால் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கோ அல்லது நீரில்லாத இடத்திற்கு நீர் எடுத்துச் செல்லவோ, வீதிகளில் மக்களுக்கு நீர் வழங்கவோ வசதிகளை ஏற்படுத்த, லாரிகள் வண்டிகள் போன்றவை மட்டுமல்லாமல், உழைக்கும் மக்களையும் பயன்படுத்தி ஊதியமளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

**தேசிய வேலை வாய்ப்புத் திட்டம்**

3. பாதிக்கப்பட்ட இடங்களுக்கு முதலிடம் கொடுத்து தேசிய வேலை வாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் ஆகியவற்றின் மூலம் வேலைவாய்ப்புக்கு வகை செய்யும் பணிகள் தீவிரப்படுத்தப்படும். அதற்காக கணிசமான அளவு அரிசி ஒதுக்கப்படும். மத்திய அரசு 1981-82ஆம் ஆண்டில் தேவையான அரிசி ஒதுக்கும் வரை, வேலை வாய்ப்புக்களைத் தொடர்ந்து கொடுக்க தனியாக நிதி ஒதுக்கப்படும்.

**அரிசி ஒதுக்கீடு**

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட அரிசி, 32,250 டன்கள் பின்வருமாறு:

மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கும் விவரம்:

| | | டன் |
|---|---|---|
| 1. | வட ஆர்க்காடு | 9,500 |
| 2. | இராமநாதபுரம் | 4,500 |
| 3. | சேலம் | 4,000 |
| 4. | தருமபுரி | 3,950 |
| 5. | தென் ஆர்க்காடு | 2,000 |
| 6. | திருச்சிராப்பள்ளி | 1,500 |
| 7. | தஞ்சாவூர் | 1,300 |
| 8. | மதுரை | 1,000 |
| 9. | புதுக்கோட்டை | 1,000 |
| 10. | செங்கல்பட்டு | 1,000 |
| 11. | கன்னியாகுமரி | 500 |
| 12. | திருநெல்வேலி | 500 |
| 13. | கோயம்புத்தூர் | 500 |
| 14. | பெரியார் | 500 |
| 15. | நீலகிரி | 500 |
| | மொத்தம் | 32,250 |

4. வேலை தேடி வெளியூர் செல்லும் மக்கள் வறட்சிப் பகுதிகளில், அடித்தள மக்களுக்கும், ஏனைய வசதியற்றவர்களுக்கும், வேலை தேடி வெளியூர் செல்கிற நிலைமை ஏற்படும்பொழுதும் அவரவர் கிராமங்களிலேயே வேலைகளைக் கொடுத்து, உணவு வசதி செய்து தர வழி வகை செய்யப்படும். இதற்கென அரிசி ஒதுக்கப்படும். மாவட்ட ஆட்சித்

தலைவர் ஊவராட்சி ஒன்றியங்கள் மூலமாக இப்பணியை மேற்கொள்வார்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விசேஷ அதிகாரம்**

5. மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்கள் பல்வேறு வறட்சிப் பணிகளை நேரிடையாக மேற்பார்வையிடுவார். பணிகளைத் தீவிரப் படுத்தவும் பொறுப்பு எடுத்துக் கொள்வார். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தேவைப் பட்ட நிதி வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இந்த நிதியைச் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஒதுக்கி பணிகளின் முன்னேற் றத்தை அவ்வப்போது ஆய்வு செய்வார்கள்.

**திறமையான கண்காணிப்பு**

6. வறட்சிப் பணிகளைத் திறமையாகக் கண்காணிப்பதற்குப் பாதிக்கப்பட்ட இடங் களை பல பகுதிகளாகப் பிரித்து கோட்ட ஆட் சிச் தலைர்கள், கோட்ட வளர்ச்சி அதிகாரி கள் மாவட்ட வருவாய் அதிகாரிகள் ஆகியோர் களுக்குக் குறிப்பிட்ட பகுதிகள் ஒதுக்கப்படும். சமபந்தப்பட்ட பகுதிகளில் நடைபெறும் பல்வேறு துறைகளின் சேவை வாய்ப்புப் பணி கள் இவர்களுடைய மேற்பார்வையின் கீழ் வரும்.

**மக்கள் குழு**

7. பாதிக்கப்பட்ட பகுதிகளில் வறட்சிப் பணிகளுக்கு ஒத்துழைக்க முன்வரும் மக்கள் பிரதிநிதிகள், அனைத்துக் கட்சியினர் ஆகி யோர் கொண்ட குழுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அமைப்பார்கள் வறட்சிப் பணிகளைப் பார்வையிட்டு, மக்க ளின் தேவைகளையும், கோரிக்கைகளையும், வறட்சியால் ஏற்படக்கூடிய பிரச்சினை களையும்; மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்து பரிந்துரை செய்தல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து நட வடிக்கை எடுப்பார்கள்.

**மாவட்டக் குழு**

8. அனைத்துக் கட்சியினரும் பங்கு கொள்ளும் மேல் மட்டக் குழு ஒன்றும் மாவட்ட அளவில் அமைக்கப்படும்.

**ஒப்பந்தக்காரர்கள் மூலமாக வேலைகள் செய்யக் கூடாது**

9. வறட்சிப் பணிகளை ஒப்பந்தக்காரர் களிடம் கொடுக்காமல் அந்தந்தப் பகுதிகளில் பயனடையும் மக்களிடமே ஒப்படைக்க உத் தரவுகள் பிறப்பிக்கப்படும். தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் இப்பணிகளில் ஈடுபடுத் தப்படும்.

**ஒத்துழைப்பு**

10. அரசு மேற்கொண்டுள்ள பணி களுக்கு ஆதரவு கொடுத்து மக்களுடைய தேவைகளை அறிந்து அரசுக்குச் சிரிய பரிந் துரைகளை வழங்கி வறட்சிப் பகுதிகளில் உள்ள மக்களுக்குத் துயர் தீர்க்கும் வகையில் அரசு தனது பொறுப்பைச் செவ்வனே முழு மையாக நிறைவேற்ற ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



# சட்டமன்றப் பேரவையில் திரட்டிய செய்திகள்

= மருதம் =

முதற்கட்டமாக தன்னிறைவுத் திட்டம் 69 ஊராட்சி ஒன்றியங்களில் செயற்படுத்தப் பட்டு வருகிறது. 1981-82இல் இதை மேலும் 120 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத் தப்படும். மீதமுள்ள ஊராட்சி ஒன்றியங் களில் அடுத்துவரும் ஆண்டுகளில் இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். எடுத்துக் கொண்ட 69 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் 31.3.81க்குள் நிறைவேற்றி முடிக்கப்பட்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

சமூகநலத் துறையின் கீழ் பணிபுரிதும் பாலசேவிகாக்களுக்கும் ஆயாக்களுக்கும் சம் பளத்தை உயர்த்தும் குறிப்பு ஒருநபர் குழு வின் (One Man Commission) ஆய்வில் உள் ளது. குழுவின் அறிக்கை பெறப்பட்ட பின் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் சமூகநலத்துறை அமைச்சர் கூறினார்.

நகரப் பேருந்துகள் அதிகபட்ச செல்லும் தூரம் 25.5 கிலோ மீட்டர் சென்றிருப்பதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்ற மக்க ளின் கோரிக்கையை ஏற்று 30 கிலோ மீட் டர் வரை அதிகப்படுத்தப்பட்டுள்ளது என்று

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

குமரி முனையின் அருகில் உள்ள பழம் பெரும் நாகரீக சிறப்பை எடுத்துக் காட்டும் வட்டக்கோட்டை 6.2.81ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி மத்திய அரசின் தொல்பொருள் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனை மீண்டும் திரும்பப் பெற மாநில அரசு முடிவெடுத்துள்ளது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

குடும்பநல அறுவைச் சிகிச்சையின் விளைவாக இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பங்களுக்கு அரசு இழப்பாக ரூ. 5,000-க்கு மேற்படாமல் உதவித்தொகை வழங்குகிறது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

தென்னார்க்காடு, வடஆர்க்காடு, சேலம், தர்மபுரி, கோவை, பெரியார், நீலகிரி, மதுரை திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பொதுத்துறையில் மூங்கில் 8,660 எக்டேரில் பயிரிடப்படுகிறது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவாக நஞ்சை அல்லது புஞ்சை நிலத்தினை சொந்தமாகவோ அல்லது குத்தகைக்கு எடுத்தோ விவசாயம் செய்யும் சிறு விவசாயிகளிடம் 31.3.80 அன்று நிலுவையிலிருந்த நடுத்தர கால மாற்றுக் கடன்களை வட்டி அபராத வட்டியுடன் அரசே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பித்தர முடிவு செய்து ரூ. 42 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. மேற்சொன்ன வகைக் கடன்களை சிறுவிவசாயிகள் 1.7.75க்கு பின் சங்கங்களுக்கு திருப்பிச் செலுத்தியிருந்தால் அத்தொகையை அவர்களிடமிருந்து 1981-82ல் வரவேண்டிய எந்த வித நிலுவைக் கடனுக்கு எதிராக வரவு வைக்கப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்று மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

திருச்சி நகருக்கு குடிநீர் வசதியை விரிவுபடுத்த முதல்கட்டமாக 130 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக ரூ. 161.30 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

மதுரை மாநகரின் குடிநீர் பற்றாக்குறையினைப் போக்க ரூ. 302.26 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன, என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

சென்னை குடிநீர் வசதியைப் பெருக்க, திருச்சி மாவட்டம் சட்டளைப் பகுதியிலிருந்து காவிரி நதி நீரை கொண்டுவரும் திட்டத்திற்கு அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

| | |
|---|---|
| கட்டளைப்பகுதியிலிருந்து செம்பரம்பாக்கம் வரை நீர் கொண்டு வர | 1, ரூ. 203 கோடி (தலைமைப் பொறியாளர் நீர்ப்பாசன மதிப்பீடு) |
| | 2, ரூ. 259 கோடி (உலக வங்கி மதிப்பீடு முறையில்). |

செம்பரம்பாக்கத்திலிருந்து சென்னை நகருக்கு நீரை, சுத்திகரித்து, கொண்டுவர ரூ. 200 கோடி வரை செலவாகும் என்றும் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கூறினார்.

பெரியார் மாவட்டம், சித்தோட்டில் நிறுவ உத்தேசித்துள்ள பால் பவுடர் தொழிற்சாலை மார்ச்சு அல்லது ஏப்ரல் மாதத்தில் செயல்படத் துவங்கும். இந்த தொழிற்சாலை மூலம் சுமார் 200 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் அருகில் உள்ள 250 கிராமங்களில் உள்ள 3000 விவசாயிகள் பால்உற்பத்தி மூலம் நிரந்தர வருமானமும் பெற வாய்ப்புள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

சந்தன மரங்கள், ''ஸ்பைக்'' என்ற வியாதியால் ஓரளவுக்கு பாதிக்கப்படுகிறது. இந்த வியாதியைப் பற்றிய தன்மைகளைக் கண்டறியவும் இதனைக் கட்டுப்படுத்தவும் பெங்களூரிலுள்ள சந்தன மர ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சி செய்து வருகிறது. இந்த ஆராய்ச்சிக்கு வேண்டிய உதவிகளை அரசு அளித்து வருகிறது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

அம்மைக்குத்தும் சுகாதாரப் பணியாளர்களை எட்டு ஆண்டுகள் பணியாற்றிய பிறகு தான் பணி ஒழுங்கு செய்யப்படுகிறது. தற்போது இம்முறையினை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள நகரங்களில் பால் விநியோகத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் கூறினார்.



# அண்ணா பெயரில் அரியதோர் மருத்துவ மனை

பி.எல். ஆர்

மருத்துவமே இல்லை என்கிற அளவில் தன் வேகத்தைக் காட்டி மரணத்தின் கோரப்பிடிக்குள் சிலரையோ பலரையோ ஆட்படுத்தும் அபாயகரமான ஒன்றே புற்றுநோய். அந்த நோய்க்குச் சிகிச்சையே கிடையாதா என்றால்-உண்டு! நோயின் முதற்கட்டத்திலேயே அதுகண்டு பிடிக்கப்படுமானால், அடியோடு அதனை நீக்கிவிட முடியும்.

மருத்துவத் துறை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் அந்த அளவுக்கு முன்னேறியுள்ளது.

**அண்ணாவின் கனவு**

தமிழகம் அத்தகைய மருத்துவ வசதியைப் பெற்றாக வேண்டும் என்கிற எண்ணம் பேரறிஞர் அண்ணா அவர்களின் நெஞ்சிலே வேர்விட்டது. புற்று நோயால் வருந்தும் மக்கள் தக்க மருத்துவ வசதி பெற்றிடும் பொருட்டு மருத்துவமனை ஒன்றினைக் கட்டவேண்டும் என அமரர் அண்ணா அவர்கள் பெரிதும் விரும்பினார்கள்.

அந்த அடிப்படையில் புற்று நோய் பற்றி ஆராய்ந்திடவும், நோய்த்தடுப்பு வசதிகள் கிராமாந்தர மக்களுக்குக் கிட்டவும் மருத்துவமனையொன்று நிறுவப் படவேண்டும் என்ற எண்ணம் - கோரிக்கை உலக நல நிறுவனத்தாரால் (WHO) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழகத்தில் அவ்வாறான மருத்துவமனையை எங்கே நிறுவுவது என்ற வினா எழுந்தபோது நாடெங்கும் பரவலாக ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வின் முடிவில் அதற்கேற்ற நகரம் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் மக்கள் எண்ணிக்கை உள்ள காஞ்சிபுரமே எனத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அந்நகரில் புற்றுநோய் மருத்துவமனையை நிறுவுவதற்கான உலக நல நிறுவனம் மத்திய அரசு, தமிழக அரசு ஆகியோரிடையேயான ஒப்பந்தமும் திட்டச் செயற்பாட்டு முறையும் 11—11—1968 ஆம் ஆண்டில் கையெழுத்தாகியது. உருவாக்கப் பணி 23.3.1969 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

புற்றுநோய் தோன்றிட முக்கியக் காரணங்களான நிலைமைகளை ஆராய்ந்து மருத்துவவசதி செய்தல்; முறையான ஆய்வு நடத்தி போதுமான பின் நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்குப்பணி புரிதல்; இளம் மருத்துவர்களை மிகத் தேர்ந்தவர்களாகப் பயிற்றுவித்தல் ஆகிய நோக்கங்களோடு நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனை 1.3.1981 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்துவைக்கப் பட்டது.

புற்று நோயினைத் தோன்றிய அளவோடு மேலும் வளராமல் கட்டுப்படுத்துதல், நோய்வாய்ப் பட்டிருக்கும் நோயாளிகளைக் கண்டுபிடித்தல், நோய்க்கான மூலகாரணத்தைக் கண்டறிதல், புற்றுநோய்க் கட்டுப்பாடு குறித்த பணியில் ஈடுபடும் மருத்துவ உதவியாளர்களைப் பயிற்றுவித்தல் ஆகிய முக்கியப் பணிகளையும் மேற்கொண்டுள்ள இந்த மருத்துவமனைக்கு 'அரசினர் அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனை' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**திறப்பு விழா**

இந்த மருத்துவமனை திறப்பு விழா நிகழ்ச்சிக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு, எச்.வி. ஹண்டே அவர்கள் தலைமை தாங்கினார்.

1970-80ஆம் ஆண்டு வரை இந்த மருத்துவமனைக்கான செலவு ரூ. 6,23,622 ஆக அதிகரித்துள்ளது. நார்வே நாட்டிலிருந்து உலக நல நிறுவனம் மூலம் 'அரசினர் அறிஞர் அண்ணா

அட்டைப் படக் கட்டுரை



மனைக்கான கட்டடம், வியத்நகு வெளிநாட்டுக் கருவிகள் ஆகிய வற்றுக்காக ரூ. 11 இலட்சமும், மானியமாக ரூ. 1.5 இலட்சமும் ஒவ்வோர் ஆண்டுக்கும் என ஐந் தாண்டுகளுக்குக் கிடைக்கும்.

ஒவ்வோர் ஆண்டும் 20 சத வீதம் இந்த நிதி உதவியில் குறைக்கப்பட்டுவரும்.

உலக நல நிறுவனத்தைச் (WHO) சேர்ந்த உயர் மருத் துவ அதிகாரியொருவர் ஓராண் டுக்கு இந்த மருத்துவமனையில் பணி புரிவார். இது மட்டுமல்ல; புற்றுநோய் மருத்துவ நிபுணர் களும் அயல்நாட்டிலிருந்து அவ் வப்போது இம்மருத்துவமனைக்கு வருகை தருவார்கள்.

காஞ்சிபுரம், காரப்பேட்டை யில், பெங்களூர் நெடுஞ்சாலை யில் அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனை தொடக்கவிழா 1.3.81 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

நுண்ணறிவியல் மருத்துவப் பிரிவை உலக நல நிறுவன வட் டார ஆலோசகர் டாக்டர் எம். தங்கவேல் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார்.

தீவிர சிகிச்சைப் பிரிவை, மாண்புமிகு தமிழக அரசினு டைய சிறப்புப் பிரதிநிதி திரு. மா. முத்துச்சாமி அவர்கள் திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

மருத்துவ மனை கட்டட அமைப்பு பற்றிய அறிக்கையைத் தலைமைப் பொறியாளர் திரு. பி. ஜெயபாலன் அவர்களும் - மருத்துவமனை அறிக்கையை அரசினர் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவ மனை இயக்குநர் டாக்டர் ஜி. சவுடப்பா அவர்களும் படித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. மோகனரங்கம், திரு. அன் பரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழா முடிவில்—

பல்வேறு பணிகளுக்கு அதிகக் கடனுதவி அளித்த பாரதஸ்டேட் பாங்க், இந்தியன் வங்கி, சிண்டி கேட் பாங்க், இந்தியன் ஓவர் சீயாஸ் பாங்க் ஆகியவற்றிற்குப் பரிசுகளும், -உடல் ஊனமுற் றோர்க்குக் கருவிகளும், குடும்ப நலநிதி, முதியோர் உதவித் தொகை போன்றவைகளும் மாண்புமிகு முதல்வர் அவர் களால் வழங்கப்பட்டன.

மருத்துவ மனைக்கென அரிமா சங்கம் உட்படத் தனியார் சில ரும் அளித்த வானொலிப்பெட்டி, தொலைக் காட்சிப் பெட்டி, சுவர்க்கடிகாரம் போன்ற பொருட்கள் ஒப்படைக்கப்பட் டன.

விழா முடிவில் டாக்டர் ஜி. நாராயணன் நன்றி கூறினார்.

அரசினர் அறிஞர் அண்ணா நினைவு மருத்துவமனையில்— புற்றுநோய் பற்றிய மருத்துவத்



தில் அயலநாட்டில் பயிற்சி பெற்ற மருத்துவர்களும் பணி புரிவார்கள்.

மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் ஞானதேசிகன் வரவேற் புரையாற்றினார்.

## முதல்வர் திறந்து வைத்தார்

மருத்துவ மனைக் கட்டி டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கேற்றி வைத்துத் திறந்து வைத்த பின்னர் செவிலி யர் விடுதிக் கட்டடத்தை தொகுதி சட்டமன்ற உறுப்பி னர் வெங்கடசுப்பிரமணியம் திறந்து வைத்தார்.

அமரர் அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி இராணி அம்மையார் அவர்களும் பங் கேற்ற இந்த விழாவில் சட்ட மன்ற உறுப்பினர்களும் மேலவை உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

அரசினர் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவ மனையைத் திறந்துவைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மருத்துவமனை முழுவதையும் சுற்றிப்பார்த்தார். புற்றுநோ யால் பீடிக்கப்பட்டு, அனுமதிக் கப்பட்டிருந்தவர்களை அணுகி நலம் விசாரித்தார்.

சின்னஞ்சிறு வயதினர்க்கான புற்றுநோய் மருத்துவம், உடற் கூறு மருத்துவம், புள்ளிவிவர யியல், உதட்டுப் புற்றுநோய், கதிரியக்கம், அறுவை, மயக்க நிலையில் வைத்திருத்தல், பொது மருத்துவம், பல்மருத்துவம், இரத்தச் சேமிப்பு, நுண்ணுயி ரியல்-ஆய்வுக்கூடம் ஆகிய பன்னி ரண்டு பிரிவுகள் இப்போது இந்த மருத்துவமனையில் இயங்கிவரு கின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.